Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24

දිනමුරසු වාරමලර්

ரூபா 30.00

டிசம்பர் 20-26, 2012

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 993

# தமிழ்த் தேசியத்தின் தலைமைத் துரோகி சம்மந்தன்





## ரஜினி உதிர்த்த முத்துக்கள்!

## தூதுவர்கள் வருகையும் தொடரும் முயற்சிகளும்





நத்தார் பண்டிகையைக் கொண்டாடும் வாசக நெஞ்சங்களுக்கு முரசு குடும்பத்தின் இனிய வாழ்த்துக்கள்!

## ஆனைமுகன் துதி

அதிகாலை வேளைகளில் அவரவர் தங்கள் குலதெய்வங்களைப் பூஜித்து வழிபட்டு வந்தாலும், மூத்தவனாம் விநாயகப் பெருமானை வழிபடுபவர்களுக்கான ஆனைமுகன் துதி ஒன்று உள்ளது. இந்தத் துதியானது துன்பங்களை நீக்கி இன்பங்களை அருளச் செய்யும் எனக் கூறப்படுகிறது.

ப்ராத: ஸ்மராமி கணநாத மனாத பந்தும், ஸிந்தூர பூர்ண பரிசோபித கண்ட யுக்மம், உத்தண்ட விக்ன பரிகண்டன சண்ட தண்டம், ஆகண்டலாதி ஸுர நாயக, ப்ருந்த வந்த்யம்!

ப்ராதர் நமாமி, சதுரானன வந்த்ய மானம், இச்சானுகூல மகிலம்ச வரம் ததானம், தம் துந்திலம், த்விரஸ நாகி பயஞ்ஜ ஸுத்ரம், புத்ரம், விலாஸ சதுரம், சிவயோ:சிவாய!

ப்ராதர் பஜாலம்ப பயதம் நிஜபக்த சோக, தாவானலம், ஸுரவரம், வரகுஞ்ச ஜாஸ்யம், அக்ஞான கானன, வினாசன, ஹவ்யவாஹம், உத்ஸாக வர்த்தனமஹம், ஸுதமீஸ்வரய்ய!

-அனந்த நாராயணன், கைவேலி.

## ஆன்மீகம்

## வேதம் கூறும் விளக்கம்

இன்றைய வாழ்வியலில் "நல்லதுக்குக் காலமில்லை..." என நான்கு பேர் சில வேளைகளில் உரைத்துவிட்டுச் செல்வதை நாம் பார்க்கக் கூடியதாக இருக்கிறது. காரணம் அக்கிரமம் மிகுதியாகிக் கொண்டிருக்கும்போது அன்பு தணிந்து போய்விடுகிறது.

இந்த அன்பு உணர்வானது தணிந்து செல்கையில் ஆங்காங்கே அக்கிரமங்கள் மிதமிஞ்சி தலை விரித்தாடுவதையும் நாம் காணக் கூடியதாக இருக்கிறது. இந்த அக்கிரமங்களைப் புரிவோர் தெய்வபயம் அற்றவர்களாக, நீதிக்குத் தலை வணங்காதவர்களாக, மனச்சாட்சி அற்றவர்களாக நம்மைச்சுற்றி வலம் வரும்போது நாம் எமது கையாலாகத்தனத்தை நினைத்து கவலைப்படுகின்றோம்.

ஆனால், இக்கவலை நிரந்தரமல்ல! ஏனெனில், "தீமை செய்வோரைக் கண்டு மனம் புழுங்காதே; பொல்லாங்கு செய்வோரைக் கண்டு பொறாமைப்படாதே; ஏனெனில், அவர்கள் புல்லைப் போல் விரைவில் உலர்ந்து போவர் (சங்கீதம் -37:1,2)" என வேதம் கூறுகிறது.

சாமுவேல், புதுக்குடியிருப்பு.

## பிரார்த்தனையின் பிரதிபலன்

இவ்வுலகத்தோடு மிக நெருக்கமான தொடர்பு வைத்திருப்பவர்கள் மனிதர்கள். இவர்கள் ஈமான் கொள்கின்றபோது மறைவானவற்றை நம்ப வேண்டிய கட்டாய கடமைக்கு ஆளாகின்றனர். அல்லாஹ் அல்குர் ஆனின் ஆரம்ப வசனங்களிலேயே கூறுகின்றான்.

"அலிப்லாம் மீம். அது வேத நூலாகும். அதில் சந்தேகமில்லை. அது பயபக்தியுடையவர்களுக்கு நேர்வழி காட்டும் அவர்கள் யாரென்றால் மறைவானவற்றை விசுவாசம் கொள்வார்கள்.

அல்பகரா: 01-03

ஆம். நாம் இதற்குப் பிரார்த்தனைகளை மேற்கொள்ளலாம். இவைகள் எம்மை அல்லாஹ்விடம் தொடர்பு கொள்ளச் செய்யும்.

நம்பிக்கையோடு நாம் செய்யும் பிரார்த்தனைகள் பலமடைந்து மறைவானவற்றின் மீது நம்மை நம்பிக்கை கொள்ளச் செய்யும். பிரார்த்தனைகளில் ஒன்று பின்வருமாறு அமைகிறது.

உள்ளங்களைத் திருப்பிவிடுகின்ற அல்லாஹ்வே! எங்களது உள்ளங்களை உன்னை வழிப்படுத்தலின் பால் திருப்பிவிடுவாயாக. இந்தப் பிரார்த்தனை எங்களுடைய உள்ளங்களில் ஆதிக்கம் செலுத்துபவன் அல்லாஹ் என்பதை எமக்கு உணர்த்துகிறது அல்லவா? இது எமது பிரார்த்தனையின் பிரதிபலன்.

எம்.சீ. கலீல், கல்முனை - 05.

## கவிதைப்போட்டி இல 990



### வஞ்சிக்காதீர்

கண்ணில்லாதவன் நான்
கண்களோடு
இதயமும் உள்ளவர்கள்
நீங்கள்.
உங்கள் எடையை
நீங்களே பார்த்துவிட்டு
எரிந்துகொண்டிருக்கும்
என் வயிற்றுப் பசிபோக்க
வஞ்சிக்காது
'ஆதரவுதாருங்கள்'.

அ.சந்தியாகோ
கண்டி.

பாராட்டுக்குரியது

### நம்பிக்கை மூச்சு!

யார் கையையும் நம்பாது
நம்பிக்கை மூச்சை
திறவுகோலாக்கி
தளர்வினை
போக்கி நம்பிக்கை மூச்சே என
மாற்று வலுவுள்ளவனாய்
வாழும் உறவே என் வாழ்த்து.

முல்லையூர்,
பரணி




## கவிதைப் போட்டி இல 993



சன்னத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 31.12.2012

கவிதைப் போட்டி இல. 993 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### நம்பிக்கை

கண்களுக்கு சக்தி
இல்லை என்றாலும்
கைகளின் சக்தியைக் கொண்டு
சரித்திரம் படைக்கப் போகிறான்
இந்தச் சாதனை மனிதன்
ஒரு கையில் உழைப்பு
மறு கையில் அழைப்பு
இதுதான் இவனுக்கு
வாழ்க்கைக்கு ஒத்துழைப்பு.

ஏ.ஆர்.நவாஸ்,
கிண்ணியா.

### தெய்வம்

பார்வை இழந்த கண்கள்
தடையாக இருந்தாலும்
வீதியோரமாக நடந்து
மக்களின் எடையைக் கணித்து
பணம் உழைக்கும் தோழனே!
செய்யும் தொழில்
தெய்வம் என்பதை
இந்த சமுதாயம்
ஏற்றுக் கொள்ளாதா?

வீ.அருள்ராசா,
கொம்மாந்துறை.

### தன்னம்பிக்கை

கண் பார்வை இழந்தாலும்
வெண்பிரம்பு கைக் கொண்டு
சொந்தமாய் தொழில் புரிந்து
தன் வாழ்க்கைச் சுமை போக்க
புறப்பட்ட முதியவருக்கு
தன்னம்பிக்கையே துணை.

கு.விஜிதன்
குமுளமுனை.



### உங்களுக்குள் நான்

நான்
பார்க்க முடியாத
எடையை
நீங்களேனும் பார்க்கிறீர்களே!
அதற்காகவேனும்
சற்று இரங்கலாமல்லவா?

க.கௌதமி, கரவெட்டி

## உங்கள் பக்கம்

### குன்றும் குழியுமாக அட்டகிரி வீதி

நவாலி வடக்கு, மானிப்பாய் என்னும் பிரதேசத்தில் அமைந்துள்ள அட்டகிரி என்னும் ஆலயத்திற்குச் செல்லுகின்ற வீதியானது கடந்த ஒன்றரை ஆண்டு காலமாக மோசமான நிலையில் பாதிப்படைந்து காணப்படுகின்ற போதும் இதுவரை எவ்விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

குன்றும் குழியுமாக பயணம் செய்ய முடியாத அவல நிலையில் காணப்படுகின்ற இவ் வீதியூடாகத் தினமும் நூற்றுக்கணக்கான கிராமவாசிகள் எமது அத்தியாவசியத் தேவைகளுக்காக இவ்வீதியைப் பயன்படுத்துகின்றனர்.

இவ்வீதிச் சீரின்மை காரணமாக குறித்த பகுதியில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவதும் அவதானிக்கப்படுகின்றது.

இவ்வீதியைப் புனரமைப்புச் செய்துதருமாறு பல்வேறு தரப்புக்களுக்கும் பல தடவைகள் கிராமவாசிகளால் முறைப்பாடு செய்யப்பட்ட போதிலும் இதுவரையும் எவ்வித பயனும் கிடைக்கவில்லை.


எனவே, இந்த அவலத்தை முரசின் உங்கள் பக்கம் பார்வைக்குச் சமர்ப்பிக்கின்றேன்.

இனிமேலாவது உரிய அதிகாரிகள் குறித்த விடயத்தில் தமது கவனத்தைச் செலுத்தி இவ் வீதியினைப் புனரமைப்புச் செய்துதர வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

கிராம நலன்விரும்பி
(பாடசாலை மாணவி)


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலை நகல்
(Fax): 0212221811
ஈ-மெயில்:
(E-mail):-
thinamurasu@live.com
விளம்பரத் தொடர்புகளுக்கு:-
0212220188


## வாசகர் சாலை



### அறிவுலகம்

வருடத்தில் மாதங்கள் பன்னிரண்டு
மாதங்களில் வரும் வாரங்கள் நான்கு
அல்லது ஐந்து ஆகலாம்
இது வகுத்தவர் நியதி
ஆனால் வாரத்தில் மட்டும் ஒரே ஒரு
வியாழன் வருவது தினமுரசுக்காக
அன்பைக் கொடுத்தால்
ஆலயத்தில் இறைவனைக்காணலாம்
பண்போடு முரசைப் படித்தால்
அறிவுலகத்தைக் காணலாம்.

வீ.அருள்ராஜா, கொம்மாந்துறை.

அன்பின் முரசே!
அஞ்சாமல் நீ தரும்
அறுசுவை அத்தனையும்
அளவில்லா அருஞ்சுவையே என
அன்புடன் வாழ்த்துகின்றேன்"

ஆர்.சர்மிலா–
புப்போகம்.

### எங்கும் உன்புகழ்

அன்பின் முரசுக்கு, உன் வரவை எதிர்பார்த்திருக்கும் ஆயிரமாயிரம் அபிமானிகளில் நானும் ஒருவன். இடையில் பல வாரமலர் தவறிவிட்டதால் உன் தொடர் ஆக்கங்கள் முழுமையாகப் பார்க்க முடியவில்லை. உன் பெருமை இலங்கையில் பரந்து வெளிநாடுகளிலும்தான். பத்து வருடங்களுக்குமுன் நான் ஜேர்மன் சென்றிருந்தேன். அங்குவாழ் யாழ். அன்பர் ஒருவர் தினமுரசைத் தன் இடத்தில் இருந்து சுமார் 25 கி.மீற்றர் தூரம் சென்று பெறவேண்டிய இருந்தது என்றால் என்ன ஆர்வம் அவருக்கு.

ஆ.கெங்காசலம்– மகிழூர்முனை.

### தனித்துவம்

தாங்களின் தினமுரசு வாரமலர்.
தினமலராகவே வருவது மகிழ்ச்சி
அளிக்கின்றது. கடவுளின்
கருணை கிட்டுமாக!
நாட்டுப்பிரச்சினைகளை
யதார்த்தபூர்வமாக அலசி
ஆராய்ந்து வெளியிடும் பாங்கு
தனிமையானது! இனி
மையானது. தலையங்கங்கள்
தனித்துவப் போக்கில்
அமைந்துள்ளன.

எம்.இஷான்.தர்ஹாநகர்.

நித்தம் என்னைப்
பித்தங்கொள்ள வைக்கும் உன்
அமைப்பே தனி அழகு! வாரம் தோறும்
நீ சுமந்து வரும் அனைத்தும் சூப்பர்.
உன்னை எத்தனை முறை
பார்த்தாலும் சலிப்பதில்லை.
என் இருவிழியே உன்னை
ஒரு கணமும் பாராமல்
இருப்பதில்லை.

எஸ்.கே முஹமட்- நாஹு ஓயா.

# வீதியோர வியாபாரிகளுக்கு எதிராக நடவடிக்கை



## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

அத்துமீறிய வியாபாரச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற பாதையோர வர்த்தகர்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் யாழ்.வர்த்தகர்களுக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற வர்த்தக சமூகத்தினருடனான சந்திப்பின்போது தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டபோது அவர்களுக்குச் சொந்தமாக இருந்த வர்த்தக நிலையங்கள் மீண்டும் அவர்களிடமே திருப்பி வழங்கப்பட வேண்டும் என்றும், குறிப்பிட்ட விடயம் தொடர்பில் நேர்மையானதும், நியாயமானதுமான முறையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

## பாம்புகள் எச்சரிக்கின்றன?

மட்டக்களப்பு கல்லடிப் பாலத்தின் கீழுள்ள வாவியில் பெருந்தொகையான பாம்புகள் படையெடுக்க ஆரம்பித்துள்ளதாக மட்டக்களப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த பாம்புகள் ஒவ்வொன்றும் இரண்டு, மூன்று அல்லது நான்கு அடி நீளமானவைகளாக காணப்பட்டன. இதற்கு முன்னரும் 2004ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தம் ஏற்படுவதற்கு முன்னர் இவ்வாறு கல்லடிப் பாலத்தில் பெருந்தொகையான பாம்புகள் படையெடுத்தன. இந்த ஆண்டு ஏற்பட்ட பாரிய வெள்ள அனர்த்தத்திற்கு முன்னரும் இவ்வாறு கல்லடிப் பாலத்திற்கு கீழும் பெருந்தொகையான பாம்புகள் படையெடுத்துமை குறிப்பிடத்தக்கதாகும்.

## அரச வாகனங்களுக்கு அரச முத்திரை

அனைத்து அரச வாகனங்களுக்கும் அரசாங்க முத்திரை கட்டாயம் ஒட்டப்பட்டிருக்க வேண்டுமென அரச நிர்வாக மற்றும் உள்நாட்டு அமைச்சர் டபிள்யூ. டி. ஜே. செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான சுற்றறிக்கை சகல அரசாங்க நிலையங்களுக்கும், மாவட்ட செயலாளர் காரியாலயத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். அரசாங்க வாகனங்களை பொறுப்பின்றி பயன்படுத்துதல் மற்றும் சாரதிகள் அசாதாரண முறையில் வாகனங்களை பயன்படுத்துதல் தொடர்பில் பல்வேறுபட்ட பிரதேசங்களிலும் இருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. அந்த முறைப்பாட்டினை அடுத்தே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## தீயில் கருகி மூவர் பலி

இரத்மலானையில் ஏற்பட்ட தீ விபத்தில் தாயும் அவரது இரு பிள்ளைகளும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். இரத்மலானை ஹுல்தேமுல்லை பகுதியிலுள்ள வீடொன்றிலேயே இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. வீட்டில் தீ பரவியதையடுத்து தீ அணைப்பு படையினர் ஸ்தலத்திற்குச் சென்று தீயை அணைக்க முற்பட்ட போதிலும் இந்த மூவரும் தீயில் சிக்கி உயிரிழந்துள்ளனர்.

## மண்சரிவில் மூவர் பலி

நாட்டில் பரவலாக பெய்து வருகின்ற மழை காரணமாக பசறை கோணக்கல எனுமிடத்தில் இடம்பெற்ற மண்சரிவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பலியாகியுள்ளனர். குறித்த குடும்பத்தினரது வீட்டின்மீது மண் திட்டு சரிந்து விழுந்ததிலேயே தந்தை மற்றும் அவருடைய குழந்தைகள் இருவரும் பலியாகியிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# —உள்ளூராட்சி மன்றங்கள்— அரசுடன் கைகோர்த்து இயங்கவேண்டும்

## எம். சந்திரகுமார் எம்.பி



உள்ளூராட்சி மன்றங்கள் அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் அரசுடன் கைகோர்த்து இயங்கவேண்டும் அப்போதுதான் மக்களுக்கு உண்மையான பணி செய்ததாக அமையும் என பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிக்கோட் திட்டத்தின் கீழ் 85 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட புதிய நூலகக் கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்களுக்கு தாங்களாகவே செயற்படுவதற்கான வருமானங்கள் இல்லை. இதனால் அவை முழுமையாக அரசினால் வழங்கப்படுகின்ற நிதிகளை பெற்றே தங்களுடைய செயற்பாடுகளை முன்னெடுத்துவருகிறது.

பிரதேச சபைகளுக்குச் சொந்தமான சந்தைகள், வீதிகள், உள்ளிட்ட உட்கட்டுமான பணிகள் எல்லாம் அரசின் திட்டங்களுக்கு ஊடாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளன, மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே அரசியல்ரீதியான கருத்து வேறுபாடுகளை ஒருபுறம் வைத்துவிட்டு மக்களினதும் பிரதேசங்களினதும் நலன்களை கருத்தில் எடுத்து அரசுடன் கைகோர்த்து செயற்பட வேண்டிய தேவை உள்ளது எனக் குறிப்பிட்ட பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் தாமும் தொடர்ந்தும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு தம்மாலான எல்லா உதவிகளையும் மேற்கொள்ளவதாகவும் தெரிவித்தார்

# தமிழ் மக்களின் காதில் பூச்சுற்றும் போராட்டம்

**சாங்கர சிவன்**

**தமிழ்** மக்களுக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்வதால் போராட்டத்தை விரிவுபடுத்தப் போவதாக மாவை சேனாதிராசா கூறுகின்றார். இதுவரை இவர்களின் போராட்டம் தலைவர்களுக்கு நேரம் கிடைக்கும் வேளைகளில் ஏதாவதொரு பொதுஇடத்தில் ஆர்ப்பாட்டம் செய்வதும் அந்த ஆர்ப்பாட்டத்தின்போது அல்லது அதற்குப் பின்னர் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் ஆவேசமாகப் பேசி மக்களை உணர்ச்சிவசப்படுத்துவதுமாகவே இருந்துவருகின்றது. இந்தப் போராட்டத்தை விரிவுபடுத்துவதென்றால் அடிக்கடி ஆர்ப்பாட்டங்களும் கூடுதலான ஆவேசப் பேச்சுக்களுமாக இருக்கலாம்.

ஆர்ப்பாட்டம் என்ற பெயரில் ஆட்களைத் திரட்டி வந்து சுலோக அட்டைகளுடன் வரிசையாக நிறுத்துவதும் வீராவேசமாகப் பேசுவதும் பிரச்சினையைத் தீர்க்கப் போதுமானவையென்றால் தமிழ்மக்களின் சகல பிரச்சினைகளும் இதுவரையில் தீர்ந்திருக்கவேண்டும். அந்தளவுக்குத் தமிழ் தேசியக் கூட்டமைப்பினாலும் தமிழ் மக்கள் தேசிய முன்னணியினாலும் தனித்தனியாகவும் கூட்டாகவும் ஏகப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுவிட்டன. ஆனால் கக்கும் ஆவேசப் பேச்சுக்கள் பேசப்பட்டுவிட்டன. ஆனால் பிரச்சினை தீர்ந்தபாடாக இல்லை.

எந்தப் பிரச்சினையை வைத்து ஆர்ப்பாட்டம் செய்கின்றார்களோ அந்தப் பிரச்சினையிலிருந்து விலகி வழமையான தேர்தல் பிரசாரக் கூட்டமாக அதை மாற்றிவிடுகின்றார்கள். ஆர்ப்பாட்டக்காரர்கள் கைகளில் பிடித்திருக்கும் சுலோக அட்டைகளை ஏறக்குறைய எல்லா ஆர்ப்பாட்டங்களிலும காணலாம். வட மாகாண சபைத் தேர்தல் வரப்போவதால் அதற்கான தயாரிப்பாகவே இவர்கள் ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்கின்றார்கள் போல் தெரிகின்றது.

பல்கலைக்கழக மாணவர்கள் கைதுசெய்யப்பட்டதற்கு எதிராகப் பல ஆர்ப்பாட்டங்களை இத்தலைவர்கள் நடத்திவிட்டார்கள். எல்லா ஆர்ப்பாட்டங்களிலும் மாணவர்களை விடுதலை செய்யவேண்டும் என்ற சுலோக அட்டைகளிலும் பார்க்க இவர்களின் அரசியல் பிரச்சார சுலோக அட்டைகளே கூடுதலாகக் காணப்பட்டன. மாணவர்களை உசுப்பேற்றி அவர்களின் கைதுக்குக் காரணமாக இருந்தவர்களே இந்தத் தலைவர்கள்தான். மாணவர்கள் கைதுசெய்யப்பட்டதை இவர்கள் தங்கள் அரசியல் பிரசாரத்துக்காகப் பயன்படுத்தினார்களேயொழிய மாணவர்களின் விடுதலைக்கு உருப்படியான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பல்கலைக்கழக நிர்வாகம் மேற்கொண்ட முயற்சியின் விளைவாகவே பல மாணவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். ஏனையோரின் விடுதலைக்காகவும் பல்கலைக்கழக நிர்வாகம் முயற்சி மேற்கொண்டு வருகின்றது. ஆர்ப்பாட்டங்களை ஏற்பாடு செய்து ஆவேச உரைகளை நிகழ்த்தும் தலைவர்களில் ஒருவராவது மாணவர்களை விடுதலை செய்யக் கோரிச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குக் குறைந்தபட்சம் ஒரு கடிதமாவது எழுதவில்லை.

மாவையும் அவரது சகாக்களும் எவ்வளவுதான் போராட்டத்தை விரிவுபடுத்தினாலும் அது ஆர்ப்பாட்டங்களும் ஆவேச உரைகளும் என்ற அளவிலேயே இருக்கும். இது தமிழ் மக்களின் காதில் பூச்சுற்றும் போராட்டம் என்றுதான் சொல்லவேண்டும். தமிழ் மக்கள் முகங்கொடுக்கும் சகல பிரச்சினைகளினதும் நதிமூலம் இனப்பிரச்சினை என்பதை யாரும் மறுபக்க முடியாது. இனப்பிரச்சினை தீராமலிப்பதனாலேயே இராணுவப் பிரசன்னம், காணி அபகரிப்புப் போன்றவற்றுக்கு வாய்ப்பான சூழ்நிலை நிலவுகின்றது. இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டால் இவை தோன்றுவதற்கு வாய்ப்பில்லை.

எனவே சமகால உடனடிப் பிரச்சினைகள் தொடர்பான போராட்டம் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுப் போராட்டத்தோடு இணைந்ததாக இருக்க வேண்டுமேயொழிய அரசியல் தீர்வைப் புறந்தள்ளிவிட்டு நடத்தும் போராட்டமாக இருக்கக்கூடாது. நோய் அப்படியே அதன் பக்கவிளைவுகளுக்கு வைத்தியம் செய்வதைப் போன்றதே இனப்பிரச்சினையைப் புறந்தள்ளிவிட்டு மற்றைய பிரச்சினைகளுக்காகப் போராட்டம் நடத்துவது. இது ஒருவகையில் தமிழ் மக்களை ஏமாற்றும் தந்திரம். தமிழ்மக்களின் நலனில் உண்மையான அக்கறை உள்ளவர்கள் இனப்பிரச்சினையின் தீர்வுக்கான போராட்டத்துக்கே முன்னுரிமை கொடுக்கவேண்டும்.

முன்னைய தமிழ் தலைவர்களுக்கும் இன்றைய கூட்டமைப்புத் தலைவர்களுக்குமிடையே ஏராளம் ஒற்றுமைகளுக்கு மத்தியில் ஒரு வேற்றுமையும் உண்டு. அவர்கள் ஒப்புக்காகவாவது ஒரு தீர்வை முன்வைத்து அரசியல் நடத்தினார்கள். இவர்கள் எந்தத் தீர்வையும் முன்வைக்காமல் அரசியல் செய்கின்றார்கள். சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத்தரும் என்றும் அரசாங்கம் தீர்வை முன்வைக்க வேண்டும் என்றும் சொல்லிச் சொல்லித் தமிழ் மக்களை ஏமாற்றுகின்றார்களேயொழியத் தாங்கள் ஒரு தீர்வை முன்வைக்க விரும்பவில்லை. இவர்கள் கூட்டுச் சேர்ந்திருக்கும் கட்சிகள் கூட இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் எதுவும் இல்லாத கட்சிகளே. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலான எதிரணிக் கூட்டமைப்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் அங்கம் வகிக்கின்றது. ஐக்கிய தேசியக்கட்சி பதின்மூன்றாவது திருத்தத்தையே முழுமையாக ஏற்கவில்லை. அந்தத் திருத்தத்தின் சில அதிகாரங்களை நீக்க வேண்டும் என்று அக்கட்சி பகிரங்கமாகவே கூறியது.

தமிழ் மக்களுக்கு இனப்பிரச்சினையின் தீர்வே எல்லாவற்றிலும் முக்கியமானதாக இருக்கையில் கூட்டமைப்புத் தலைவர்கள் அது பற்றிப் பேசுவதற்கு ஏன் தயங்குகின்றார்கள் என்ற கேள்வியை ஒவ்வொரு தமிழ் மகனும் கேட்க வேண்டும். அதற்கான விடையையும் தேடவேண்டும்.

கூட்டமைப்புத் தலைவர்கள் எந்தக் காலத்திலும் தமிழ் மக்களின் நலனை முன்னிலைப்படுத்தி அரசியல செய்ததில்லை. தங்களுடைய நலனையும் முன்னேற்றத்தையும் முன்னிலைப்படுத்தியே அரசியல் செய்தார்கள். இதனால் மக்கள் நாளுக்குநாள் கூடுதலான துன்பங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் உள்ளாகத் தலைவர்கள் மாத்திரம் நாளுக்குநாள் கூடுதலான சுகபோகங்களை அனுபவிக்கின்றார்கள். சாதாரண தமிழ் மக்களின் குடும்பங்கள் இலங்கையில் துயர வாழ்க்கை வாழ தலைவர்களின் குடும்பங்கள் வெளிநாடுகளில் உல்லாச வாழ்க்கை வாழ்கின்றனர்.

இனப்பிரச்சினை தலைவர்களுக்கு வரப்பிரசாதமாக இருக்கின்றது. இதைவிட்டால் இவர்களின் அரசியல் இருப்புக்கு வேறு எதுவும் இல்லை என்பதால் இனப்பிரச்சினையைத் தொடர்ந்து இருக்கவேண்டும் என விரும்புகின்றார்கள். மக்களின் கவனத்தை இனப்பிரச்சினையிலிருந்து வேறு பக்கத்துக்குத் திசை திருப்புவதற்காக இனப்பிரச்சினையைப் பின்னுக்குத் தள்ளி வேறு பிரச்சினைகளை முன்னிலைப்படுத்தி ஆர்ப்பாட் டங்கள் செய்கின்றார்கள். இவர்களின் இந்தப் போராட்டம் பிரதான பிரச்சினைகளிலிருந்து தமிழ்மக்களை அந்நியப்படுத்துவதற்கான தந்திரோபாயம்.

வாரமலர்
# தினமுரசு

த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

## மனோநிலை மாற வேண்டும்

பகைமை மறந்து, இனவாதம் மறந்து ஒற்றுமையாக வாழ இலங்கையர்கள் அனைவருக்கும் புனர்வாழ்வு வழங்கவேண்டும். மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக தொடர்ந்த உள்நாட்டு வன்முறைகளினால் இலங்கையர்கள் அனைவரும் மனோரீதியாக பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

மற்றைய இனங்களுடன் சேர்ந்து வாழ்வது தொடர்பாகவும், விட்டுக்கொடுப்பது தொடர்பாகவும், சகித்துக்கொள்வது தொடர்பாகவும் தெரிந்திருக்கவில்லை. அல்லது அதைத் தெரிந்துகொள்ள விரும்பியிருக்கவில்லை.

இதற்கு காரணம் அவர் சிங்களவர், இவர் முஸ்லிம், அவர் தமிழர் என்று பிரிந்து நின்று கொண்டு மற்றவர்களை நம்மிலிருந்து வேறுபட்டவர்களாக காட்டிக் கொள்வதில் அலாதியானவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

யுத்தம் முடிவுக்கு வந்துவிட்டது. ஆனாலும் யுத்தத்தில் ஈடுபட்டிருந்த தமிழ் இளைஞர், யுவதிகளுக்கு புனர்வாழ்வு வழங்கப்படுகின்றது. இதே யுத்தத்தில் மறுபங்காளிகளாக இருந்தவர்களுக்கு சாதாரண வாழ்வுக்கு முகம் கொடுத்திருக்கும் மக்களுடன் எவ்வாறு பழகுவது என்ற புனர்வாழ்வு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

ஆகையால் இன்னும் தமிழ் மக்களுக்கும் படைத்தரப்புக்குமிடையிலான இடைவெளி வியாபித்துக்கொண்டே இருக்கின்றது.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை வழங்காமல், அபிவிருத்தி, உதவிகள் என்று எதை வழங்கினாலும் அவற்றை திணிப்பாகவே பார்க்கின்ற நிலை தமிழ் மக்களிடம் உள்ளது. அதைப் புரிந்து கொள்ளாமல் தமிழ் மக்களுடன் சகஜமாகவே பழகுகின்றோம் என்றும் அவர்களும் பழகுகின்றார்கள் என்றும் அறிக்கைவிட்டுக்கொண்டு இருப்பதில் அர்த்தமில்லை.

தமிழ் மக்களையும் இந்த நாட்டின் பிரஜைகளாகப் பார்ப்பதற்கும், அவர்களும் இந்த நாட்டில் அரசியல் மற்றும் மனித உரிமைகளுடன் பாதுகாப்பு அச்சமின்றி வாழ்கின்ற சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு பிரச்சினைகளுடன் தொடர்புபட்ட அனைவருக்கும் மனோநிலை ரீதியாக உண்மையான எண்ணம் ஏற்பட வேண்டும். அவசியமிருந்தால் இவர்களுக்கு அதற்கான புனர்வாழ்வு முயற்சிகள் எடுக்கப்படுவதில் தவறில்லை.

அவ்வாறில்லாமல் இன்னும் யுத்தமனோபாவத்துடனும், வெற்றிப் பெருமிதத்திலும் இருந்துகொண்டு பிரச்சினைகளையும் கோரிக்கைகளையும் அணுகுவதில் அர்த்தமில்லை. துரதிர்ஷ்டவசமாக அவ்வாறதொரு நிலைமையே தற்போது நாட்டில் உள்ளது என்று எதிர்க்கட்சிகள் கூறுவதை மறுக்கமுடியாது.

இலங்கையின் தற்போதைய அரசியல் சூழலில் தமிழ் பேசும் மக்கள் நடைப்பிணங்களாக வாழ்ந்துவிட்டு போகவேண்டும். அரசியல் உரிமை, மத வழிபாட்டு உரிமை என்பது பற்றியெல்லாம் வாய் திறக்கக் கூடாது. அவர்களின் அரசியல் தலைமைகளும் வலிமையற்றவர்களாக இருக்கவேண்டும் என்றும் அவர்களின் அரசியல் அமைப்புகளை சிதைத்துவிடுவது என்பதை இனவாதிகள் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தி வருகின்றார்களோ என்ற சந்தேகங்கள் தற்போது வலுப்பெற்று வருகின்றது.

இந்தச் சூழலை மாற்றி நிரந்தர ஐக்கியத் தையும் சகவாழ்வையும் ஏற்படுத்துவது அவசியமாகும். இல்லாமல் பொறுப்பை தட்டிக்கழித்துக் கொண்டிருப்பது அரசியல் சாணக்கியமாகாது. அது தோல்விகளையே தேடித்தரும்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.



# தூதுவர்களின் வருகையும் தொடரும் முயற்சிகளும்

**இலங்கையில்**

அரசியல் பிரச்சினை கூர்மையடைந்து அது சர்வதேசத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட காலத்திலிருந்து காலத்திற்குக் காலம் உலக நாடுகளின் பிரதிநிதிகள் வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு விஜயம் செய்வதும் பல்வேறு தரப்புக்களுடனும் சந்திப்புக்களை மேற்கொண்டு நிலவரங்களை அறிந்துகொள்வதும் வாடிக்கையானதாகிவிட்டது.

எண்பதுகளின் நடுப்பகுதியில் இந்தியாவின் அனுசரணையுடன் நடைபெற்ற திம்புப் பேச்சுவார்த்தை காலகட்டத்தில் இலங்கையின் அப்போதைய இந்தியத் தூதுவராக இருந்த ரொமேஸ் பண்டாரி முதன் முதலில் அரசியல் உரிமை விவகாரங்களுக்காக யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

அதன்பின்னர் அண்மையில் வந்து சென்றிருக்கும் சுமார் 13 நாட்டுப் பிரதிநிதிகளைச் சேர்ந்த ஐ.நா.தூதுக்குழுவினர்வரை நூற்றுக் கணக்கானோர் விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

அதுவும் நாட்டில் நடைபெற்றுவந்த 30 ஆண்டுகால யுத்தம் முடிவுற்ற பின்னரான காலப்பகுதியில் இவ்வாறான தூதுவர்களின் வருகை சடுதியாக அதிகரித்திருப்பதையும் இவர்களின் வருகை தமிழ் மக்களின் மத்தியில் விசேஷட கவனிப்புக்குள்ளாகி வருவதையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

அதற்குக் காரணம், 2002 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட ரணில் – பிரபா ஒப்பந்தத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட போர்நிறுத்தம் பேச்சுவார்த்தை என்ற அமைதிச் சூழல் 2005 ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் மூலம் பதவிக்கு வந்த மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற இரண்டு கட்ட சந்திப்புக்களுடன் முடிவுக்கு வந்திருந்தது.

அக்கால கட்டத்தில் புலிகளின் பிடிவாதம் விட்டுக்கொடுக்காத இறுக்கமான நிலைப்பாடுகள் என்பவற்றினால் வெறுப்படைந்திருந்த சர்வதேச சமூகம் இலங்கையில் தொடருகின்ற அரசியல் பிரச்சினைத் தீர்வுக்கு புலிகளே பிரதான தடைகளாக இருக்கின்றனர் என்ற அரச தரப்பின் நியாயங்களை ஏற்றுக் கொண்டது.

இதனால் ஏற்கெனவே சர்வதேச அளவில் பயங்கரவாத அமைப்பாகப் பட்டியல் இடப்பட்டிருந்த புலிகளுக்கெதிராக இலங்கை அரசாங்கம் மேற்கொள்ள திட்டமிட்ட இராணுவ நடவடிக்கைகளைச் சர்வதேசத்தின் ஒருசாரார் பூரண ஒத்துழைப்பு வழங்கி ஆதரிக்க முன்வந்தனர். இன்னொரு சாரர் கண்டும் காணாமல் இருக்கத் தீர்மானித்திருந்தனர்.

எனினும், புலிகளின் ஆதிக்கம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட பின்னர் தமிழ் மக்களுக்குக் கௌரவமான அரசியல் தீர்வொன்று முன்வைக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோள் பல்வேறு நாடுகளினால் இலங்கை அரசாங்கத்துக்குக் கூறப்பட்ட நிலையிலேயே புலிகளுக்கெதிரான இராணுவ நடவடிக்கைக்கான ஆதரவு வழங்கப்பட்டது.

நீண்டகால இராஜதந்திர பிராந்திய எதிர்பார்ப்புக்களுடன் சிந்தித்த சர்வதேச நாடுகள் சில இந்த குறித்த கோரிக்கையைக் கட்டாய நிபந்தனையாகக்கூட முன்வைத்திருந்தன. எப்படியாயினும் புலிகளின் கால்களை உடைத்தெறிய வேண்டும் என்ற குறிக்கோளோடு இருந்த அரசாங்கம் சர்வதேசத்தின் நிபந்தனைகள், கோரிக்கைகள் எவற்றையும் மறு கேள்விக்குட்படுத்தாமல் அப்போது ஏற்றுக் கொண்டிருந்தது. அதற்கமைய முன்னெடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் 2009 மே 19 ஆம் திகதி முடிவுக்குக்கொண்டு வரப்பட்டிருந்தது.

> சர்வதேச நாடுகள் தத்தமக்குச் சார்பான வெவ்வேறு நிகழ்ச்சி நிரல்களுடன் இலங்கை விவகாரத்தைக் கையாளுகின்ற போதிலும் தமிழ் மக்களினுடைய அரசியல் தீர்வு விடயத்தில் சர்வதேச சமூகத்தினது பங்களிப்புக்கள் அவசியமானது என்பதைத் தமிழர் தரப்புக்கள் எதிர்பார்த்திருக்கின்றனர் என்பது மட்டும் தெளிவாகின்றது. இந்த எதிர்பார்ப்பைச் சர்வதேச நாடுகள் விளங்கிக் கொண்டு தமது நிகழ்ச்சி நிரல்களுக்குள் தமிழ் மக்களின் அபிலாசைகள் சிதறடிக்கப்படாது சீர்ப்படுத்தப் படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

இதன்பின்னர், மாறிய சூழல்களுக்கேற்ப இலங்கையைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க விரும்பிய அமெரிக்கா தலைமையிலான மேற்குலக நாடுகள் இறுதி யுத்தத்தின்போது இரு தரப்பு மனிதாபிமானச் சட்டங்களை மீறியுள்ளதாகக் குற்றஞ்சாட்டினர். ஏறக்குறைய 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும் ஏறக்குறைய 1 இலட்சம் மக்கள் உணவு, வைத்தியவசதி போன்றவை இல்லாமல் அவஸ்தைப் பட்டதாகவும் இலங்கை இராணுவம் அறிவித்த யுத்தத் தவிர்ப்பு வலயங்களுக்குள் கடுமையான செல் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் குற்றஞ்சாட்டி அதற்கான ஆதாரங்களாகப் புகைப்படங்கள் , ஒளி நாடாக்கள், சட்டலைட் தகவல்கள் மற்றும் கண்கண்ட சாட்சியங்கள் என்பன ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாகவும் கூறின.

புலிகள் தரப்பில் பதில் சொல்வதற்கு யாரும் இல்லாத நிலையில் இலங்கை அரசாங்கம் சர்வதேசத்தின் குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியது.

இந்நிலையில், இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான பிராந்திய ஆதிக்கப் போட்டியை மிகவும் கச்சிதமாக விளங்கிக் கொண்டு இரு நாடுகளையும் தந்திரமாகக் கையாளுகின்ற இலங்கை அரசாங்கம் அமெரிக்கா தலைமையிலான மேற்குலகுடன் முறைத்துக் கொள்வதையும் விரும்பவில்லை.

எனவே, சர்வதேசத்தினால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்காக உள்ளக நல்லிணக்க ஆணைக்குழு என்ற பெயரில் விசாரணைக் குழு ஒன்றை அமைத்து உள்ளக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் அதன் பரிந்துரைகளுக்கு அமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் கூறியது.

குறித்த பரிந்துரைகள் வெளியாகியுள்ள நிலையிலும் அவற்றை அடிப்படையாகக் கொண்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவில்லை என்பது குறித்தும் அண்மைக்காலமாக மேற்குலக நாடுகள் இலங்கைமீது தொடர்ச்சியான அழுத்தங்களைக் கொடுத்துவருகின்ற சூழலில் ஏற்கெனவே சர்வதேசத்துடன் இணங்கிக் கொண்டதற்கமைய புலிகளின் அழிவிற்குப் பின்னர் தமிழ் மக்களுக்கான உட்கட்டுமானப் பணிகள் மீள்வாழ்வுத் திட்டங்கள் என்பன சிறப்பாக முன்னெடுக்கப்படுகின்றது என்பதனை நிரூபிக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருப்பதை மறுக்கமுடியாது.

இன்னொருபுறம் குறித்த திட்டங்களின் பெயரினால் உலக நாடுகளில் இருந்து பெறப்படுகின்ற கடனுதவிகளுக்கான செயற்திட்டங்களையும் காண்பித்து அவர்களைத் திருப்தியடையச் செய்கின்ற தேவை உள்ளதாகவும் அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

இதனாலேயே அடிக்கடி வெளிநாட்டுத் தூதுவர்கள் வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர் என்பது குறித்த விமர்சகர்களின் கருத்தாக இருக்கின்றது.

எது எப்படி இருப்பினும் அண்மையில் இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் வதிவிடப் பிரதிநிதி பாலித ஹோகனவினால் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்ட ஐ.நா பிரதிநிதிகள் குழுவினரின் வருகையும் அவர்களைச் சந்தித்த மக்கள் பிரதிநிதிகளும், சிவில் சமூகத்தினரும் தெரிவித்திருக்கின்ற கருத்துக்களும் கவனிக்கத்தக்கவை.

ஒருபுறத்தில் குறித்த தரப்பினரைச் சந்தித்த யாழ். ஆயர் தலைமையிலான குழுவினர் நாட்டில் தற்போது ஏற்றத்தாழ்வுகளும், வேற்றுமைகளும், அதிகரித்திருக்கின்றன. தற்போது தமிழர் பிரதேசங்களில் இடம்பெறும் சம்பவங்கள் அரசாங்கம் ஏதோ ஒன்றை மறைத்து வைத்துக்கொண்டு செயற்படுவதாக எண்ணத் தோன்றுகின்றது. மக்களுடைய மனங்களை வெல்லாமல் யுத்த வெற்றிக்களிப்பில் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒவ்வொருவரும் தங்களது தனித்துவங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான நிலைமை ஏற்படுத்தப்படவேண்டும் என்றெல்லாம் எதிர்பார்ப்புக்களை அடுக்கியிருக்கின்றனர்.

அதேபோன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏற்பாட்டில் குறித்த தரப்பினரைச் சந்தித்த சிவில் சமூகப் பிரதிநிதிகள், கடந்த மூன்றாண்டு காலத்தில் வடக்குக் கிழக்குப் பிரதேச நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் அவை தொடர்ந்தும் பாதுகாக்கப்படுவதுடன், மேலும் முன்னேற்றங்கள் ஏற்படும் என்ற நம்பிக்கையையும் தற்போது அண்மைக் காலமாக பல்கலைக்கழக விவகாரத்தில் ஏற்பட்டிருக்கின்ற சிக்கல்களுக்கு ஒரு சிலரின் குறுகிய சிந்தனைகளே காரணம் என்றும் விளக்கமாக எடுத்துக் கூறியிருக்கின்றன.

ஆக, இவ்வாறான கருத்துக்களின்மூலம் சர்வதேச நாடுகள் தத்தமக்குச் சார்பான வெவ்வேறு நிகழ்ச்சி நிரல்களுடன் இலங்கை விவகாரத்தைக் கையாளுகின்ற போதிலும் தமிழ் மக்களினுடைய அரசியல் தீர்வு விடயத்தில் சர்வதேச சமூகத்தினது பங்களிப்புக்கள் அவசியமானது என்பதை தமிழர் தரப்புக்கள் எதிர்பார்த்திருக்கின்றனர் என்பது மட்டும் தெளிவாகின்றது. இந்த எதிர்பார்ப்பைச் சர்வதேச நாடுகள் விளங்கிக் கொண்டு தமது நிகழ்ச்சி நிரல்களுக்குள் தமிழ் மக்களின் அபிலாசைகள் சிதறடிக்கப்படாது சீர்ப்படுத்தப் படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

எக்ஸ்ரே ரிப்போர்ட்



ரிஷி

22

# புலிகளின் வீழ்ச்சி!

## இறுதி நாட்கள்...

# தோல்வியில் முடிந்த இறுதி முயற்சி

ஆயுதங்கள் வந்து சேரா விட்டால், தோல்வி நிச்சயம் என்ற நிலை சிறிதுசிறிதாக ஏற்பட்டுக் கொண்டிருந்தது.

வன்னியில் இருந்து பொட்டு அம்மான், "மீண்டும் ஒரு தடவை விமானம்மூலம் ஆயுதம் அனுப்ப முயற்சி செய்யுங்கள்" என்று உக்ரேனுக்கு அவசர தகவல் அனுப்பினார்.

இவர்கள் ஏற்கனவே, போய்ச் சேராத ஒரு லோட் ஆயுதங்களுக்காக உக்ரேன் ஆயுத வியாபாரியிடம் பணம் கொடுத்திருந்தார்கள். அந்த ஆயுதங்கள் இந்திய அதிகாரிகளிடம் சிக்கிவிட்டதால், மறுபடியும் பணம் கொடுத்தால்தான், அடுத்த முயற்சி செய்ய முடியும் என்று ஆயுத வியாபாரி சொல்லிவிட்டார்.

இந்த விபரம் பொட்டுஅம்மானுக்கு தெரிவிக்கப்பட்டது.

அடுத்த லோட் ஆயுதங்களுக்காக பணம் ஏற்பாடு செய்வதாக பொட்டு அம்மான் தெரிவித்தார். இந்த விபரம் புலிகளின் தலைவர் பிரபாகரன் வரை போய், அப்போது புலிகளின் வெளிநாட்டு பிரிவுக்கு பொறுப்பாக இருந்த காஸ்ட்ரோ என்கிற மணி வண்ணனின் ஐரோப்பிய முகவர் மூலமாக பணம் ஏற்பாடு செய்யப் பட்டது. ஒரு வாரத்துக்குள் பணமும், உக்ரேன் போய்ச்சேர்ந்தது.

உக்ரேன் ஆயுத வியாபாரியின் விமானம் இந்தியாவில் தரையிறங்கிய 'கதை' நிஜம் என்று பொட்டுஅம்மான் நம்பினாரா? அல்லது, யுத்தத்தின் முடிவு நெருங்குவதை புரிந்து கொண்டு, வேறு வழியில்லாமல் மீண்டும் அதே உக்ரேன் ஆயுத வியாபாரிக்கு பணம் கொடுத்து ஒரு முயற்சி செய்ய முடிவு செய்தாரா? இது, சரியாக தெரியவில்லை.

பொட்டுஅம்மானால் அனுப்பி வைக்கப்பட்ட சில மில்லியன் டொலர் தொகை, இரண்டாவது தடவையும் உக்ரேன் ஆயுத வியாபாரிக்கு கொடுக்கப்பட்டது.

ஆனால், இம்முறை பணம் கொடுக்கும்முன், உக்ரேனில் இருந்த பொட்டுஅம்மானின் ஆட்கள் இருவரும், ஆயுத வியாபாரியுடன் சற்றுக் கடுமை யாகவே நடந்துகொண்டார்கள். ஆயுத விமானம் வன்னிக்குச் செல்வது தொடர்பான அனைத்து விபரங்களையும் கொடுக்கும்படி கேட்டார் கள். "அந்த விபரங்கள் திருப்திகரமாக இருந் தால்தான் டீல்" என்றார் கள்.

கிடைத்த விபரங்களை, பொட்டுஅம்மானிடம் அனுப்பி வைத்தார்கள்.

பொட்டு அம்மான், வெளிநாட்டில் விமானங் களுடன் தொடர்பு டையவராக இருந்த தமது சோர்ஸ் ஒரு-வரிடம் சொல்லி, "இப்படியொரு விமான ஒப்பரேஷன் சாத்தியமா?" என்று விசாரித்தபோது, "அது சாத்தியம்தான்" என்று பதில் கிடைத்திருக்கிறது. அதன் பின்னரே, பணம் கொடுக்குமாறு பொட்டு அம்மான் கூறியிருந்தார்.

மீண்டும் அதே AN-72 ரக விமானம். இம்முறை அதில் ஆயுதங்கள் உள்ளனவா எனப் பார்க்க வேண்டும் என்று முன் கூட்டியே பொட்டு அம்மானின் ஆட்கள் கேட்டுக் கொண்டதால், விமானத்தில் ஆயுதங்கள் லோட் செய்யப்பட்டது அவர்களுக்கு காண்பிக்கப்பட்டது.

விமானம் புறப்படும் நேரம், பறக்கும் நேரம், வன்னிக்கு அருகே விமானம் வரும் நேரம், இரணைமடு ரன்வேயில் தரையிறங்கப் போகும் நேரம் அனைத் தமே துல்லியமாக வழங்கப்பட்டிருந்தன. அனைத்து தகவல்களும், வன்னியில் பொட்டு அம்மானுக்கும் கொடுக்கப்பட் டிருந்தது.

இது நடைபெற்ற காலப்பகுதியை சரியாக சொல்ல வேண்டுமென்றால், 2008ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தின் 2ஆவது வாரத்தில் நடைபெற்றது. புலி களின் விமான ரன்வே அமைந்திருந்த இரணைமடுவுக்கு அருகே யுத்தம் வந்துவிட்டிருந்தது. இலங்கை இராணுவத் தின் 57-வது டிவிஷன், மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் தலைமையில் வன்னியில் கிளிநொச்சி மாவட்டத்தின் அக்கராயன் குளக்கட்டு அருகே வந்துவிட்டது.

அக்கராயன் குளத்தில் இருந்து, ஏ-9 வீதியை கடந்துவிட்டால், இரணைமடு!

அதாவது, புலிகள் தமது விமான ரன்வே அமைந்திருந்த இரணைமடுவை இழப்பதற்கு சில வாரங்களுக்கு முன், அங்கே உக்ரேன் விமானத்தை தரையிறக்க ஏற்பாடு செய்யப்பட்டது. குறிப்பிட்ட தினத்தில் விமானம் அதி காலை 4 மணியில் இருந்து 4.30இற்குள் ரன்வேயை அப்ரோச் பண்ணும் என்று உக்ரேனில் கூறினார்கள்.

விமானமும் புறப்பட்டது. இரணமடு ரன்வே அருகே ஆயுதங்களை ஏற்றிச் செல்வதற்கு ஆயத்தமாக பொட்டு அம்மானின் ஆட்கள் வாகனங் களுடன் காத்திருந்தார் கள். எல்லாமே இரகசிய மாக வைக்கப்பட்டிருந்தன. அந்த நாட்களில், இலங்கை விமானப் படை குண்டுவீச்சு விமானங்கள், இரவு நேரங்களில் குண்டுவீச வருவது அபூர்வம். இதனால், விமானப் படை குண்டுவீச்சு பயமின்றி, ஆயுதங் களை ஏற்றிச் செல்லலாம் என்று நினைத்திருந்தார்கள்.

அதிகாலை 4.30 மணி. விமானம் வரும் ஓசை கேட்டது. கீழே நின்றிருந்த வர்கள் தயாரானார்கள்.

வந்த விமானம் திடீரென இரணைமடு



பகுதியில் குண்டுவீச துவங்கியபோது தான், அது இலங்கை விமானப்படையின் குண்டுவீச்சு விமானம் என்று புரிந்தது. ஒன்றல்ல இரண்டு விமானங்கள்!

குண்டுவீச்சில் இரணைமடு ரன்வே சேதமடைந்தது.

மறுநாள் பொட்டம்மானின் ஆட்கள் பேசுமுன்னே, உக்ரேனில் இருந்த ஆயுத வியாபாரி எகிறத் துவங்கிவிட்டார். "எமது விமானத்தை வரச் சொல்லிவிட்டு, அந்த தகவலையும் உங்கள் ஆட்கள்தான் எப்படியோ இலங்கை விமானப் படைக்கு லீக் செய்து விட்டார்கள். எமது விமானமும், விமானியும் உயிர் தப்பியதே பெரிய விஷயம். இனியும் வேண்டாம்; இந்த வியர்பாரம்" என்றார் அவர்.

இரண்டாவது தடவை கொட்டிக் கொடுத்த பணமும் கோவிந்தா!

அத்துடன், புலிகள் விமானம் மூலம் ஆயுதம் இறக்கும் முயற்சி முடிவுக்கு வந்தது. அதன்பின் முயற்சி செய்ய முடியாதபடி, இலங்கை இராணுவத்தின் 57ஆவது டிவிஷன் டிசம்பர் 1ஆம் திகதி அக்கராயன் குளத்தை கடந்து ஏ-9 வீதியில் கொக்காவில் என்ற இடத்தைக் கைப் பற்றியது. மற்றொரு படைப்பிரிவான 58ஆவது டிவிஷன், ஜனவரி 8ஆம் திகதி முரசுமோட்டை என்ற இடத்தைக் கைப்பற்றியது.

இந்த இரு இடங்களுக்கும் நடுவே அமைந்திருந்தது, புலிகளின் விமான ரன்வே!

யுத்தம் முடிந்தபின் சமீபத்தில், இலங்கை விமானப்படை சோர்ஸ் ஒருவரிடம் இருந்து ஒரு விபரம் தெரியவந்தது. அந்த விபரம் என்ன வென்றால், இரணைமடுவில் புலிகள் காத்திருந்த தினத்தில், உக்ரேன் விமானம் வரவே இல்லை.

உக்ரேன் ஆயுத வியாபாரி, இலங்கை உளவுத்துறைக்கு முன் கூட்டியே தகவல் கொடுத்து, அன்று அதிகாலை இரணைமடு ரன்வே அருகே புலிகளின் உளவுப்பிரிவு முக்கியஸ்தர்கள் காத்திருக்க சான்ஸ் உள்ளது என்று கூறியிருந்தார். அதையடுத்தே சரியான நேரத்தில், இலங்கை விமானப்படை விமானம் குண்டுவீச வந்து சேர்ந்தது.

யுத்தத்தில் புலிகள் தோல்வி அடைந்தது ஏனென்று ஆளாளுக்கு பல காரணங்களை கூறுகிறார்கள். ஆனால், திரை மறைவில் நடைபெற்ற இதுபோன்ற பல சம்பவங்கள்தான் முக்கிய காரணம் என்பது தெரியப் படாத உண்மையாகவே உள்ளது. காரணம், இந்த விஷயங்கள் இரகசிய மாக நடந்தவை. இவற்றில் சம்மந்தப் பட்ட ஓரிருவர் மட்டுமே தற்போது உயிருடன் உள்ளார்கள்.

2002ஆம் ஆண்டுக்குப் பின், கே.பி.-யிடம் இருந்து ஆயுதக் கொள்வனவும் கப்பல் போக்குவரத்தும் கைமாறிய பின், இறுதி யுத்தம் முடியும்வரை வன்னிக்கு போய் சேர்ந்த ஆயுதங்கள் மொத்தமாகவே சுமார் 25 டன் (25,000 கிலோ) மட்டுமே. அதாவது 7 ஆண்டுகளில், அடிபடாமல் போய்ச் சேர்ந்தவை அவ்வளவுதான். 2002-க்கு முன், புலிகள் யுத்தத்தில் வெற்றிமுகம் காட்டிய நாட்களில், சில சமயங்களில் மாதம் ஒன்றுக்கு 25 டன் ஆயுதங்கள் போய்ச் சேர்ந்த காலமும் இருந்தது.

ஆயுதம் வாங்குவதும், அதை அனுப்பிவைப்பதும், ஒரு கலை. அதை யாராலும் செய்யமுடியும் என்று சிலர் கூறியதை, புலிகளின் தலைவர் பிரபா-கரன் ஏற்றுக் கொண்டார். அதற்கான விலையையும் அவர் கொடுக்க நேர்ந் தது. ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் ஆயுத இறக்குமதி அடிபட்டிருந்தால் பரவா யில்லை. அல்லது யாரோ ஒருவர் செய்த முயற்சி அடி வாங்கியிருந்தால் பரவாயில்லை என்று ஏற்றுக் கொள்ளலாம்.

ஆனால், 2002-க்கு பின் அனை-வரும் செய்த அனைத்து முயற்சிகளும் ஒவ்வொன்றாக அடி வாங்கியதை என்னவென்று சொல்வது?

(தொடரும்...)

---

(சென்றவாரத் தொடர்ச்சி...)

# ஓர் இரகசிய கொலைத் திட்டம்

அது ஒரு சிறு நகரம். சில மணி நேரத்திலேயே நகரை நான்கைந்து தடவைகள் சுற்றி வந்தார் மொசாத் உளவாளி. அரபு நாட்டவர்கள் போன்ற தோற்றத்தில் யாராவது நடமாடுகிறார்களா என்று பார்த்தார். யாரும் தென்படவில்லை.

டெலிபோன் டிரக்டியைக் புரட்டிப் பார்த்தார். வீடு களை வாடகைக்கு விடும் நிறுவனங்களைத் தொடர்புகொண்டு அப்துல்லா ஸெயின் என்ற பெயரில் தனது நண்பர் ஒருவர் வீடு வாடகைக்கு எடுத்திருக்கிறாரா என்று விசாரித்தார். வைத்தியசாலைகளுக்கு போன் பண்ணி விசாரித்தார். அப்துல்லா என்ற பெயரில் யாராவ்து சிகிச்சை பெற்றார்களா என்று.

பலன் பூச்சியம்.

மிடில் ஈஸ்ட்காரர்கள் யாருமே இல்லாத சிறு நகரம்!

அப்துல்லா போன்ற முக்கியமான ஒருவர், அதுவும் ஒரு இத்தாலியப் பெண்ணைத் திருமணம் செய்துள்ள ஒருவர் வசிப்பதற்கு இதுதான் உகந்த இடம் யாரும் சந்தேகப்பட மாட்டார்கள் என்று அவரது உள்மனது சொல்லியது.

மொசாத் உளவாளி நகரைச் சுற்றிவந்த போது. ஒரு வால்வோ கார் அவரைக் கடந்து சென்றது. அதனுள்ளே அரபு தோற்றத் துடன் ஒருவர் இருப்பது தெரிந்தது. அவருக்கு அருகே blond நிற தலைமுடி யுடன் ஒரு வெள்ளைப் பெண்!

வால்வோ காரைப் பின்தொடர்ந்தார் மொசாத் உளவாளி. கார் ஒரு கடைக்கு முன் நிறுத்தப்பட்டது. காரில் இருந்து இறங்கியவரின் முகம் தெளிவாகத் தெரிந்தது.

அட, அப்துல்லா ஸெயின!

சுவிட்சலாந்திலுள்ள அந்தச் சிறிய நகரத்தில் வோல்வோ காரில் இருந்து இறங்கிய நபர் அப்துல்லா என்று கண்டவுடன் மொசாத் உளவாளி சுறுசுறுப்பானார். மொசாத் தலைமையகத்தில் இருந்து வந்த செய்தியின்படி கண்டுபிடிக்கப்பட



வேண்டிய நபர் இவர் தான் என்று மீண்டும் ஒருமுறை அவரிடம் கொடுக்கப்பட்ட போட்டோவுடன் ஒப்பிட்டுப் பார்த்து உறுதி செய்து கொண்டார்.

இவரேதான்! கடைக் குள் சென்ற அப்துல்லா திரும்பவும் வந்து வால்வோ காருக்குள் ஏறி ஸ்டார்ட் செய்தார். நகரின் மற்றொரு பகுத-யை நோக் கிக் காரைச் செலுத்தத் தொடங்கினார்.

அந்தக் காரை பின் தொடரத் தொடங்கினார் மொசாத் உளவாளி.

கிட்டத்தட்ட ஒரு கிலோமீற்றர் ஓடியபின் கார் ஒரு அப்பார்ட்மென்ட் கட்டடத்துக்கு முன்னால் நிறுத்தப்பட்டது. அதன் முகவரி 27 Warbersack-erstrasse.

காரை நிறுத்திவிட்டு அப்துல்லா உள்ளே நுழைந்தார். அவர் உள்ளே செல்லட்டும் என்று விட்டுவிட்டு, சில நிமிட இடைவெளியில் பின் தொடர்ந்தார் மொசாத் உளவாளி. முன்வாயிலைக் கடந்தவுடன் சிறியதாக ஒரு லாபி. அதற்குள்ளே ஒவ்வொரு அப்பார்ட் மென்ட்டுக்கும் ஒவ்வொரு மெயில் பாக்ஸ். அதற்கு அடுத்தபடியாக ஒரு கதவு. அதைத் திறந்தால் படிகள் கீழ்நோக்கிச் செல்கின்றன.

(தொடரும்)

# நிலமெல்லாம் இரத்தம் 32



பா.ராகவன்

**குறிப்பாக,** முகம்மதுவின் உயிருக்கே ஆபத்து நேரலாம் என்று அவரது தோழர்கள் பலர் தொடர்ந்து எச்சரித்து வந்திருக்கிறார்கள்.

கி.பி.622இல் அது நடந்தது. முகம்மது மெக்காவிலிருந்து யத்ரீப்புக்கு இடம்பெயரலாம் என்று தீர்மானித்தார்.

மதினா என்பது ஹீப்ரு மொழிப்பெயர். அன்றைக்கு அங்கே அதிகம் பேசப்பட்டுக் கொண்டிருந்த மொழியும் அதுதான். ஏனெனில் மதினாவில் அப்போது அராபியர்களைக் காட்டிலும் யூதர்கள்தான் அதிகம் வசித்துவந்தார்கள்.

அராபியர்களான குறைஷிகளின் தொல்லையிலிருந்து தப்பிக்க யூதர்கள் நிறைந்த மதினா நகருக்கு இடம்பெயர நேர்ந்தது ஒர சரித்திர



விநோதம்தான். ஆனால் அடுத்த சில வருடங்களில் ஒட்டுமொத்த மத்திய ஆசியாவையும் இஸ்லாம் என்கின்ற குடையின் ஒரு குடையின் கொண்டுவருவதற்கு அங்கே தங்கியிருந்த காலத்தில் அவர் ஊன்றிய வித்துக்கள்தான் ஆதாரக்காரணமாக இருந்திருக்கின்றன.

மதினா என்கிற யத்ரீப் அராபியர்களும், அவர்களைக் காட்டிலும் கொஞ்சம் அதிகளவு யூதர்களும் வசித்துவந்தார்கள். இதில், அராபியர்கள் என்பவர்கள் பெரும்பாலும் ஆதிவாசிகள். அதிகம் படித்தவர்களோ, பணக்காரர்களோ அல்லர். மெக்கா நகரின் குறைஷிகளைப் போலல்லாமல், முகம்மதுவை ஒர் இறைத்தூதராக ஏற்பதில் அவர்களுக்குப் பெரியளவில் எந்தப் பிரச்சினையும் இல்லை. காரணம், முகம்மதுவை அவர்கள் தங்களில் ஒருவராகப் பார்க்க முடிந்ததுதான். அவர்களைப் போலவே முகம்மதுவும் படிப்பறிவு இல்லாதவர். அவர்களைப் போலவே எளிமை யான வாழ்க்கை முறையை மேற்கொள்பவர். அவர்களைப் போலவே கனிவும் பரிவும் கொண்டவர். அவர்களைப் போலவே பாசாங்கற்றவர். ஆனால் அவர் உதிர்க்கிற ஒவ்வொரு சொல்லிலும் வெளிப்பட்ட அழுத்தமும் தீர்மானமும் தீர்க்கதரிசனமும் மதினாவாசிகளுக்குப் பரவசமூட்டுபவையாக இருந்தன. பாமரர்தான்; ஆனால் இம்முறை இறைவன் அத்தகைய ஒருவரைத்தான் தன்னுடைய தூதராகத் தேர்ந்து எடுத்திருக்கிறான் என்று அழுத்தம் திருத்தமாக உணர்த்தும் விதத்தில் இருந்தன, அவருடைய பேச்சும் செயற்பாடுகளும்.

நூறு நூறு ஆண்டுகளக வழிகாட்ட ஒரு ஜீவனில்லாமல், காட்டுச்செடிகள் போல் பிறந்து, வாழ்ந்து மடிந்து கொண்டிருந்த அராபியர்களின் வாழ்வுக்கு ஓர் அர்த்தம் சேர்ப்பதற்காகவே இறைவன் முகம்மதுவைப் படைத்து அனுப்பி வைத்தான் என்று நம்பினார்கள் மதினாவாசிகள். இதனாலேயே, நம்பமுடியாத அளவுக்கு முகம்மதுவின் ஆதரவாளர்களும் இஸ்லாத்தில் இணைவோரும் அங்கே பெருகத் தொடங்கினார்கள். உருவமற்ற ஒரே பரம்பொருளின் பெருமைகளைத் தான் முகம்மது பேசினார். முஸ்லிம்களாக மாறிய அராபியர்கள் தமது இனக்குழுப் பகைகளை முன்னிட்டுத் தங்களுக்குள் அடித்துக்கொண்டு சாகாமல், ஒற்றுமையாக இருந்து பொது எதிரிகளான உருவ வழிபாட்டாளர்களைப் பண்படுத்த முயற்சி செய்யும்படி முகம்மது தொடர்ந்து வலியுறுத்தி வரத் தொடங்கினார்.

இவ்விஷயத்தில் அன்றைய மதினா நகரத்து யூதர்களையும் அனுசரித்து நடந்துகொள்ள வேண்டியதன் அவசியத்தை அவர் உணர்ந்தே இருந்தார். இதற்கான காரணங்கள் மிக நுட்பமானவை.

யூதர்களும் உருவமற்ற ஒரே பரம்பொருளை வணங்குபவர்கள் என்பது முதல்காரணம். தவிரவும் அவர்களில் படித்தவர்கள் அதிகம். அமைப்புரீதியில் வலுவாகக் காலூன்றிய அவர்களது மதகுருமார்களின் சபைகள், முடிவெடுப்பதிலும் செயற்படுத்துவதிலும் ஓர் ஒழுங்கை யும் நேர்த்தியையும் கடைப்பிடித்து வந்தனர். உருவ வழிபாட்டாளர்களுக்கு எதிரான சமயமாக இஸ்லாத்தை முன்னிறுத்துகையில், யூதர்களின் ஒத்துழைப்பும் மிக அவசியமானது என்றே முகம்மது அப்போது கருதி-னார். இரண்டும் சகோதர மதங்கள் என்பதை முன்வைத்து, இரு மதத்தினரும் சகோதரத்துவத்துடன் பழகவேண்டியதன் அவசியத்தை அவர் எடுத்துச்சொன்னார்.

அப்படிச் செய்ய இயலுமானால், பொதுஎதிரியைச் சந்திக்க வலிமை கிட்டும். ஒரு யுத்தம் என்று வருமானால் இராணுவ பலம் அதிகரிக்கும். அரேபிய முஸ்லிம்களின் உடல்வலுவும் யூதர்களின் புத்திக்கூர்மையும் இணையுமானால் வெற்றிக்குப் பிரச்சினை இராது. வேறு வேறு நம்பிக்கைகளில், வேறுவேறு வாழ்க்கை முறைகளைக் கொண்டவர்களே என்றாலும் உருவமற்ற ஒரே இறை தத்துவத்தின் அடிப்படையில் இருமதங்களும் ஒருங்கிணைந்து செயற்படுவது பெரிய காரியமல்ல என்றே முகம்மது கருதினார்.

யூதர்களால் முதலில் முகம்மதுவை முழுமையாக ஏற்கமுடியவில்லை. ஓர் இறைதூதர், காட்டான்களாகிய அராபியர்களிடையே உதிர்த்திருக்கிறார் என்பதை அவர்களது மனம் ஒப்புக்கொள்ள மறுத்தது. அதே சமயம், உருவமற்ற ஒரே இறைவன் என்கிற கருத்தாக்கத்தை முகம்மது தொடர்ந்து வலியுறுத்தி வந்தது, அவரை நம்பித்தான் ஆகவேண்டும் என்கிற எண்ணத்தையும் ஏற்படுத்தியது. ஏனெனில் அரபியர்களிடையே வேறு யாருக்கும் அப்படிச் சிந்திக்கக் கூடத்தோன்றாது.

மதக் காரணங்களுக்காக இல்லா விட்டாலும், சமூகப் பாதுகாப்பு, அரசியல்ரீதியிலான பலம் போன்ற காரணங்களுக்காவது முஸ்லிம்களுடன் இணைந்து செயற்படலாம் என்று யூத குருமார்களின் சபை அப்போது தீர்மானித்தது. ஏனெனில், முகம்மதுவைப் பின்பற்றுவோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் நம்பமுடியாத அளவுக்கு அப்போது பெருகிக் கொண்டிருந்தது. ஜெருசலேத்திலிருந்து புறப்பட்ட நாளாக, அகதிகள்போல் வாழ்ந்து கொண்டிருந்த யூதர்களுக்கு அத்தகைய பாதுகாப்பு அவசியம் என்றுபட்டது. அவர்களிடம் ஓர் ஒழுங்கான மத நிர்வாக அமைப்பு இருந்ததே தவிர ஒழுங்கான இராணுவம் கிடையாது. ஒரு தகராறு என்று வருமானால் எதிர்த்துநிற்க ஆட்பலம் போதாது.

ஆனால் முகம்மதுவின் ஆராதகர்கள் உடல்வலுவும் மனப்பலமும் ஒருங்கே பெற்றவர்களாக இருந்தார்கள். மண்டியிட்டுத் தொழத் தெரிந்தவர்களாகவும் வாளேந்தி யுத்தம் புரியக்கூடியவர்களாகவும் அவர்கள் இருந்தார்கள். முகம்மது ஒரு சொல் சொன்னால் உயிரைத்தரவும் சித்தமாக இருந்தார்கள். அத்தகையவர்களுடன் நல்லுறவு கொள்வது, யுத்தங்களில் யூதகுலம் மேலும் மடியாமல் இருக்க உதவியாக இருக்கும் என்று கணக்குப்போட்டது யூத மதகுருமார்களின் சபை.

இந்தக் காரணங்களை மிக கவனமாகப் பார்க்கவேண்டும். முகம்மது, யூதர்களின் தோழமை முக்கியம் என்று கருதியதற்கு மதக் காரணங்கள்தான் உண்டு. யூதர்கள், இஸ்லாமியர்களின் தோழமையை விரும்பியமைக்கு இராணுவக் காரணங்களே பிரதானம். முகம்மதுவின் பிரச்சினை, அவநம்பிக்கையாளர்கள் சம்பந்தப்பட்டது. யூதர்களின் பிரச்சினை, சொந்த வாழ்க்கை தொடர்பானது. இரண்டும் வேறுவேறு எல்லைகளில் நிற்கிற பிரச்சினைகள், ஆயினும் ஒரு நேர்கோட்டில் வந்து இணைய வேண்டிய காலத்தின் கட்டாயம் அப்போது ஏற்பட்டது.

(தொடரும்...)

# பிறந்த நாளில் ரஜினி உதிர்த்த முத்துக்கள்!



**சென்னை** ரஜினி தலைமை ரசிகர் மன்றம் சார்பில், ரஜினியின் 63ஆவது பிறந்தநாள் விழா, ராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் நடந்தது. விழாவில், நடிகர் ரஜினிகாந்த் கலந்து கொள்வாரா என்பது குறித்து வெவ்வேறு கருத்துக்கள் இருந்தன. ஆனால், விழாவில் கலந்துகொண்டு பேசினார் ரஜினி. அப்போது, அரசியல் பற்றியும் தமது கருத்தை தெரிவித்தார்.

கடந்த, 1996ஆம் ஆண்டு, சட்டசபை தேர்தலின்போது, நான் சில கருத்துக்களை தெரிவித்தேன். அது தீயாக பற்றிக் கொண்டு, ஆட்சி மாற்றத்திற்கு உதவியது. தமிழகம் மற்றும் தேசிய தலைவர்கள் கட்டாயப்படுத்தியதால், நான் தேர்தல் தொடர்பான அறிக்கையை வெளியிட்டேன். அதன்பின், நான் அரசியலுக்கு வரவில்லை.

எனது படம் ஒன்றை குறித்து, அரசியல் தலைவர் ஒருவர் விமர்சித்ததால், அதற்கு பதில் சொல்ல வேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்பட்டது. பதில் சொல்லாமல் இருந்தால், என்னை கோழை என்று நினைத்துவிடுவார்கள். நான் என்றும் கோழையாக இருக்க விரும்பவில்லை. அதனால், எதிர்க்கருத்தை பதிவு செய்தேன்.

ஆனால், அவர்கள் சொன்ன பொயின்ட் ரொம்ப நல்ல பாயின்ட். அதற்குப் பிறகு நான் நடிக்கின்ற படங்களில் சிகரெட் பிடிக்கும் காட்சியை வைக்கவில்லை. அவர்கள் எதிர்ப்பு தெரிவித்தது வேண்டுமானால் வேறுவிதமாக இருக்கலாம். ஆனால், அவர்கள் சொன்ன கருத்து நல்ல கருத்து.

மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்றுதான் ஒவ்வொரு அரசியல் தலைவரும் வருகிறார்கள். ஆனால், இங்கு அவர்கள் நினைத்த மாதிரி எதுவும் செய்ய முடியவில்லை. காரணம், இங்கு இருக்கும் சிஸ்டம் அப்படி.

காமராஜர் போன்ற ஒரு தலைவர் தோற்கடிக்கப்பட்டார் என்றால், அதற்காக அவர், நேர்மையற்றவர் எனச் சொல்ல முடியாது. அவருக்கு நேரம் கூடி வரவில்லை. அதனால், தோற்கடிக்கப்பட்டார்.

அரசியலை நடத்துவது அவ்வளவு எளிதானது அல்ல. அரசியலுக்கு வருவேன் எனப் பொய்யான வாக்குறுதிகளை அளிப்பதற்கு நான் தயாராக இல்லை. அரசியல் என்பது பெரிய கடல். அது குறித்து, இப்போது என்னால், எதுவும் கூறமுடியாது. பொதுவாக, அரசியல் கட்சி நடத்துபவர்கள் யாரும் நிம்மதியாக இல்லை.

இங்கு அ.தி.மு.க கூட்டணியில் உள்ள சரத்குமார், தி.மு.க.வில் உள்ள சந்திரசேகர் எல்லாம் வந்திருக்கிறார்கள். போயஸ் கார்டனும் வந்திருக்கிறது. கோபாலபுரமும் வந்திருக்கிறது. சரத்குமார் ஜெயலலிதா மேடத்திடமோ, சந்திரசேகர் டாக்டர் கலைஞரிடமோ இந்த விழாவுக்கு செல்ல வேண்டும் என்று கேட்டிருந்தால், கண்டிப்பாக அவர்கள் அனுமதிப்பார்கள். காரணம், நான் அரசியலுக்கு அப்பாற்பட்டவன்.

டாக்டர் கலைஞர் என்னை ஒரு நண்பராக ஏற்றுக் கொண்டவர். அதனால், டாக்டர் கலைஞரை எனது அருமை நண்பர் என்று சொல்லிக்கொள்கிறேன். அவரை பலமுறை சந்தித்துப் பேசி இருந்தாலும், அவர் என்னிடம் அரசியல் பற்றி பேசியதில்லை.

ஒவ்வொரு வருடமும் என் பிறந்தநாள் அன்று சென்னையில் இருக்கமாட்டேன். இதற்கு முக்கிய காரணம், 22 வருடங்களுக்கு முன் நடந்த ஒரு துயரமான சம்பவம்தான்.

அப்போது நடந்த என் பிறந்தநாள் விழாவுக்கு வெளி ஊரில் இருந்து வந்த 3 பேர் ஊருக்கு திரும்பிச் சென்றபோது, விபத்தில் சிக்கி இறந்தனர். அதற்குப் பிறகுதான் நான் இந்த முடிவுக்கு வந்தேன்.

என் பிறந்த நாளில் வெளியூருக்கு சென்றுவிடுவேன். அங்கு தனியாக அமர்ந்து, இதுவரை நான் என்ன செய்தேன்? இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறேன்? இனி என்ன செய்யப் போகிறேன் என்று நினைத்துப் பார்ப்பேன். என்ன செய்ய வேண்டும் என்பதை நாம் தீர்மானிக்க முடியாது. அது ஆண்டவன் கையில் இருக்கிறது.

மிகப் பெரிய பிளான் போட்டால், அது நடக்காது. மாதம் ஆயிரம் ரூபாய் சம்பாதிக்க வேண்டும் என்று ஒருவன் நினைத்தால்,அப்படியே நடந்துவிடாது. அதிகமாக சம்பாதிக்கலாம். அல்லது அதைவிட குறைவாக சம்பாதிக்கலாம். இதிகாசம், புராணங்களில் கூட நினைத்தது அப்படியே நடந்து விடாது.

நூறு ஆண்டுகளுக்கு ஒருமுறை அபூர்வமாக வரும் 12.12.12 அன்று என் பிறந்த நாளில், என் உயிரினும் மேலான ரசிகர்களை சந்தித்தது அதிக மகிழ்ச்சி அளித்தது. ஆனால், இது நடக்குமா என்று சந்தேகமாக இருந்தது.

காரணம், என் உயிர் நண்பன், எனக்கு அனுமான் மாதிரி துணையாக இருந்த காந்தி, 10ஆம் திகதி ஹார்ட் அட்டாக்கில் இறந்துவிட்டார். 11ஆம் திகதி உடல் அடக்கம் நடந்தது. மறுநாள் காலையில் என் பிறந்தநாள்.

11ஆம் திகதியே ரசிகர்களுக்கு தகவல் சொல்லியாகி விட்டது. ஒரு நானூறு பேர் காலையிலேயே என் வீட்டுக்கு வந்து விட்டார்கள். உடனே நான் குளித்து முடித்து, அவர்களைப் பார்க்க வந்துவிட்டேன். ரசிகர்களைப் பார்த்த பிறகுதான் மகிழ்ச்சி ஏற்பட்டது.

காந்தி இறந்த கவலையில் மூழ்கியிருந்த நான், அதிலிருந்து வெளியே வர ஆரம்பித்தேன். ஆயிரம் கோடி ரூபாய் கொடுத்தாலும், அந்த வலியை தீர்த்திருக்க முடியாது.

(22 ஆம் பக்கம் பார்க்க...)

# தமிழ்த் தேசியத்தின் தலைமைத் துரோகி சம்மந்தன்

**தமிழ்** மக்களுக்கு மட்டும் ஏன் இப்படிமேலும் மேலும் துன்பம் நேர்கின்றது என்று தெரியவில்லை. தமிழ் மக்கள் யாரை நம்புவது? யாரை நம்பாமல் விடுவது என்று தெரியாமல் இருப்பதாலா? அல்லது உண்மை தெரிந்து கொண்டாலும் யாருடைய தலையாவது உருளட்டும். யாராவது யாருடைய தலையையாவது வெட்டிக் கொள்ளட்டும். எமக்கு ஒன்றும் இல்லை என்று இருந்து விடுவதாலா?

ஆயுத வன்முறையை தன் கையில் வைத்திருந்தவரை பிரபாகரனை தலைவர் என்று அடங்கியிருந்த தமிழர்கள் இப்போது புலிகளின் அடிவருடிகளான கூட்டமைப்பினரை தமிழர்களின் தேசிய காவலர்களாக நினைத்துக் கொண்டு தேர்தலில் வாக்களித்துவிட்டு பிறகு தத்தமது வேலையை பார்த்துக் கொண்டு இருந்து விடுவதாலா?

இப்படி தமிழ் மக்கள் இன்று அனுபவிக்கும் தொடர் துயரங்களுக்கு காரணங்களாக ஆயிரம் கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருக்கலாம். ஏனென்றால் நடந்து முடிந்த தவறுகளில் இயக்கங்களினதும் அரசியல் தலைமைகளினதும் தவறுகளைப் போல் தமிழ் மக்களின் தவறுகளும் அதிகம் உண்டு.

இதில் துன்பம் என்னவென்றால் தமிழ் மக்கள் இத்தனைக்குப் பிறகும் தம்மைச்சுற்றி என்ன நடக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ளாமல் மந்திரித்து விட்டவர்கள்போல் இருப்பதுதான்.

சிங்கள அரசு தமிழ் மக்களின் இழப்புக்களுக்காக பரிகாரம் செய்ய விரும்பவில்லை. அரசியல் உரிமைகளை தமிழ் மக்களுக்கு வழங்குவதற்குத் தயாராக இல்லை. தமிழ் இனத்தின் கலாசாரத்தையும் பண்பாட்டு அடையாளங்களையும் திட்டமிட்டு செயலாற்றி வருகின்றது என்றெல்லாம் தமிழ் மக்களிடம் பல அதிருப்திகளும் தணியாத சந்தேகங்களும் இருக்கவே செய்கின்றது.

ஆனாலும் இதையே தொடர்ந்தும் பேசிக் கொண்டு இருப்பதால் எந்த நன்மையும் நடக்கவில்லை என்பதையும் இதிலிருந்து மாற்றமொன்றைக் காணவேண்டுமாக இருந்தால் அதற்காக என்ன செய்யவேண்டும் என்பதையும் யாரும் சிந்திப்பதில்லை.

தமிழ் மக்களின் இந்த இயலாமையை பயன்படுத்திக் கொள்வதில் தமிழ் கூட்டமைப்பினர் வெற்றி பெற்றுள்ளனர்.

அவர்களுக்கு உளப்பூர்வமாக புலிகள் பற்றியோ, தமிழ் மக்கள் பற்றியோ, நம்பிக்கையோ விசுவாசமோ இல்லை. அதற்குக் காரணமும் உண்டு. இன்று கூட்டமைப்பில் இருப்போர் எவரும் புலிகள் இயக்கத்தில் இருந்த உண்மையான பிரபாகரன் விசுவாசிகளில்லை.

ஒரு காலத்தில் புலிகளால் தமது தலைமைகள் படுகொலை செய்யப்பட்டதை அனுபவித்தவர்கள். துரோகிகள் என்று இவர்களை கொலை செய்வதற்காக பிரபாகரன் கொலையாளிகளை ஏவிவிட்டபோது உயிரை பாதுகாத்துக் கொள்ள ஓடி ஒழிந்தவர்கள். அருகில் இருந்தவர்களையும் உறவுகளையும் புலிகள் கொலை செய்த போதும் அதைத் தடுத்து நிறுத்த முடியாத இயலாமையில் இருந்தவர்கள்.


பின்னர் புலிகளின் காலில் விழுந்து உயிர்ப்பிச்சை எடுத்து வாழ்பவர்கள். ஆகவே இவர்கள் யாரும் புலிகளின் விசுவாசிகளில்லை.

கூட்டமைப்பிலிருக்கும் புதுமுகங்கள் தமிழ் மக்களை சுரண்டியவர்கள், தமிழ் மக்களை கொலைக்களத்துக்கு புலிகள் இழுத்துச் சென்றபோது அதற்கு துணைபோனவர்கள். தமிழ் மக்கள் எல்லாவற்றையும் இழந்து கொண்டிருந்தபோதும் அதில் உழைப்பு நடத்தி சொத்துச் சேர்த்தவர்கள். அடிப்படையில் சந்தர்ப்பவாதிகள்.

இவ்வாறானவர்கள் என்னதான் உண்மையை மறைத்து ஊடுக்கு வேஷம் போட்டாலும் காலம் இவர்களை வெளிக் கொண்டுவந்து விடுகின்றது.

அப்படி அண்மையில் காலம் காட்டிக் கொடுத்த நபர்தான் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் என்று சொல்லிக் கொள்ளும் சம்மந்தர்.

அவர் கடந்தவாரம் பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது புலிகளை வெற்றி பெற்றுவிட்டதாக இங்கே யாரும் தற்பெருமை கொள்ள வேண்டாம். புலிகள் அழிந்து போனதற்கு அவர்கள் புரிந்த மனித உரிமை மீறல்களும் அப்பாவிகள் மீதான படு கொலைகளும்தான் அவர்களை வெற்றி கொண்டது என்ற அர்த்தப்பட உரையாற்றி இருந்தார்.



> “ இவ்வளவு நாளும் தமிழ்த் தேசியத்தின் தலைவராக கூறிக் கொண்டிருந்த சம்மந்தரை தமிழ் மக்களின் துரோகி என்றும் இலங்கை அரசுடன் பின் கதவால் உறவு கொண்டிருக்கும் குள்ளநரி என்றும் தமிழ் மக்களின் போராட்டத்தை காட்டிக் கொடுக்கும் பச்சோந்தி என்றும் திட்டித்தீர்க்கத் தொடங்கிவிட்டார்கள். ”

சம்மந்தரின் உரையைக் கேட்டதும் புலி ஆதரவு சக்திகள் என்றும் பிரபாகரனிடமிருந்து தமிழீழத்திற்கான போராட்டத்தின் உரிமையை இரத்தத்தினால் எழுதி எடுத்தவர்களைப்போல் தமிழ்த் தேசியத்தின் காவலர்களைப் போல் நடந்துகொள்பவர்களுக்கு கோபம் பொத்துக் கொண்டுவந்துவிட்டது.

உடனடியாகவே இவ்வளவு நாளும் தமிழ்த் தேசியத்தின் தலைவராக கூறிக்கொண்டிருந்த சம்மந்தரை தமிழ் மக்களின் துரோகி என்றும் இலங்கை அரசுடன் பின் கதவால் உறவு கொண்டிருக்கும் குள்ளநரி என்றும் தமிழ் மக்களின் போராட்டத்தை காட்டிக் கொடுக்கும் பச்சோந்தி என்றும் திட்டித்தீர்க்கத் தொடங்கிவிட்டார்கள்.

செய்ததும் கூறியதும் தவறாக இருந்தாலும் சம்மந்தர் யாரிடமும் மன்னிப்புக் கேட்கும் பேர்வழியில்லை. அப்படி இருந்திருந்திருந்தால் தமிழ் மக்களிடம் அடிக்கடி மன்னிப்புக் கேட்டிருக்க வேண்டும்.

சம்மந்தரே தனக்கெதிராக போர்க் கொடி தூக்கியிருக்கும் மறுபக்கத்து தமிழ்த் துரோகிகளைக் கண்டு அதிர்ந்துபோய், இவ்விவகாரம் தானாக அடங்கட்டும் என்று தருணம் பார்த்துக் கொண்டிருக்கையில் சம்மந்தரின் விசுவாசி அரியநேந்திரன் சம்மந்தரின் பேச்சாளராக அவதாரம் எடுத்து சம்மந்தருக்காக வக்காளத்து வாங்கியிருக்கின்றார்.

அதாவது சம்மந்தர் கூறிய கருத்துக்கள் சம்மந்தரின் தனிப்பட்ட கருத்துக்களாம். ஆகையால் வயதுபோன தலைவரை விட்டுவிடுங்கள் என்று கூறியிருக்கின்றார்.

அப்படியென்றால் புலிகள் குறித்து சம்மந்தருக்கு வேறு கருத்து உண்டு என்பதையும் அது புலிகள் அப்பாவிகளை படுகொலை செய்தார்கள் என்பதும் புலிகள் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டிருந்தார்கள் என்பதும்தானா? என்று கேட்கத் தோன்றும்.

புலிகள் இருந்தபோது புலிகள்தான் தமிழ் மக்களின் ஏகபோக தலைமை என்றும் புலிகள் பெற்றுத்தருவதுதான் தமிழ் மக்களுக்கான உயர்ந்த தீர்வாக அமையுமென்றும் கூறி தமிழ் மக்களை யுத்தத்தை நோக்கி இழுத்த கூட்டமைப்பிற்கு தலைமை தாங்கிய சம்மந்தர் தமிழ் மக்களுக்கு துரோகம் செய்திருக்கின்றார் என்று கூறப்படுவதில் தவறு இல்லையே.

பிழையென்று தெரிந்தாலும் அதை தமிழ் மக்களின் தலையில் சுமத்திவிடுவது தமிழ் இனத்துக்குச் செய்யும் துரோகம் என்ற கூச்சம் கொஞ்சமும் இவர்களிடம் இருந்ததில்லையே.

இப்படி தனிப்பட்ட கருத்துக்களும் பின்கதவு உறவுகளுமாக அரசியல் செய்யும் இவர்கள் தமிழ் மக்கள் மட்டும் துயரத்துக்குள்ளேயே வாழவேண்டுமென வற்புறுத்துகின்றனர்.

தமிழ் மக்கள் இவர்களை பதவிகளில் அமர்த்த வேண்டும். வாழ்வுக்கும் சாவுக்குமான போராட்டத்தில் தமிழ் மக்கள் இவர்களுக்கு வாக்களிக்கும் இயந்திரங்களாக மட்டும் இருந்தால்போதும்.

தமிழ் மக்களின் தலைவிதியை காலம் எப்படி தாறுமாறாக கிறுக்கி வைத்துள்ளது. இப்படியான பச்சோந்திகளிடமும் சந்தர்ப்பவாதிகளிடமும் தேசியத்தின் பெயரால் சிக்கித் தவிக்கின்றார்கள்.

அலசுவது -மதியூகி

# இலங்கையும் சர்வதேச நாணய நிதியமும்!

அமலன்

**அ**பிவிருத்தி என்ற அடிப்படையில், இலங்கையில் வெறுமனே பாதையும் கட்டடங்களுமே நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. எனினும் பொதுமக்களின் வாழ்க்கையில் எவ்வித அபிவிருத்தி ஏற்படவில்லை என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்திவருகின்றன. அத்துடன், இலங்கை அரசாங்கம், பொதுச் சேவைகள் மற்றும் நிவாரணங்கள் என்பவற்றில் குறைப்புகளை ஏற்படுத்தி வருவதாகவும் உள்ளூர் அரசியல் கட்சிகள் குற்றம் சுமத்துகின்றன.

இலங்கையில் போர் முடிவடைந்த பின்னர் ஜனநாயகம் ஏற்படுத்தப்படும் என்று எதிர்ப்பார்த்த உள்நாட்டு அரசியல் சக்திகளும் சர்வதேச நாடுகளும், இன்று அந்த ஜனநாயகம் இன்னும் ஸ்தாபிக்கப்படவில்லை என்று தெரிவித்துவருகின்றன. இதற்கு காரணம், இலங்கையில் போருக்கு பின்னர் இடம்பெற்று வருகின்ற அரசியல் மற்றும் அதற்கு அப்பாலான விடயங்களாகும்.

போரின்பின்னர் இடம்பெயர்ந்தவர்களை உடனடியாக மீள்குடியமர்த்திவிட வேண்டும் என்று அடிப்படையில் பல்வேறு குறைபாடுகளுடன், மீள்குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டதாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுவந்தன.

இது இறுதியாக ஐக்கிய நாடுகள் மற்றும் அமெரிக்கா என்ற அளவில் விமர்சனம் செய்யும் அளவுக்கு சென்றுவிட்டது.

இதன்போது மீள்குடியேற்றப்பட்ட மக்கள், உரிய ஏற்பாடுகள் செய்துகொடுக்காமலேயே மீள்குடியேற்றப்பட்டார்கள் என்று அமெரிக்கா சுட்டிக்காட்டியிருந்தது. இந்த பிரச்சினையை அடுத்து இலங்கையில் அடுத்தடுத்து அரசியல் ரீதியான பிரச்சினைகள் இடம்பெற்றுவருகின்றன. முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா சிறையில் அடைக்கப்பட்டமை, உட்பட்ட பல்வேறு அரசியல் பிரச்சினைகள் இடம்பெற்றன.

அவை அனைத்துமே இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான விமர்சனங்களுக்கே உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வழிவகுத்தன. இந்த நிலையில் இலங்கையில் தற்போது இடம்பெற்றுவரும் பாரிய அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில், உள்நாட்டில் இலங்கை அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுவருகிறது

அபிவிருத்தி என்ற அடிப்படையில், இலங்கையில் வெறுமனே பாதையும் கட்டடங்களுமே நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. எனினும் பொதுமக்களின் வாழ்க்கையில் எவ்வித அபிவிருத்தி ஏற்படவில்லை என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்திவருகின்றன.

அத்துடன், இலங்கை அரசாங்கம், பொதுச்சேவைகள் மற்றும் நிவாரணங்கள் என்பவற்றில் குறைப்புகளை ஏற்படுத்தி வருவதாகவும் உள்ளூர் அரசியல் கட்சிகள் குற்றம் சுமத்துகின்றன.

குறிப்பாக சர்வதேச நாணய நிதியம் என்ற ஐ.எம்.எப் நிறுவனத்தின் கட்டளைப்படியே இலங்கை அரசாங்கம், செயற்பட்டுவருவதாக இலங்கையின் எதிர்க்கட்சிகள் தெரிவித்து வருகின்றன.

ஏனெனில் ஐ.எம்.எப் இலங்கைக்கு வழங்கி வரும் கடன் தொகைகளின்போது தற்போது நிபந்தனைகள் விதிக்கப்படுவது குறைவாக அமைந்துள்ளமையை எதிர்க்கட்சிகள் சுட்டிக் காட்டுகின்றன. மறுபுறத்தில் ஐ.எம்.எப் விதித்த செலவுகளை கட்டுப்படுத்தும் நிபந்தனைகளுக்கு உட்பட்டே இலங்கை அரசாங்கம் வரவுசெலவுத் திட்டத்தில், நிவாரணங்களை வழங்குவதை குறைத்து வருகிறது. அத்துடன் அரச பணியாளர்களுக்கு சம்பள உயர்வுகளை உரியவகையில் வழங்குவதில்லை போன்ற குற்றச்சாட்டுக்களும் அரசாங்கத்தின் மீது சுமத்தப்படுகின்றன.

2013ஆம் ஆண்டு வரவுசெலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டபோது, இந்தக் குற்றச்சாட்டுக்கு எதிர்க்கட்சிகளினால் காரணம் நிரூபிக்கப்பட்டது. இந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுவிட்டதாக எதிர்க்கட்சிகள் கூறிக்கொண்டிருக்கும்போதே இலங்கையில் பெற்றோலின் விலை 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டது.

இதற்கும், சர்வதேச நாணயநிதியத்துக்கும் என்ன தொர்பு என்று கேட்கத்தோன்றும். எனினும் சர்வதேச நாணய நிதியத்தின், இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி கோசி மாத்தாய், கடந்த வாரம் நிகழ்வு ஒன்றில் வெளியிட்ட கருத்தே எதிர்க்கட்சிகளின் இந்தக் குற்றச்சாட்டுக்கு காரணமாக அமைந்துவிட்டது.

இலங்கையில் பெற்றோல் இறக்குமதிக்கு அதிக செலவீனம் மேற்கொள்ளப்படுகிறது. இந்த நிலையில், அந்த செலவீனத்தை ஈடுசெய்யக் கூடிய வழிகளை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும் என்று கோசி மாத்தாய் வலியுறுத்தியிருந்தமையை எதிர்க்கட்சிகள் தமது குற்றச்சாட்டுக்கு ஆதாரமாக முன்வைத்துள்ளன.

# கலாசார யுத்தம் திணிக்கப்படுகிறதா?

சுற்றுலாத்துறையை மேம் படுத்துவதற்காக அல்லது அந்நிய செலாவணியை அதிகரிக்கும் நோக் கில் சட்டரீதியாக்குவது என்பது பிழையாக வழிநடத்துவது மட்டு மன்றி பாலியல் தொழிலில் ஈடுபடு வோரின் உரிமைகள் பாதிப்புக் குள்ளாகுவதற்கான ஆபத்தான நிலையை அதிகரிக்கச் செய்யும்.

அதனால் நாங்கள் திரு அஜித் பிரசன்னவினால் பரிந்துரை செய்யப் பட்ட பாலியல் தொழிலை சட்டரீதி யாக்க எடுத்த அணுகு முறையானது பெண்களின் உடலை ஒரு போகப் பொருளாக ஆக்கும் ஆபத்தான நிலையை ஏற்படுத்தும் என்பதனால் அதனை வன்மையாக கண்டிக்கின் றோம்.

(சென்றவாரத் தொடர்ச்சி...)

**இவர்** ஒரு பெண் என்ற அடிப்படையில் தனிப்பட்ட தனது விருப்பு சார்ந்த அபிப் பிராயத்தை ஒட்டுமொத்த பெண்களின் விருப்பாகச் சித்தரிப்பதற்கு முயற்சிக்கக் கூடாது. இது கட்டுக்கோப்பான ஒரு சமூக வாழ்வைச் சிதைத்து நாட்டை பல்வேறு வகையான சீரழிவுகளுக்கும் இட்டுச் செல்லும்.

வழிகாட்ட வேண்டிய ஒரு உன்னத மார்க்கத்தின் பின்னணியைக் கொண்டிருந்த ஸர்மிலா ஸெய்யித் "புனித இஸ்லாம் விபச்சாரத்துக்கு என்ன விளக்கமளித் திருக்கின்றது என்பதை ஆராய்வதோடு மனித நாகரிகத்துக்கு இழுக்கான ஒரு செயலைச் செய்வதற்கும் பெண்களின் கண்ணியத்தை இழிவு படுத்தியதற்குமாக ஒட்டு மொத்த இலங்கையர்களிடம் பொதுமன்னிப்புக் கேட்க வேண்டும் என்றும் தான் வலியுறுத்துவதாக அல்ஹாஜ் நஸீர் அந்தக் கண்டன அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

**கறுப்பு வெள்ளைக் கண்டனம் !**

இதனிடையே கறுப்பு வெள்ளை கலந்த கண்டன அறிக்கையொன்றும் வெளியிடப் பட்டுள்ளது. இலங்கையில் வெளிநாட்டு நிதியுதவியோடு இயங்குகின்ற சுமார் 67 நிறுவனப் பிரதிநிதிகள் இதில் கையொப்ப மிட்டுள்ளார்கள். பாக்கியசோதி சரவணமுத்து தலைமையிலான மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், முல்லைத்தீவு மாதர் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு ஒன்றியம் (MWDRF), மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியம் (MWDF), மட்டக்களப்பு அனர்த்த முகாமைத்துவ பெண்கள் கூட்டணி (WCDM) நிமல்க்கா பெர்னாண்டோ, பேராசிரியை சித்திரலேகா, வளவாளர் ஏ. சொர்ணலிங்கம் உள்ளிட்டோர் இதில் முக்கியமானவர்கள்.

கறுப்பு வெள்ளையாகத் தெரியும் அந்தக் கண்டன அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தாவது, "2012 நவம்பர் மாதம் 20ஆம் திகதி தென்மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினரான அஜித் பிரசன்ன அவர்களால் நாட்டில் உல்லாசப் பயணத் துறையை மேம்படுத்த பாலியல் தொழில் சட்டபூர்வ மாக்கப்பட வேண்டும் எனக் கேட்டிருந்ததாக சில ஊடகங்கள் குறிப்பிட்டிருந்தன.

திரு பிரசன்ன அவர்கள் தனது கருத்து தொடர்பாக தெளிவாக இருக்க வேண்டும். பாலியல் துறை இலங்கையில் குற்றமாக்கப் படாமலிருந்தாலும் பொது இடங்களில் அநாச்சாரமாக நடந்துகொள்வதும் விபச்சார விடுதிகளை நடாத்துவதுமே சட்டரீதியற்றது.

அவர் இந்த இரண்டாவதாகக் குறிப்பிட்ட வற்றை கருதியிருந்தால் எல்லாவகையான பாலியல் தொழிலையும் சட்டமாக்குவது தொடர் பாக (ஒரு விவாதத்திற்குறிய விடயமானபோதும்) பாலியல் தொழிலாளர்கள், நிறுவனங்கள் மாத்திர மன்றி உலகெங்கிலுமுள்ள பெண் உரிமை செயற்பாட்டாளர்களும் இதனைப் பரிந்துரை செய்துவருவதனை குறிப்பிட விரும்புகிறோம்.

இருந்தபோதிலும் பாலியல் துறையில் ஈடு படும் பெண்களின் பாதுகாப்பு மற்றும் உரிமை களைப் பாதுகாக்கும் நோக்கிலும் அவர்களின் சுயவிருப்புகளை பாதுகாக்க வழிவகுக்கும் வகையிலும் பாலியல் தொழிலை சட்டரீதியாக் கல் அல்லது குற்றமற்றதாக்கல் போன்ற நடவடிக்கைகளை ஊக்கப்படுத்த வேண்டும்.

சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக அல்லது அந்நிய செலாவணியை அதிகரிக்கும் நோக்கில் சட்டரீதியாக்குவது என்பது பிழையாக வழிநடத்துவது மட்டுமன்றி பாலியல் தொழிலில் ஈடுபடுவோரின் உரிமைகள் பாதிப்புக்குள்ளாகு வதற்கான ஆபத்தான நிலையை அதிகரிக்கச் செய்யும்.

அதனால் நாங்கள் திரு அஜித் பிரசன்ன வினால் பரிந்துரை செய்யப்பட்ட பாலியல் தொழிலை சட்டரீதியாக்க எடுத்த அணுகு முறையானது பெண்களின் உடலை ஒரு போகப்பொருளாக ஆக்கும் ஆபத்தான நிலையை ஏற்படுத்தும் என்பதனால் அதனை வன்மையாக கண்டிக்கின்றோம்.

அதேவேளை 2012 நவம்பர் மாதம் 20ம் திகதி மட்டக்களப்பு ஏறாவூரைச் சேர்ந்த பெண் உரிமை செயற்பாட்டாளரான சர்மிளா செய்யித் BBC தமிழோசைக்கு வழங்கிய நேர்காணலின் போது பாலியல் தொழிலை இலங்கையில் சட்டமாக்கினால் பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்களுக்கு பாதுகாப்பு கிடைக்கக்கூடும் என அவரது அபிப்பிராயத்தை குறிப்பிட்டிருந்தார்.

அவர் தெரிவித்த கருத்தானது முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் விமர்சிக்கப்பட்டதுடன் அவர் தனது குழந்தையுடன் தலைமறை வாகச் செய்யுமளவிற்கு அச்சுறுத்தல்கள் ஏற்படுத்தப்பட்டது.

ஏறாவூரிலிருக்கும் அவரது குடும்பமும் அச்சுறுத்தப் பட்டுள்ளதோடு சர்மிளாவின் தங்கை நடாத்தி வந்த முன்பள்ளிக்கூடமும் 2012 டிசம்பர் மாதம் 22ம் திகதி தீக்கிரை யாக்க முயற்சிக்கப்பட்டுள்ளது.

சர்மிளாவுக்கும் அவரது குடும்பத்திற்கும் ஏற்படுத்தப்பட்ட அச்சுறுத்தல்களை வன்மை யாகக் கண்டிக்கின்றோம்.

அது இலங்கை அரசியலமைப்பில் குறிப் பிடப்பட்டுள்ள பொதுக் கொள்கையுடன் தொடர்புபட்ட பிரச்சினைகள் தொடர்பாக சுதந்திரமாக ஒருவரது கருத்து தெரிவிக்கும் உரிமையை இழிவுபடுத்துவதாக அமையும்.

விவாதங்கள் மற்றும் கருத்து முரண்பாடு கள் தவிர்க்க முடியாததோடு அது இத்தகைய சிக்கல் வாய்ந்த பிரச்சினைகளின்போது வரவேற்கத் தக்கது. அவரது கருத்தானது ஆதிக்க கருத்துக்கு (dominant point) மாற்றமானது என்ற காரணத்தினால் ஒருவரை மௌனமாக்கும் வகையில் அச்சுறுத்துவது என்பது ஜனநாயக நாட்டில் எதிர்பார்க்க முடியாத ஒன்றாகும்.

முக்கியமாக சர்மிளாவை விமர்சிக்க மதத்தையும் கலாச்சாரத்தையும் சம்பந்தப் படுத்திய சில தனிநபர்கள் மற்றும் நிறுவனங் களின் முயற்சியை கண்டிக்கிறோம். அத்த கைய முயற்சிகள் சட்டத்திற்கு அமைவில்லாத வன்முறையை அவருக்கெதிராக கட்டவிழ்த்து விடுவதை தூண்டுவதாக அமையும்.

அத்தகைய அச்சுறுத்துவதற்காக மதத்தை யும் கலாச்சாரத்தையும் சந்தர்ப்பவாதத்தன மாகவும் ஆயுதமாகவும் பயன்படுத்துவது அர்த்தமிக்க மற்றும் அறிவுபூர்வமான கலந்து ரையாடல்களுக்கு தடையாக அமைவதோடு நமது நாடு போதுமானளவு அனுபவப்பட்ட குறுகிய மனப்பான்மை மற்றும் மேலாதிக்கம் போன்றவற்றை வளர்ப்பதாக அமையும்.

(22 ஆம் பக்கம் பார்க்க...)

# மட்டக்களப்பில் அதிகரிக்கும் தொழுநோயாளர்கள்

வாகரை வாணி

**தொ**ழுநோயாளர்களின் எண்ணிக்கை மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்துக் காணப்படுகின்றது. கொழும்புக்கு மாநகரத்துக்கு அடுத்தபடியாக இலங்கையில் தொழுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகளவில் காணப்படும் இரண்டாவது இடமாக மட்டக் களப்பு மாவட்டம் உள்ளது.

இவ்வாண்டின் டிசம்பர் மாத நடுப்பகுதி வரை மட்டக் களப்பு மாவட்டத்தில் 130 புதிய தொழுநோயாளர்கள் அடையாளம் காணப்பட் டுள்ளார்கள். கடந்த ஆண்டு இந்த மட்டக்களப்பில் இனங் காணப்பட்ட புதிய தொழு நோயாளர்களின் எண் ணிக்கை 151 ஆக இருந்தது என விஷேட தோல் நோய் வைத்திய நிபுணர் என். தமிழ்வண்ணன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் அதிகரித் துக் காணப்படும் தொழு நோயைக் கட்டுப்படுத்துவதற் குரிய முயற்சிகளை தொழு நோய்த் தடுப்பு இயக்கம் எடுத்துவருகின்றது.

தொழுநோய் என்பது மைக்ரோ பக்ரீரியம் லெப்ரே எனும் நோய்க்காரணி நோய் உயிரியினால் உண்டாக்கப் படுகின்ற ஒரு உயிர்க்கொல்லித் தொற்றுநோயாகும்.

தொழுநோயை குஷ்டம். குஷ்டரோகம், பெருவியாதி என்றும் அழைப்பதுண்டு.

இந்நோயை உண்டாக்கும் நோய் உயிரி முதன் முதலில் 1873 ஆம் ஆண்டுதான் மருத்துவரான கேர்கார்ட் ஆமர் தின்சீன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

தொழுநோய் ஒரு நோயாளியிலிருந்து இன் னொருவருக்குத் தொற்றக் கூடியது. சிகிச்சை பெறாத தொற்றக் கூடிய நோய் வகை யைக் கொண்ட ஒரு நோயாளி இருமும் போதோ அல்லது தும்மும் போதோ இந்தக் கிருமிகள் காற்றில் கலந்து மற்றவர்களுக்குப் பரவும்.

அதனால் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளி களை சமுதாயத்திலிருந்து ஒதுக்கிவைக்கும் அல்லது புறக்கணிக்கும் நிலை உள்ளது.

தொழுநோய் என்பது புற நரம்புகள் பகுதிகளிலும் மற்றும் சுவாசக்குழாய்களில் காணப் படும் கோழைகளிலும் ஏற்படும் குருண, குருண மணி நோய் களாகும். தோலில் காணப்படும் சீழே அதன் முதல் அறிகுறி யாகும்.

உணர்ச்சியற்ற அல்லது உணர்ச்சி குறைந்த வெளிர்ந்த அல்லது சிவந்த தேமல் மற்றும் அதன் மீது முடி உதிர்ந்து காணப்படுதல், கை கால்களில் மதமதப்பு அல்லது ஊசி குத்துவது போன்ற உணர்வு இருத்தல், தோல் தடித்தும் அதிக மினு மினுப்புடன் காணப்படுதல், உடலில் ஏதாவது ஒரு பகுதி யில் வியர்க்காமலும் அதே சமயம் உடலின் மற்றப்பகுதி களில் வியர்வை பெருகியும் காணப்படும், காது மயிர் தடித் திருத்தலும் மற்றும் கண் புருவ மயிர்கள் உதிர்தல், கன்னங்கள் தொங்குவது போன்ற நிலை, பாதங்களில் சாம்பல் பூசியது போன்ற பெரிய வெடிப்பும் காணப்படும், உள்ளங்கையில் சதை மேடுகள் சூம்பியிருக்கும், கைகால் விரல்கள் மடங்கியிருத் தல், குறண்டியிருத்தல், விரல் கள் திரும்பியிருத்தல், கண்விழி மூட முடியாமல் கருவிழியிலே புண் இருத்தல், முகத்தில் பாதி செயலிழத்தல், மணிக்கட்டுத் தொங்கி விடுதல், கணுக்கால் செயலிழந்து போதல், ஆறாத உணர்ச்சியற்ற நீண்ட நாட்பட்ட புண், சட்டையில் பொத்தான் போட முடியாமை பேனாவைப் பிடித்து எழுத முடியாமை போன்றன இந்த தொழுநோயின் அறிகுறிகளாகும்.

இதன் பாதிப்பால் உடலுறுப் புக்களுக்கு உணர்ச்சியின்மை யும் விரல்கள் மற்றும் பாதங் களில் கலக்கட்டுக்களில் இழப்பு ஏற்படுவதால் இவை விரல்கள் உதிர்ந்தது போலக் காட்சிதரும். இவையே தீவிரமடையும்போது நோயாளி உயிர் துறக்கும் நிலையை அடைவதுமுண்டு.

பெரும்பாலும் நோய் எதிர்ப் பாற்றல் குன்றியவரையே இது பாதிக்கின்றது.

நோயின் ஆரம்ப நிலையி லேயே இதனைக் கண்டுபிடித் துச் சிகிச்சை அளிக்காது விட்டால் தொழுநோயின் தீவிரம் அதிகரித்து கடைசியில் அது தோல், நரம்பு, விரல்கள் மற்றும் கண்களுக்கு நிரந்தரப் பாதிப்பை ஏற்படுத்தி விடும்.

தூநோயாளிகளை இடம் பெயர் வைத்திய சிகிச்சை முகாம்களிலேயே கண்டு பிடிக்க முடிகின்றது. இப்பொழுது இந்த நோயை நாங்கள் மக்களின் காலடிக்கே சென்று கண்டு பிடிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுவதால் அதிகம் நோயாளி கள் அடையாளம் காணப்படு கின்றார்கள்.

இப்பொழுது நாங்கள் முன் கூட்டியே நோயாளிகளைக் கண்டுபிடிப்பதால் இந்த அதிகரிப்பு என்பது எதிர் வரும் வருடம் அல்லது அதற்கடுத்த வருடம் குறை வதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. அங்கவீனம் ஏற்படக்கூடியளவுக்கு நோயின் தீவிரம் இப்பொழுது இல்லை காரணம் நோயின் அறிகுறிகளை அவர்கள் அடையாளம் காணு கிறார்கள், ஆனால் இந்நோய் பற்றிய விழிப்புணர்வு மிகக் குறைவாகவே இருக்கின்றது.







பொது நிறுவனங்கள் சமூக அமைப்புக்கள் இதில் இன்னமும் தீவிரமாக ஈடுபடவேண்டும்.

இனங்காணப்பட்ட வறிய நோயாளிகளுக்கு உதவி தேவை. அவர்களது நாளாந்த ஜீவனோபாயமும் பாதிக்கப்பட் டிருக்கின்றது. நடுத்தர வயதினரைத் தான் இந்த நோய் அதிகம் பாதிக்கின்றது. என்கிறார் தொழுநோய்த் தடுப்பில் தீவிர கவனமெடுத்து மட்டக்களப்பில் இடம்பெயர் தோல் நோய்ச் சிகிச்சை முகாம்களை நடத்தி வரும் விஷேட தோல் நோய் வைத்திய நிபுணர் என். தமிழ்வண்ணன் அவர்கள்.

தூசனத்தொகை அடிப்படை யில் பார்த்தால் அதாவது குறைந்த எண்ணிக்கையைக் கொண்ட சனத்தொகையில் கூடிய நோயாளர்கள் என்ற விகிதாசாரப்படி பார்த்தால் மட்டக்களப்புத்தான் முதலிடத் தில் உள்ளது. நோயாளர்களின் கூடிய எண்ணிக்கையின் அடிப் படையில் கணித்தால் கொழும்பு மாநகரம்தான் முதலிடத்திலும் அதற்கடுத்த படியாக மட்டக்களப்பும் உள்ளது. என்று கூறுகிறார் மாவட்ட தொழுநோய்த் தடுப்பு பொது சுகாதாரப் பரிசோதகர் பி. மனோகரன் அவர்கள்.

நோயின் அறிகுறி வெளிப் படையாகத் தெரியவர சுமார் ஆறு வருடங்களாவது செல்லும். ஆயினும் நோய் வெளிப்பட்டு கூடிய பட்சம் ஆறு மாத காலத்திற்குள்ளாக வாவது சிகிச்சை பெறா விட்டால் அங்க விகாரங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. புதிய நோயாளர்கள் வருடாந்தம் 130 -140 வரை அடையாளம் காணப்படுகின்றார்கள்.

(22 ஆம் பக்கம் பார்க்க...



# விளையாட்டு வினையானது?



**இங்கிலாந்து** இளவரசர் வில்லியமின் மனைவி இளவரசி கேத் மிடில்டன் கர்ப்பமாக இருக்கிறார். இவர் கடந்த வாரம் செவ்வாய்க்கிழமை மத்திய லண்டன் பகுதியில் உள்ள கிங் எட்வர்ட் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றார். மருத்துவமனைக்கு போன் செய்து கேத்மிடில் டனுக்கு சிகிச்சையளித்த தாதியான ஜெசிந்தாவுடன் உரையாடிய ஆஸ்திரேலிய ரேடியோ ஜாக்கிகள் மெல் கிரீக் மற்றும் மைக்கேல் கிறிஸ்டியன் ஆகிய இருவரும், தங்களை ராணி எலிசபத் என்றும் இளவரசர் சார்லஸ் என்றும் அறிமுகப் படுத்திக் கொண்டு, கேத்துக்கு அளித்த சிகிச்சை விவரங் களைப் பெற்றனர். அதன்பின் ரேடியோ வில் பரபரப்பாக செய்தி வெளியிட்டனர்.

இதனால், மருத்துவ மனையில் பரபரப்பு ஏற்பட்டது. இவர்கள் ஏமாற்றிய விஷயம் பின்னர்தான் ஜெசிந்தா வுக்கு தெரிந்தது. இந் நிலையில், கடந்த 7ஆம் திகதி ஜெசிந்தா மர்மமான முறையில் இறந்து கிடந்தார்.

இந்தியாவின் கர் நாடக மாநிலத்தை சேர்ந்த தாதியான ஜெசிந்தா சல்தானா (46) மருத்துவமனையில் பணியில் இருந்துள்ளார். இவர்தான் ரேடியோ ஜாக்கி களுக்கு தகவல் அளித்த தாகக் கூறப்பட்டது. இந்நிலை யில், அண்மையில் மருத்துவ மனைக்கு அருகில் உள்ள தாதியர் குடியிருப்பில் ஜெசிந்தா மர்மமான முறை யில் இறந்து கிடந்தார். இதனால் மருத்துமனை நிர்வாகமும், சார்லஸ் கேத் தம்பதியும் அதிர்ச்சி அடைந்தனர். ஜெசிந்தாவின் மரணத்தை விளக்க முடிய வில்லை என்று பொலிசார் கைவிரித்தனர்.

இந்நிலையில், ஜெசிந்தாவை அவரது கணவர் பெனடிக்ட் பர்போசா 2 நாளாக தொடர்பு கொள்ள முடியாமல் இருந் துள்ளார். இதனால் மனைவி யின் தோழிக்கு போன் செய்து விசாரிக்க கூறியுள்ளார். ஜெசிந்தா வீட்டுக்கு சென்ற போதுதான் அவர் தூக்கில் தொங்கியபடி இருந் தது தெரியவந்துள் ளது. தகவல் அறிந்து வந்த பொலிஸார் ஜெசிந்தாவை மீட்ட போது, அவர் மயக்க நிலையில் இருந்தார். ஆனால், உடலில் உயிர் இருந்தது. மருத்துவமனையில் அவர் இறந்துள்ளார் என்று டெய்லி மெயில் பத்திரிகை பரபரப்பு தகவல் வெளியிட் டுள்ளது.

லண்டனில் மர்ம மான முறையில் இறந்த இந்திய தாதியான ஜெசிந்தா சல்தான்ஹா குடும்பத் துக்கு ரூ.2.7 கோடி இழப்பீடு அளிப்பதாக ஆஸ்திரேலியாவை சேர்ந்த தனியார் எப்.எம் ரேடியோ அறிவித்துள்ளது. ரேடியோ அறிவிப் பாளர்களின் செயலால் ஒரு உயிர்ப்பலியான சம்பவத் துக்கு உலகம் முழுவதும் கடும் கண்டனம் எழுந்தது. இதனால் ஹாட் நியூஸ் நிகழ்ச்சியையே 2டே எப்.எம் ரேடியோ நிறுத்திவிட்டது. நடந்த சம்பவத்துக்காக மெல்கிரைக்,மைக்கேல் கிறிஸ்டியன் மன்னிப்பு கேட்டு கதறி அழுதனர்.

இதற்கிடையே, 2டே எப்.எம் ரேடியோ வெளியிட்டுள்ள அறிக்கையில், நர்ஸ் ஜெசிந்தா சல்தான்ஹா குடும்பத்துக்கு நிதியுதவி செய்வதற்காக, இந்த ஆண்டு இறுதிவரையில் எங்கள் ரேடியோவில் ஒலிபரப்பாகும் விளம்பரங் கள் மூலம் கிடைக்கும் இலாபம் அனைத்தையும், அவரது குடும்பத்துக்கு அளிப்போம். இது ரூ.2.7 கோடி என்ற அளவில் இருக்கும். தாதி ஜெசிந்தா மரணத்தை தொடர்ந்து கொள்கைகளை மறு சீராய்வு செய்வதற்காக விளம்பரங்களை நிறுத்தி வைத்திருந்தோம். தற்போது நிதியுதவிக்காக மீண்டும் விளம்பரங்களை ஒலிபரப்பு ஆரம்பித்துள்ளோம் என்று கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையே, இங்கி லாந்து தொழிலாளர் கட்சி எம்.பி.யான கெய்த் வாஸ் கடந்த லண்டனில் உள்ள ஜெசிந்தாவின் கணவர் பெனடிக்ட் பர்போசா (49), குழந்தைகள் லிசா (14), ஜுனால் (16) ஆகியோரை சந்தித்து பேசினார். அதன் பின்னர் அவர் அளித்த பேட்டியில், ஜெசிந்தா மரணம் குறித்து முழு அளவில் விசாரணை நடத்தப்பட்டு, குற்றவாளிகள் தண்டிக்கப் பட வேண்டும். மேலும், நடந்த விவரங்கள் அனைத்தும் வெளியே கொண்டு வரப்பட வேண்டும் என்றார்.

---



# புலிகளின் வதை முகாமில்

## மணியம்

### வதை 41

ஒரு காலத்தில் எமது கட்சி கொள்கைப் பிடிப்பில் மிகவும் உறுதியானதாகவும், கட்டுக்கோப்பில் உருக்குப் போலவும் இருந்த ஒன்றாகும்.

பொதுவாகவே அந்தக் காலத்தில் உலகம் முழுவதும் ஒரு கருத்துச் சொல்வார்கள். அதாவது இறுக்கமான கட்டுக்கோப்பில் கத்தோலிக்க திருச் சபையும் கம்யூனிஸ்ட் இயக்கமும் ஒரே மாதிரியானவை என்று. ஆனால் கால ஓட்டத்தில் இரண்டுமே ஆட்டம் கண்டுவிட்டன.

இந்த நிலை எங்கள் கட்சியிலும் ஏற்பட்டது. எங்கள் கட்சியிலிருந்து கருத்து வேறுபாட்டால் ரோகண விஜேவீர விலகிச் சென்று ஜே.வி.பியை உருவாக்கிய போது, எமது அணியிலிருந்து ஒரு சிலரே அவருடன் சென்றனர். அவரது இயக்கம் ஒரு குட்டி முதலாளித்துவ சிங்கள குறுந்தேசியவாத இயக்கம் என்ற தத்துவார்த்தத் தெளிவு எமது கட்சியினர் அனைவருக்கும் இருந்தது. ஆனால் அவர் 1971ஆம் ஆண்டு ஏப்ரலில் ஆயுதக் கிளர்ச்சி செய்த போது, அவரது இயக்கத்தின் சரி, பிழை எல்லாவற்றையும் ஒருபக்கம் ஒதுக்கி வைத்துவிட்டு, 'ஜே.வி.பி. தான் உண்மையான புரட்சிகர இயக்கம்' என்ற கருத்து எமது கட்சியில் – குறிப்பாக இளைஞர் அணியினர் மத்தியில் உருவாகி, எமது கட்சி முதல் தடவையாக ஆட்டம் காணத் தொடங்கியது.

அதேபோல தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாகி 1976இல் வட்டுக்கோட்டையில் 'தமிழீழ' தீர்மானம் எடுக்கப்பட்ட போது, அந்த இயக்கம் சம்பந்தமாகவும் அதனது தனிநாட்டு கொள்கை சம்பந்தமாகவும் (அது ஏகாதிபத்திய சார்பானது, தவறானது என்ற) தெளிவான உறுதியான நிலைப்பாட்டில் இருந்த எமது கட்சியினர், 1983ன் பின்னர் தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் ஆரம்பமான போது பலர் நிலை தளும்பி விட்டனர். தீவிரமான தமிழ் தேசியவாத அலையில் எமது கட்சி ஆட்டம் கண்ட சூழ்நிலையில், பலர் பல்வேறு தமிழ் தேசியவாத இயக்கங்களுடன் இணைந்து கொண்டனர்.

1972இற்கு முன்னர் எமது கட்சியின் பொதுச்செயலாளராகவிருந்த நா.சண்முக தாசன் கூட (அந்த ஆண்டுதான் அவர் கட்சியின் சகல பொறுப்புகளிலிருந்தும் விலக்கப்பட்டார்) பின்னர் புலிகள் இந்தியாவை எதிர்த்துப் போரிட்டார்கள் என்ற ஒரேயொரு காரணத்தை வைத்து, (1962இல் நடைபெற்ற இந்திய – சீன யுத்தத்துக்குப் பின்னர் இந்தியாவை விஸ்தரிப்புவாத நாடு என்றே எமது கட்சி கூறி வந்தது) புலிகளை ஆதரித்து அறிக்கை விடும் நிலைக்குச் சென்றார் என்றால், நிலைமையின் விபரீதத்தைப் புரிந்து கொள்ளலாம்.

இந்த நிலைமையில் என்னைப் போன்ற சில 'பேயன்கள்' தமிழ் தேசியவாத இயக்கங் களில் சேர்ந்து பிழைக்கத் தெரியாமல் போனதை தயாபரன் ஒரு தரக்குறைவாக எண்ணினானோ என்னவோ? (இவன் போன்றவர்களும் இப்படித்தான் எண்ணியிருப்பார்களோ என்னவோ)

அவன் கேள்வி கேட்ட பின்னரான சற்று நேரத்துக்குள்ளாகவே எமது கட்சியில் இருந்து வெளியேறி பல்வேறு தமிழ் தேசியவாத இயக்கங்களில் சேர்ந்தோரை நினைத்த போது, இவ்வளவு தொகையானோர் சேர்ந்திருக்கிறார்களே என முதல் தடவையாக அதிர்ச்சியாகவும் சற்று ஜீரணிக்க முடியாததாகவும் இருந்தது.

முதல் இயக்கமாக புலிகள் இயக்கத்தை நினைத்துப் பார்த்தேன். அங்கே எமது கட்சியிலிருந்து சென்ற மூர்த்தி – எமது கட்சியுடன் இருக்கும் போது பாலு – (மூர்த்தி: புலிகளின் அரசியல் பொறுப்பாளராக இருந்த தமிழ்ச் செல்வனின் சொந்த அண்ணன்) புலிக-ளின் அரசியல் பொறுப்பாளராக இருக்கிறார். எமது கட்சியிலிருந்து சென்ற புதுவை இரத்தினதுரை புலிகளின் கலை பண்பாட்டுத்துறைப் பொறுப்பாளர். என்னுடன் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிலிருந்து படிப்பைத் துறந்து கட்சிக்கு ஒன்றாக வந்தவரும், என்னுடன் கிளிநொச்சிப் பிரதேசத்தில் கட்சி மற்றும் விவசாயிகள் சங்கப் பணிகள் செய்தவருமான நா.யோகேந்திரநாதன் புலிகளின் கலை பண்பாட்டுக் கழக முக்கியஸ்தராக இருப்பதுடன், கிளிநொச்சியிலிருந்து வெளியாகும் புலிகளின் 'ஈழநாதம்' பத்திரிகைக்கும் ஆசிரியர்.

அதேபோல என்னுடன் அதே கல்லூரியி லிருந்து படிப்பைத் துறந்து கட்சிக்கு வந்து, வவுனியா பிரதேசத்தில் கட்சி மற்றும் விவசாயி கள் சங்கப் பணிகள் செய்த அ.கௌரிகாந்தன், அரசியல் பொறுப்பாளர் மூர்த்தியின் தாவடிக் காரியாலயத்தில அவரது முக்கிய உதவியாளர். (கௌரிகாந்தன் முன்னதாக புளொட் இயக்கத் தில் டி.சிவராமுடன் சேர்ந்து, தத்துவ ஆசிரியராக இருந்துபின்னர் தான் புலிகள் இயக்கத்துக்குச் சென்றவர். கடைசியாக ஈ.என்.டி.எல்.எப். இயக்கத்தில் இணைந்து பெங்களூரில் இருந்தார். இப்போதைய நிலை தெரியவில்லை) எமது கட்சியைச் சேர்ந்த மட்டுவில் மானாவளை கிராமத்தைச் சேர்ந்த முருகேசு ஆசிரியர் 'அன்பு மாஸ்டர்' என்ற பெயரில் புலிகளின் இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் அரசியல் விரிவுரையாளர். இப்படி இன்னும் பலர்.

ஏனைய தமிழ் தேசியவாத இயக்கங்களை எடுத்துக்கொண்டால் அங்கும் ஒரு காலத்து எம்மவர்களே முக்கிய பொறுப்புகளில் அணிவகுத்து நிற்பதைக் காணலாம்.

'மார்க்சியவாதிகள்' திசைமாறி தமிழ் தேசியவாதிகளுடன் இணைந்தமைக்கான காரணிகள்!

எமது கட்சியிலிருந்து தமிழ் தேசியவாத இயக்கங்களுடைய அணிகளுக்குத் தாவியோர் பட்டியல் சற்று நீண்டது. புலி களுடன் மட்டு மின்றி அநேக மாக எல்லா இயக்கங்களிலும் அவர்கள் இணைந்தனர் என்று கூறலாம்.

புளொட் இயக்கத்திலும் தோழர்கள் கரவை கந்த சாமி, அ.கௌரி காந்தன் போன் றோர் இணைந் ததுடன் முக்கிய பொறுப்புகளி லும் இருந்தனர்.

அதேமாதிரி எமது கட்சியின் வட பிரதேச முக்கிய தலை வர்களில் ஒருவ ராக இருந்த தோழர் வீ.ஏ.கந்தசாமி உட்பட கே.சுப்பையா, எஸ்.சிவதாசன் போன்றோர் ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தில் இணைந்து முக்கிய பொறுப்புகளில் இருந்து செயல்பட்டனர். (சிவதாசன் பின்னர் டக்ளஸ் தேவானந்தா ஈ.பி.ஆர்.எல்.எப்பில் இருந்து விலகி ஈ.பி.டி.பி கட்சியை ஆரம்பித்தபோது அதில் சேர்ந்து, பாராளுமன்ற உறுப்பினராகவும் பதவி வகித்து அண்மையில் காலமானார் என்பது குறிப்பிடத்தக்கது)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கட்சி மற்றும் விவசாயிகள் இயக்கத்தில் முக்கிய பொறுப்புகளை வகித்த தோழர்கள் இ.வே.துரைரத்தினம், இ.விக்கினராஜா, க.கந்தசாமி போன்ற தோழர்கள் ஈரோஸ் இயக்கத்தில் இணைந்ததுடன் பாராளுமன்றத் தேர்தல்களிலும் அவ்வியக்கத்தின் சார்பாகப் போட்டியிட்டனர்.

நெல்லியடி – கரவெட்டி பகுதிகளைச் சேர்ந்த சில தோழர்கள் ரெலோ இயக்கத்தின் தாஸ் பிரிவுடன் தொடர்பு வைத்து வேலை செய்தனர்.

இதுதவிர எமது கட்சியே நேரடியாக ஆரம்பித்த 'தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி' என்ற அமைப்பில் கட்சி சார்பாக பல தோழர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அந்த முன்னணியில் முக்கிய பொறுப்பு வகித்த தோழர் வி.விசு வானந்ததேவன் எமது கட்சி மீதான நம்பிக்கையை இழந்து, ஜனநாயக முன்னணி மீதான கட்சித் தலைமையை நிராகரித்து, அதன் பெயரை 'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி' (NLFT) என பெயர் மாற்றி தனியாகச் செயற்பட்ட போதும், பின்னர் அதில் பிளவு ஏற்பட்டு 'தமிழீழ மக்கள் விடுதலை முன்னணி' (PLFT) என்ற அமைப்பை உருவாக்கிய போதும், பல கட்சி உறுப்பினர்கள் அந்த இயக்கங்களில் சேர்ந்து செயற்பட்டனர்.

இவ்வாறாக எமது கட்சியைச் சேர்ந்த பல முக்கிய உறுப்பினர்கள் பல்வேறு இயக்கங்களை VAK நாடிச் சென்றுவிட்ட ஒரு சூழலில், என்னைப் போன்ற சிலர் தான் கட்சியில் எஞ்சியிருந்தோம். கட்சி முற்றுமுழுதான ஒரு ஸ்தம்பித நிலையை அடைந்தது என்றே கூறலாம். இருப்பினும் இன்று திரும்பிப் பார்க்கையில், தமிழ் தேசியவாத இயக்கங்களில் முதன்மை இடம்வகித்த விடுதலைப் புலிகளின் முற்றுமுழுதான அழிவும், ஏனைய இயக்கங்கள் கூட இன்றும் அந்த தமிழ் தேசியவாத அரசியல் போக்கிலிருந்து மீளமுடியாமல், இரண்டும் கெட்டான் நிலையில் அரசியல் எதிர்காலம் இல்லாமல் தத்தளிப்பதுமான சூழலில், எம்முடன் உறுதியுடன் எஞ்சி நின்ற தோழர்களின் நிலைப்பாட்டில் இருந்த தெளிவையும், நம்பிக்கையையும் எண்ணிப் பெருமிதம் கொள்ளவைக்கிறது.

(துன்பியல்கள் தொடரும்...)



# பாப்பா முரசு

இப்பகுதிக்கு சிறுவர்கள், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

## வாரம் ஒரு திருக்குறள்



**பேதைமை**

**ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை**
**பெருஞ்செல்வம் உற்றக் கடை.**

பேதை பெருஞ்செல்வம் அடைந்தபோது (அவனோடு தொடர்பில்லாத) அயலார் நிறைய நன்மைபெற, அவனுடைய சுற்றத்தார் பசியால் வருந்துவர்.

குறள்:837

# ஆபத்தில் அறிதல்

என்.பாத்திமா நகீதா,
புத்தளம்.

**வளம்பூரி** எனும் ஊர். எழில் மிகுந்த வனப்புக்களைக் கொண்ட ஊராகும். அவ்வூரில் இரு நண்பர்கள் வாழ்ந்து வந்தார்கள். அதில் ஒருவர் ராமு. இவன் பயந்த சுபாவமும், நற்குணமும் உடையவன். மற்றையவன் சோமு. இவன் வீரமுடையவனாகவும் தீய குண-முடையவனாகவும் காணப்பட்டான். ஒருநாள் இருவரும் ஒரு அடர்ந்த காட்டிற்குச் சென்றார்கள். நேரம் கழிந்துபோவதும் தெரியாமல் உரையாடிக்கொண்டே சென்றார்கள். வழியில் காணப்படும் மரங்களிலுள்ள பழங்களைப் பறித்துச் சாப்பிட்டார்கள். வெகுதூரம் சென்றதும் மாலையாகிவிட்டது. வானமெல்லாம் இருண்டு காடெங்கும் இருள் பரவியது. பக்கத்திலிருந்த மரத்தடியின் கீழ் அமர்ந்து கொண்ட ராமு நேரமாகிவிட்டது. பெற்றோர்கள் தேடுவார்கள். எங்கும் இருள் சூழ்ந்துவிட்டது. நாமிங்கேயே தங்கும் நிலை ஏற்பட்டுவிடும். நாம் இப்போது என்ன செய்வது என்று கூறி முடிப்பதற்குள் காடே அதிரும் நிலைக்கு ஒரு பயங்கர சத்தம் கேட்டது. ராமு பயத்தில் நடுங்கினான். சோமு நாம் ஏன் பயப்பட வேண்டும். "நான்தான் வீரனாச்சே" என்று செல்லித் திரும்பிப் பார்த்தான். அங்கே ஒரு பெரிய கரடி ஒன்று, இவர்களை நோக்கி வந்துகொண்டிருந்தது. சோமு ராமுவை முந்திக்கொண்டு மரத்தின் மேல் ஏறிக்கொண்டான். ராமுவிற்கு மரம் ஏறத்தெரியாது. உடனே அவனுக்கு யோசனை தோன்றியது.



கீழே விழுந்து படுத்துக்கொண்டான். கரடி ராமுவிற்கு அருகில்வந்து அவனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தது. ராமு கண்ணை திறக்காமல் மூடிக்கொண்டே இருந்தான். "சீ இவன் செத்து விட்டான்" என்று நினைத்து மேலே பார்த்தது. மரத்தில் சோமு அமர்ந்துகொண்டிருப்பதைக் கண்டு, அம்மரத்திற்கு அடியில் அருகில் சென்றது அக்கரடி. அம் மரத்தை ஆட்டியது. சோமு பயத்தில் அலறியடித்துக் கத்தினான். ராமு முழித்துப் பார்த்தான். கரடி சோமுவை தாக்குவதற்காக மரத்தை ஆட்டிக் கொண்டிருந்தது. உடனே ராமு எழுந்து கைகொட்டினான். கரடி மரத்தை ஆட்டுவதை நிறுத்திவிட்டு கைகொட்டும் திசையை நோக்கித் திரும்பியது. ராமு ஓடிப்போய் புதருக்குள் ஒழிந்துகொண்டான். கரடி ராமுவைத் தேடியது. அவனை எங்கும் காணாததால் அது அங்கிருந்து போய்விட்டது. சோமு மரத்திலிருந்து கீழிறங்கினான். ராமுவும் புதரில் இருந்து வெளி வந்தான். சோமு, ராமுவைப் பார்த்து ராமுவே! என்னை மன்னித்துவிடு! அன்பான சிநேகிதனுக்கு ஆபத்தில் உதவாமல் நான் உன்னை விட்டுவிட்டு மரத்தின்மேல் ஏறிவிட்டேன். நீ அப்படியிருந்தும் புத்தி சாதுரியமாய் செயற்பட்டு என்னைக் காப்பாற்றிவிட்டாய். நண்பருக்கு உதவுவது எமது கடமைதானே. என்று கூறினான். இருவரும் சிறிது தூரம் நடந்தனர். தூரத்தில் ஒரு குடில் தெரிந்தது. ராமுவும் சோமுவும் அக்குடிலை நோக்கி சந்தோசத்துடன் சென்றனர்.

## எண்களில் சில வித்தைகள்

**எண்களில் சில வித்தைகள்**

**எண்களைக் கூட்டவும் கழிக்கவும் மட்டுமேப் பயன்படுத்தி இருப்பீர்கள் இல்லையா குழந்தைகளே. இங்கே பாருங்கள் அதில் உள்ள வித்தைகளை...**

1 x 1 = 1
11 x 11 = 121
111 x 111 = 12321
1111 x 1111 = 1234321
11111 x 11111 = 123454321
111111 x 111111 = 12345654321
1111111 x 1111111 = 1234567654321
11111111 x 11111111 = 123456787654321
111111111 x 111111111 = 12345678987654321

*இதோடு நின்று விடவில்லை இந்த வித்தை.... இன்னும் ஒரு சில உண்டு. நீங்களும் இது போல புதுமையாக ஏதாவது ஒன்றை முயற்சி செய்து பார்க்கலாம்.*

# தமிழ் வருடங்களின் பெயர்கள்

தமிழ் ஆண்டுகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு பெயர் உண்டு. இது மொத்தம் 60 ஆகும். தற்போது நடப்பது விஷு. அடுத்த ஆண்டு ஏப்ரலில் துவங்க இருப்பது சித்திரபானு வருடம்.

பிரபவ, விபவ, சுக்ல, பிரமோதூத, பிரசோற்பத்தி, ஆங்கீரச, ஸ்ரீமுக, பவ, யுவ, தாது, ஈஸ்வர, வெகுதானிய, பிரமாதி, விக்கிரம, விஷு, சித்திர பானு, சுபானு, தாரண, பார்த்திப, விய, சர்வசித்து, சர்வதாரி, விரோதி, விக்ருதி, கர, நந்தன, விஜய, ஜய, மன்மத, துன்முகி, ஹேவிளம்பி, விளம்பி, விகாரி, சார்வரி, பிலவ, சுபகிருது, சோபகிருது, குரோதி, விசுவாசுவ, பரபாவ, பிலவங்க, கீலக, சௌமிய, சாதாரண, விரோதிகிருது, பரிதாபி, பிரமாதீச, ஆனந்த, ராட்சச, நள, பிங்கள, காளயுக்தி, சித்தார்த்தி, ரௌத்திரி, துன்மதி, துந்துபி, ருத்ரோத்காரி, ரக்தாட்சி, குரோதன, அட்சய.

# கைரேகையின் மூலம் புலனாய்வு



**கை**ரேகைப் பதிவுமூலம் குற்ற வாளிகளைக் கைது செய்யும் நுட்பத்தை உருவாக்கியவர் எட்வர்டு ஹென்றி. இவர் 1890ஆம் ஆண்டு வாக்கில் வங்காளத்தில் காவல் துறைத் தலைவராக இருந்தவர்.

1901-ல் ஆண்டில் ஸ்கோட்லாந்து யார்டில் குற்ற விசாரணைப் பிரிவின் அதிகாரியாக ஹென்றி நியமிக்கப் பட்டார். அங்கு அவர் முதல்முறையாக கைரேகைப் பிரிவைத் தொடங்கினார். பின்னாளில் காவல்துறை ஆணையரான அவர் 1918ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார்.

காவல்துறையில் ஹென்றி ஆற்றிய பணிகளுக்காக அவருக்கு சேர் பட்டம் வழங்கப்பட்டது. ஆனால் அவர் சேர் ஹென்றி அழைக்கப்பட்டது அரிது. அவர் பொதுவாக திருவாளர் கைரேகை என்றுதான் அழைக்கப்பட்டார்.

கைரேகைகளை வகைப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்காற்றிய மற்றொரு காவல்துறை அதிகாரி ஆர்ஜென்டினாவைச் சேர்ந்த ஜுவன் வுசெட்டிக். ஒருவரை அடையாளம் கண்டுபிடிப்பதற்கு மிகவும் நம்பத்தகுந்த ஆதாரமாக கைரேகை விளங்குகிறது. ஏனெனில் எந்த இரு மனிதர்களின் கைரேகையும் ஒரே மாதிரி இருப்பதில்லை - அவர்கள் ஒன்றாகப் பிறந்த இரட்டையர்களாக இருந்தாலும்கூட!

# சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 31.12.2012

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 971**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல:167,**
**யாழ்ப்பாணம்.**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 969

பரிசுக்குரியவர்:

**ம.பிரணவன், தென்னக்கும்புர, கண்டி.**

பாராட்டுக்குரியவர்கள்

01. ரா.உஷாந்தினி, யா/ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரி, புத்தூர்.
02. M.F.சன்ஹா, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
03. யோ.சுதர்சினி, சரசாலை தெற்கு, சரசாலை.
04. வ.பிரணவி, கிருஷ்ணாநகர், முழங்காவில்.
05. த.பார்கவி, பிரதான வீதி, மன்னார்.
06. ச.சிந்துஜன், களுத்துறை.
07. தா.யோகாஷ், உடப்பு, புத்தளம்.
08. மா.அருண், கண்டி வீதி, பளை.



- உலகிலேயே மிகப் பெரிய பாலைவனம் எது?
  **சஹாரா பாலைவனம்** (ஆபிரிக்கா)
- உலகிலேயே மிகவும் வரண்ட பாலைவனம் எது?
  **ஆடகாமா பாலைவனம்** (சிலி)
- உலகிலேயே மிக உயரமான நீர்வீழ்ச்சி எது?
  **ஏஞ்சல் நீர்வீழ்ச்சி** (வெனிசுலா)
- உலகிலேயே மிக அகலமான நீர்வீழ்ச்சி எது?
  **நயாகரா நீர்வீழ்ச்சி**
- உலகிலேயே மிக நீளமான நதி எது?
  **நைல் நதி** (6695கி.மீ)
- உலகிலேயே மிக உயரமான மலைச் சிகரம் எது?
  **எவரெஸ்ட்** (நேபாளம் 8848 மீ)





# சரியா? தவறா?

**தண்ணீரைக் காய்ச்சினால் ஏன் பொங்குவதில்லை?**

தண்ணீரில் கொழுப்போ, மாவுச் சத்தோ, புரதங்களோ இல்லை. எனவே மேற்பரப்பில் ஏடு எதுவும் படிவதில்லை. காற்றுக்குமிழ்கள் தடையின்றி வெளியேறலாம். எனவே நீரைக் கொதிக்க வைக்கும்போது அது பொங்குவதில்லை.

**பீங்கான் அல்லது கண்ணாடி கப்பில் சூடான பானங்களை விடும் போது சூட்டினால் கப் உடைந்து போவதுண்டு ஏன்?**

வெப்பத்தால் பொருட்கள் விரிவடையும். கண்ணாடி கப்பில் சூடான பானங்களை ஊற்றும் போது, கப்பின் உட்பகுதி முதலில் வெப்பத்தால் விரிவடைகிறது. வெப்பம் சிறிது சிறிதாகப் பரவி சற்று தாமதமாகவே வெளிப்பகுதி விரிவடையும். சூடு அதிகம் இருந்தால் உட்பரப்பு முதலில் விரிவடைந்து, வெளிப்பரப்பு விரிவடைய தாமதமாகும் போது கப் உடைந்து விடுகிறது.

## இதில் எத்தனை நீள் சதுரக்கட்டைகள் உள்ளன.



# கொள்ளை ராணி பூலான்தேவி



திருப்பங்கள் நிறைந்த பூலானின் வாழ்க்கை வரலாறு

**எல்லோருக்கும் - அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலைகாரி என்றுதான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் - ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஏற்கனவே முரசில் புரட்டப்பட்ட இப்பக்கங்கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் புரட்டப்படுகின்றன.**

**136**

**மீனவர்களின்** குடியிருப்புக்களில் பொலிசார் தேடுதல் நடாத்தினார்கள். பூலான் கோஷ்டியினர் அங்கு வரவே இல்லையென்றும், தங்களுடன் பகைமை பாராட்டும் பண்ணையார் சாதிக்காரர் தான் பொய்யான கதையைக் கட்டிவிட்டுள்ளனர் என்றும் மீனவர்கள் பொலிசாரிடம் கூறிவிட்டனர்.

பொலிசார்மூலமாக பண்ணையார்களுக்கு மீனவர்களின் புகார்கள் கிடைத்துவிட்டன. பொலிசார் சென்றபின்னர் பண்ணையார்கள் மீனவர் குடியிருப்புக்களுக்குள் புகுந்தனர்.

ஆண்கள் மீன்பிடிக்கப் போய்விட்டார்கள். வயதானவர்களும், சிறு பையன்களும், பெண்களும்தான் இருந்தனர்.

பெண்களைப்பிடித்து இழுத்தல்கள், சேலைகளை உருவி, கைகளை வீசி வக்கிரம் பண்ணினார்கள்.

கும்பலுக்குத் தலைமை தாங்கிவந்த பண்ணையார் தன் பெரிய தொந்தி குலுங்கச் சிரித்தான்.

"உள்ளவர்களில் அழகான பெண்களாக மூன்று பேரைப்பிடித்து வாங்கடா!" என்றான்.

மூன்று பெண்களைக் குண்டுக்கட்டாகத் தூக்கிக் கொண்டு போனார்கள்.

**மூன்று பெண்களை பண்ணையார்கள் தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள் என்றதும் தனக்கு நேர்ந்த கொடுமைகள் எல்லாம் பூலானுக்கு நினைவுக்கு வந்துவிட்டன.**

**தான் இருக்கும்போது தன் சாதிக்காரர்களைக் கொடுமைப்படுத்தி இருக்கிறார்களே என்பதை நினைக்கப் பூலானுக்கு இரத்தம் கொதித்தது.**

**"மான்சிங்! எல்லோரையும் தயார்ப்படுத்து! ரவைகளை அதிகமாக எடுத்து வைத்துக் கொள்! ம் சீக்கிரம்!" என்று உத்தரவிட்டாள்.**

**தன் முன்னாலேயே இப்படி உத்தரவிட பூலான் நினைப்பவளல்ல என்பதும் பாபாவுக்குத் தெரியும்.**

பூலான்தேவிக்குத் தகவல் போனபோது அவள் பாபாவுடன் பேசிக்கொண்டிருந்தாள். செய்தியைக் கேட்டதும் பாபாவின் கண்களும் சினத்தால் சிவந்தன.

"கிராமத்தையே அழிக்கப் போகிறேன். நாய்களைவிடவே கூடாது: விடமாட்டேன்!" என்றாள் பூலான்.

அவளது கை - கால்கள் எல்லாம் நடுங்கிக் கொண்டிருந்தன.

மூன்று பெண்களை பண்ணையார்க்ள் தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள் என்றதும் தனக்கு நேர்ந்த கொடுமைகள் எல்லாம் பூலானுக்கு நினைவுக்கு வந்துவிட்டன.

தான் இருக்கும்போது தன் சாதிக்காரர்களைக் கொடுமைப்படுத்தி இருக்கிறார்களே என்பதை நினைக்கப் பூலானுக்கு இரத்தம் கொதித்தது.

"மான்சிங்! எல்லோரையும் தயார்ப்படுத்து! ரவைகளை அதிகமாக எடுத்து வைத்துக்கொள்! ம் சீக்கிரம்!" என்று உத்தரவிட்டாள்.

தன் முன்னாலேயே இப்படி உத்தரவிட பூலான் நினைப்பவளல்ல என்பதும் பாபாவுக்குத் தெரியும்.

இன்று தன்நிலை மறக்கும் அளவுக்கு கோபம் அவளை உருவேற்றி இருக்கிறது என்பதும் பாபாவுக்குத் தெரிந்தது.

"அதிக கோபம்கூட ஆபத்தானதுதான். கண்களை மறைத்துக் காரியத்தைக் கெடுத்துவிடும்" என்பது பாபாவின் உறுதியான அபிப்பிராயம்.

"தண்டனை கொடுக்கத்தான் வேண்டும். ஆனால் இப்போதே சென்றுதான் ஆக வேண்டுமா?" என்று கேட்டார் பாபா.

அப்போதுதான் பாபாவின் பக்கத்தில் நின்றுகொண்டிருக்கும் நினைப்பு பூலானுக்கு ஏற்பட்டது.

"தாமதித்தால் மூன்று பெண்களையும் அந்த நாய்கள் குதறிப் போட்டுவிடும் பாபா!" என்றாள்.

பாபா தன் விரல்களால் நெற்றியை வருடிக்கொண்டு யோசித்தார். "சரி உன் இஷ்டம். நிதானமாக நடந்துகொள்!" என்று விட்டு உள்ளே போய்விட்டார்.

சரக்குகள் ஏற்றுவதற்காகச் சென்ற நான்கு லொறிகளைக் கடத்திக் கொண்டு அவற்றிலே தான் சென்றனர் பூலான் கோஷ்டியினர்.

புழுதியைக் கிளப்பியபடி, ஒன்றன் பின் ஒன்றாக நாலு லொறிகளும் பைஜாமௌ கிராமத்திற்குள் உறுமிக் கொண்டு புகுந்தன.

நிகழப்போகும் விபரீதத்துக்கு முன்னறிவிப்பாக வெயில் கொளுத்திக் கொண்டிருந்தது.

"பூலான்தேவிக்கு ஜே" என்றபடி லொறிகளில் இருந்து குதித்தனர் பூலானின் ஆட்கள்.

லொறிகள் வந்த வேகத்தைப் பார்த்து, அபாயம் புரிந்து ஓட முற்பட இரண்டு பண்ணையார் சாதிப் பையன்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டு, துப்பாக்கியின் தலைப் பகுதியால் தாக்கப்பட்டார்கள்.

வீடுகளுக்குள் புகுந்த பூலானின் ஆட்கள் துப்பாக்கி முனையில் பண்ணையார்களைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள். ஆண்களை மட்டுமல்லாமல், பெண்கள், சிறுவர்கள் அனைவரையும் கொண்டு வந்து தன் முன்பாக நிறுத்துமாறு உத்தரவிட்டாள் பூலான்.

அரைமணி நேரத்திற்குள் பூலான் முன்பாக பண்ணையார் சாதியினர் அனைவரும் கைகட்டி, வாய் பொத்தி நிற்க வைக்கப்பட்டனர்.

யாரும் தப்பி ஓடவோ, பொலிசாருக்குத் தகவல் தரவோ முடியாதபடி பண்ணையார் சாதியினர் குடியிருக்கும் பகதி சுற்றிவளைக்கப்பட்டு, துப்பாக்கியுடன் பூலானின் ஆடக்ள் காவலுக்கு நின்றனர்.

பண்ணையார் பெண்கள் சிலரைப் பிடித்துத்தனியாக நிறுத்தினாள் பூலான். பின்னர் கூட்டத்தினரைப் பார்த்து உரத்த குரலில் பேசினாள்:



"ஏய் பண்ணையார் நாய்களே! உங்கள் சாதிப் பெண்களை என் ஆட்களைவிட்டே உங்கள் கண் முன்னாலேயே... போகிறேன். அப்போதுதானடா உங்களுக்குச் சுரணை வரும்!"

கூட்டத்தினர் ஒட்டுமொத்தமாக மன்றாடினார்கள். பெண்கள் கையெடுத்துக் கும்பிட்டனர்.

"எங்கேயடா நாய்களே, நீங்கள் தூக்கிக் கொண்டுவந்த அந்த மூன்று பெண்களும்?" என்று தொண்டை நரம்புகள் புடைக்கக் கத்தினாள் பூலான்.

ஒதுக்குப்புறமாக இருந்த வீடொன்றுக்கள் மூன்று பெண்களையும் கட்டிப் போட்டு, வாய்களுக்குள் துணிகளை அடைத்து வைத்திருந்தார்கள்.

பண்ணையார் சாதிப்பெண் ஒருத்திதான் அந்த வீட்டைப் பூலானுக்குக் காட்டிக் கொடுத்தாள்.

கதவை உடைத்துத் திறந்தாள் பூலான். மூன்று பெண்களும் உடம்பில் பொட்டுத்துணிகூட இல்லாமல் கிடந்தனர்.

மூன்று பெண்களுக்கும் மார்பிலும் கழுத்திலும் நகக் கீறல்கள் பதிந்திருந்தன.

பண்ணையார் சாதிப்பெண் எங்கோ ஓடிப்போய் சேலைகள் கொண்டு வந்து தந்தாள்.

மூன்றுபெண்களும் பூலானின் கால்களில் விழுந்து கேவிக் கேவி அழுதார்கள். பூலானுக்கு உடம்பெங்கும் கொதித்தது.

திருப்பங்கள் தொடரும்...

மருத்துவம்



# வலிப்பு நோய் என்றால் என்ன?

மூளையில் உள்ள நரம்புசெல்கள் உட்பட நம் உடம்பில் உள்ள அனைத்துச் செல்களும் மின்னணு சக்தி கொண்டவை. சில சமயம் நரம்புச்செல்கள் தேவையற்ற மற்றும் அளவுக்கு அதிகமான மின்னணு தன்மையை வெளியிடும்போது ஏற்படும் விளைவே வலிப்புநோய் ஆகும்.

**வலிப்பு நோய் யாரை பாதிக்கும்?**

யாரை வேண்டுமானாலும் பாதிக்கலாம். மொத்த மக்கள் தொகையில் 100க்கு 3 முதல் 5 பேர் வரை இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

**இந்த நோய் அறிகுறிகள் யாவை?**

இது ஒவ்வொருவருக்கும் மாறுபடுகிறது.

கை, கால் இழுத்தல்
வாயில் நுரை தள்ளுதல்
சுய நினைவு மாறுதல்
உடலில் உள்ள பாகம் துடித்தல் (வெட்டுதல்)
கண் மேலே சொருகுதல்
சில சமயம் சுயநினைவின்றி சிறுநீர் கழித்தல்
திடீரென் மயக்கமடைந்து விழுதல்
கண் சிமிட்டல்
நினைவின்றி சப்பு கொட்டுதல் (வாய் அசைத்தல்)
மற்றும் சில நிமிடங்கள் தன் சுயநினைவின்றி பேசுதல் போன்றவை வலிப்புநோய்களின் அறிகுறிகள்.

**வலிப்பு நோய் எதனால் வருகிறது?**

மூளையில் பூச்சிக்கட்டி, மூளையில் காசநோய்
தலைக் காயம்
குழந்தைகளுக்கு காய்ச்சல் ஏற்படும்போது
மூளைக் காய்ச்சல்
மூளையில் இரத்த ஓட்டம் பாதிக்கும்போது
மூளையில் புற்றுநோய்
உறக்கமின்மை
போதைப்பொருள் உபயோகித்தல் மற்றும்
சிலருக்கு எக்காரணமும் இன்றி வரலாம்.

**இது பரம்பரை நோயா?**

பெரும்பாலும் 100க்கு 90 பேருக்கு இது பரம்பரை வியாதி இல்லை. மிகக் குறைந்த பேருக்கே இது பரம்பரையின் பாதிப்பாகும்.

**இந்த நோய் எந்த வயதில் வரும்?**

இந்நோய்க்கு வயது வரம்பு கிடையாது. குழந்தை முதல் முதியோர்வரை எந்த வயதில் வேண்டுமானாலும் வரலாம்.

**இந்த நோய் உள்ளவர்களுக்கு செய்யப்படும் சோதனைகள் யாவை?**

முதலில் மருத்துவர் நோய்க்கான அறிகுறிகளை கேட்டறிந்து அதன்பின் வலிப்பு நோயினை வகைப்படுத்துகிறார். பின்னர் நோய்க்கு ஏற்ப.

EEG: மூளையின் மின் அதிர்வை வரைபடமாக்குதல்.

CT Scan: மூளையின் பாகங்களை கம்பியூட்டர் மூலம் ஸ்கேன் செய்தல்.

MRI Scan: தேவைப்படின் காந்த அதிர்வு மூலம் மிகத்துல்லியமாக மூளையின் பாகங்களை படம் எடுத்தல் ஆகிய பரிசோதனைகள் செய்யப்படுகின்றன.

**இந்த நோய் உள்ளவர்கள் என்ன செய்ய வேண்டும்?**

அருகாமையில் உள்ள மூளை நரம்பியல் மருத்துவ நிபுணரை சந்தித்து நோயின் வகை, நோய்க்கான காரணம் ஆகியவற்றை பரிசோதனைகள் மூலம் அறிந்து மருத்துவரின் அறிவுரைப்படி தொடர்ந்து மருந்து உட்கொள்ள வேண்டும்.

**எவ்வளவு காலம் மருந்து உட்கொள்ள வேண்டும்?**

இது நோயின் வகை மற்றும் காரணத்தை பொருத்து மறுபடுகிறது. பெரும்பாலும் 3 முதல் 5 வருடம் வரை உட்கொள்ள வேண்டியிருக்கும். பின்னர் தேவையான பரிசோதனைகளுக்கு பிறகு மருந்துகளை மெல்லக் குறைத்து அதன்பின் நிறுத்தவேண்டும்.

**இந்த நோய் உள்ளவர்கள் திருமணம் செய்து கொள்ளலாமா?**

தாராளமாக செய்து கொள்ளலாம். திருமணத்திற்கு முன் உங்கள் மருத்துவரை கலந்து அவரின் ஆலோசனைப்படி மருத்தினை தொடர்ந்து உட்கொள்ளவும். வலிப்புநோய் தாய் மற்றும் சேய் இருவரையும் பாதிக்கும். ஆனால் முறையான வலிப்பு நோய் மாத்திரையும் போலிக் அசிட் என்ற சத்து மாத்திரையும் சாப்பிடும்போது சுகப்பிரசவம் காணலாம். கருத்தாங்கும் முன் உங்கள் மருத்துவரை அவசியம் சந்திக்கவும். நல்ல உணவு, உடற்பயிற்சி, தியானம் மற்றும் சிந்தனை உங்களை நல்வழிப்படுத்தும்.

**வலிப்பு நோய் உள்ளவர்கள் செய்யக் கூடாதவை:**

உங்கள் மருத்துவரை கலந்தாலோசிக்காமல் மருந்து எடுத்துக் கொள்வதை நிறுத்தவோ அல்லது வேறு மருந்துக்கு மாறவே கூடாது.

நேரத்திற்கு உணவு உட்கொள்ள வேண்டும், தேவையற்ற மன உளைச்சல் கூடாது, மதுபானம் மற்றும் போதைப்பொருட்கள் வலிப்பு வருவதை தூண்டலாம்.

நகரும், அசையும் உயிருக்கு ஆபத்தான இயந்திரங்கள் கொண்டு வேலை செய்யக்கூடாது.

அதிகநேரம் தொலைக்காட்சி பார்க்கக் கூடாது.

**முறையான சிகிச்சை செய்யவில்லை என்றால்**

ஒவ்வொரு முறை வலிப்பு வரும் போதும் மூளையில் உள்ள நரம்பு செல்கள் பாதிப்படைகின்றன. இது நாளடைவில் மூளை வளர்ச்சியை பாதிக்கும், எனவே முறையான மருந்துகள் சாப்பிட்டு வலிப்பு நோயைக் கட்டுப்படுத்துவது அவசியம்.

# விஸ்வரூபம்



# இறுதிக் கட்டத்தில் ஆதிபகவன்

அமீர் இயக்கும் ஆதிபகவன் படத்தில் ஏறக்குறைய படப்பிடிப்பு முடிந்துவிட்ட நிலையில் ஒரே ஒரு பாடல் காட்சி மட்டும்தான் பாக்கி உள்ளதாம். யுவனின் இசையில் 'ஒரு துளி விஷமாய்' என்றொரு அருமையான பாடல் இன்னும் படம்பிடிக்கப்படாமல் உள்ளது.

இந்த பாடல்தான் கதையின் முக்கியத் திருப்பத்துக்கு காரணமான பாடல் என்றும், எனவே இந்த பாடலை அதிக சிரமத்தை எடுத்து படமாக்கும் முயற்சிகள் நடந்துவருவதாகவும் இயக்குனர் அமீர் கூறியுள்ளார். அதோடு இந்த அதிமுக்கியமான பாடலை போலந்து நாட்டில் படமாக்க உள்ளார்களாம்.

இந்த படத்தில் யுவனின் இசை காவியம் படைத்து இருக்கிறது என்றும், அதில் எனது படத்தின் கதை சலனமில்லாத நதியைப் போல ஓடுவது போன்ற திரைக்கதையாக அமைந்துள்ளது எனவும் இயக்குனர் அமீர் கூறியுள்ளார். சூர்யாவுக்கு ஒரு மௌனம் பேசியதே, ஜீவாவுக்கு ஒரு ராம், கார்த்திக்கு ஒரு பருத்தி வீரன் போல, தனக்கு இந்த ஆதிபகவன் இருக்கும் என்று பார்ப்பவர்களிடம் எல்லாம் சொல்லி பூரித்துப் போகிறாராம் ஜெயம் ரவி.

# சட்டம் ஒரு இருட்டறை



# சமந்தாவிற்கு பெரிய மனசு!

நடிகை சமந்தா, தனக்கு கருணை உள்ளமும் உண்டு நிரூபித்திருக்கிறார். அறக்கட்டளை ஒன்றைத் தொடங்கி ஹீமோபிலியா, தாலசீமியா நோயால் பாதிக்கப்பட்ட 600 குழந்தைகளுக்கு சிகிச்சை அளித்து வருகிறார். மேலும் தமிழ் எம்.ஏ, அங்காடித்தெரு, எங்கேயும் எப்போதும் படங்களில் அஞ்சலியின் நடிப்பு தன்னை கவர்ந்ததாக சமந்தா கூறியுள்ளார். அஞ்சலி ரொம்ப திறமையான நடிகை, நான் அவரது ரசிகை என்று சிலாகித்துள்ள சமந்தா, அஞ்சலியைத் தவிர நடிகை காஜல் நடிப்பு ரொம்ப பிடிக்கும் என்று கூறுகிறார். காஜலின் எளிமை ரொம்பப் பிடிக்கும் என்றும் எனக்கு அவரை மாதிரி இருக்கணும்னு ஆசை என்கிறார். தன்னுடைய உயிர்த்தோழி காஜல் அகர்வால் என்று கூறும் சமந்தா, அவரை செல்ல மாக காஜ் என்று அழைப்பாராம்.

# கௌதமின் பார்வை

ஜீவா நடிப்பில் நீதானே என் பொன் வசந்தம் படம் வெளியாகியிருக்கிறது. இந்நிலையில் செய்தியாளர்கள் கேட் கேள்விகளுக்கு பதிலளித்தார் கௌதம அப்போது நடிப்பில் சிறந்தவர் சிம்புவா ஜீவாவா? எனக் கேட்டதற்கு, விண்ணை தாண்டி வருவாயா படத்தில் நான் சொ நடிப்பில்கொண்டு வந்தார் சிம்பு. நீதானே பொன் வசந்தம் படத்தில் நான் எதிர்ப



# புதுமையான கதையுடன் வருகிறது டேவிட்

முன்னணி இயக்குனரான பீஜாய் நம்பியார் இயக்கத்தில் உருவாகி இருக்கும் படம் 'டேவிட்'. இதில் விக்ரம் மற்றும் ஜீவா கதாநாயகர்களாக நடித்துள்ளனர். தபு, இஷா ஷர்வானி, லாரா தத்தா, நாசர் உள்ளிட்டோர் நடித்துள்ளனர். ரத்னவேலு மற்றும் பி.எஸ்.விநோத் ஆகிய இருவரும் ஒளிப்பதிவு செய்துள்ளனர். இந்த திரைப்படம் புதுமையான கதை அம்சத்தை கொண்டது. நாட்டின் இரு வேறு பகுதிகளில் வசிக்கும் இரண்டு டேவிட்டுகளை மையமாகக் கொண்டு கதை அமைந்துள்ளது. இந்த இருவரும் எடுத்து வைக்கும் ஒரு அடி அவரது வாழ்க்கையையே மாற்றி விடுகிறது. மும்பை மற்றும் கோவாவில் இரண்டு கதைகளும் நடைபெறுகின்றன. மும்பையில் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து வளர்ந்த 18 வயதான டேவிட் எனும் இசைக்கலைஞரின் கதை மற்றும் கோவாவில் மீனவ குடும்பத்தில் பிறந்து வளர்ந்த 35 வயதான டேவிட்டின் கதையும் பின்னிப் பிணைந்து இந்த படம் சொல்கிறது. இந்த படத்தின் முதல் தோற்றம் நாயகர்கள் விக்ரம், ஜீவா மற்றும் இயக்குனர் பீஜாய் நம்பியாரால் வெளியிடப்பட்டது. மேலும் இந்த படத்தின் டிரைலர் நீதானே என் பொன்வசந்தம் படத்தோடு வெளியாகிறது.



# தேனிலவுக்கு பறக்கிறார் வித்யாபாலன்


இந்தியில் 'தி டர்ட்டி பிக்சர்' படத்தில் நடித்து பிரபலமானவர் நடிகை வித்யாபாலன். இப்படத்தில் நடித்ததற்காக அவருக்கு சிறந்த நடிகைக்கான தேசிய விருதும் கிடைத்தது. அதைவிட, 'பிரனீதா', 'பா', 'கஹானி' போன்ற படங்களிலும் நடித்துள்ளார். தமிழில் வந்த 'உருமி' படத்தில் ஒரு பாடலுக்கு நடனம் ஆடியுள்ளார்.

வித்யாபாலனுக்கும் 'யுடிவி' தலைமை நிர்வாகி சித்தார்த்ராய் கபூருக்கும் காதல் மலர்ந்தது. இவர்கள் திருமணம் செய்துகொள்ள இருவீட்டு பெற்றோரும் சம்மதம் தெரிவித்தார்கள்.

இதையடுத்து வித்யாபாலன் – சித்தார்த்ராய் கபூர் திருமணம் மும்பையில் உள்ள சுப்ரமண்யசாமி கோவிலில் நடந்தது. வித்யாபாலன் காஞ்சிபுரத்தில் இருந்து வாங்கிய பட்டுச்சேலை அணிந்து இருந்தார். மணமகன் பட்டு குர்தா அணிந்து இருந்தார்.

வித்யாபாலன் தமிழ்ப்பெண் என்பதால் தமிழ் முறைப்படி திருமண சடங்குகள் நடந்தன. நடிகர்கள், நடிகைகள் பலர் நேரில் வாழ்த்தினர். வித்யாபாலன், சித்தார்த் ராய் கபூர் திருமண வரவேற்பு சென்னையில் நடக்கிறது. மும்பையிலும் திருமண வரவேற்பை நடத்த உள்ளனர்.

தம்பதியினர் தேனிலவுக்காக கரீபியன் தீவுக்கு செல்கிறார்கள். மும்பை ஜூகு பகுதியில் சித்தார்த்ராய் கபூர் ரூ.14 கோடிக்கு புதிதாக ஆடம்பர பங்களா வீடு வாங்கி உள்ளார். இந்த வீட்டில் [illegible]



# சாதனைகளின் உச்சத்தில் இசைஞானி இளையராஜா



இசைஞானி இளையராஜாவின் 920ஆவது படமாக நீதானே என் பொன்வசந்தம் அமைந்துள்ளதன் மூலம் அவரது சாதனைகள் பெருகிக்கொண்டிருக்கிறது. இந்திய திரையுலகில் யாரும் தொடாத உச்சத்தைத் தொட்ட சில பெருமைகள் இசைஞானிக்கு உண்டு. விருதுகளைத் தாண்டிய பெருமைக்குச் சொந்தக்காரராகத் திகழும் இவர், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, மராட்டி மற்றும் ஆங்கிலப் படங்களுக்கு இசையமைத்துள்ளார்.

1980 களிலேயே ஹொலிவூட் படத்துக்கு இசையமைத்த பெருமை இசைஞானிக்கு உண்டு. இசைஞானியின் முதல் படம் அன்னக்கிளி, 100ஆவது படம் மூடுபனி, 300ஆவது படம் உதய கீதம், 400ஆவது படம் நாயகன் என தற்போது ஆயிரம் படங்களை நெருங்கிக் கொண்டிருக்கிறார் இசைஞானி.

இப்போது அவரது இசையில் வெளியாகும் நீதானே என் பொன்வசந்தம் அவரது 920ஆவது படமாகும். இது தவிர 1980களில் ஒரே ஆண்டில் 50 படங்களுக்கு இசையமைத்தவர் இளையராஜா. இந்த சாதனையை எந்த மொழியிலும் இசையமைப்பாளர் யாராலும் இதுவரை தாண்ட முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.


பத்தாயிரம் கோடி!

## ...வியில்: நடிப்பில் சிறந்தவர் யார்?

...ான்
...ு.
...ட்ட சில
...தம்.
...வா?
...ண
...சொன்னதை
...னே என்
...பார்த்ததை

நிறைவுசெய்தார் ஜீவா. எனவே இருவரும் சிறந்த நடிகர்கள். இதில் யார் சிறந்தவர் என்ற சர்ச்சை வேண்டாமென கூறி-னார். ஹாரிஸ், ஏ.ஆர்.ரஹ்மான் இசைக்கு அடுத்தபடியாக இளைய ராஜாவை இப்படத்தில் ஒப்பந்தம் செய்தது ஏன்? ராஜா சேரின் பாடல்களை பாடி, பரிசு பெற்றுள்ளேன். இப்படத்திற்கு அவர் தேவைப்பட்டதால் ஒப்பந்தம் செய்தேன் என்றார். மேலும் சூர்யாவை வைத்து சர்வதேச கதை ஒன்றை இயக்கப்போவதாகவும் கௌதம் அறிவித்தார்.

# ஆணழகன் யார்?

பிரித்தானியாவின் இணையத்தள நிறுவனமொன்று நடத்திய வாக்கெடுப்பில் ஆசிய ஆண்களில் பொலிவூட் நடிகர் ஹிருத்திக் ரோஷன் கவர்ச்சிகரமானவர் எனத் தெரிவு செய்யப்பட்டார்.

உலகில் உள்ள ஆசிய ஆண்களில் மிக கவர்ச்சிகரமானவர் யார்? என்ற தலைப்பில் லண்டனை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் ஒரு இணையத்தள நிறுவனம் வாக்கெடுப்பு நடத்தியது. அதில், கவர்ச்சிகர ஆண் என்ற பட்டத்தை இந்தி நடிகர் ஹிருத்திக் ரோஷன் பெற்றார். இவர் நடித்து சமீபத்தில் வெளியான 'அக்னிபத்' என்ற இந்தி படம் சூப்பர் ஹிட்டாகி இவருக்கு புகழ் சேர்த்தது. அதன் மூலம் ரசிகர் பட்டாளம் பெருகியது.

இவருக்கு ஆசியா மட்டுமின்றி ஐரோப்பா, ஆபிரிக்கா மற்றும் தென் அமெரிக்காவில் உள்ள அவரது ரசிகர்கள் வாக்களித்துள்ளனர்.

இவருக்கு அடுத்தபடியாக 2ஆவது இடத்தில் பாகிஸ்தான் பாடகரும், நடிகருமான அலி ஷாபர் உள்ளார். நடிகர் சல்மான்கான் 3ஆவது இடத்தையும், நடிகர் ஷாகித் கபூர் 4ஆவது இடத்திலும் உள்ளனர். புதுமுக இந்தி நடிகர் சித்தார்த் மல்ஹோத்ரா 5ஆவது இடத்தையும், டி.வி. நடிகர் குஷால் தாண்டன் 6ஆவது இடத்தையும் பிடித்தனர்.




கண்ணா லட்டு தின்ன ஆசையா



## சந்தியா செய்கிறார் சைட் பிஸ்னஸ்!

கொலிவூட்டில் 'காதல்' படத்தின்மூலம் கதாநாயகியாக அறிமுகமானவர் நடிகை சந்தியா. முதல் படத்திலேயே முன்னணி கதாநாயகி அளவுக்கு உயர்ந்தார். டிஷ்யூம், வல்லவன், கண்ணாமூச்சி ஏனடா, கூடல் நகர் உள்ளிட்ட பல படங்களில் நடித்தார். மலையாளம், தெலுங்கு, கன்னடம் படங்களிலும் நடித்துள்ளார்.

தமிழில் இரும்புக்கோட்டை முரட்டு சிங்கம் படத்துக்கு பின்பு அவருக்கு சரியான வாய்ப்புகள் அமையவில்லை. இதனால் ... சென்னையில் உள்ள வீட்டை காலி செய்துவிட்டு கேரளாவுக்கு சென்று ...யறிவிட்டார். அங்கு மலையாள படங்களில் சிறுசிறு வேடங்களில் நடித்து ...றார். சினிமா வாய்ப்பு குறைந்ததால் இவர், தனது வருமானத்துக்காக கேரளா ... பல இடங்களில் அழகு நிலையங்களை (பியூட்டி பார்லர்) தொடங்கியுள்ளார். அங்கு ஏராளமான இளம் பெண்களை வேலைக்கு அமர்த்தியுள்ளார்.

மேலும் நடிகர்- நடிகைகளுக்கு பிரத்தியேகமான அழகு நிலையங்களையும் முக்கிய இடங்களில் திறந்துள்ளார். அதை பராமரிக்க தனது தாயாரையே நியமித்துள்ளார். முடிந்தவரை இயற்கையான தன்மைகொண்ட அழகுசாதனப் பொருட்களை பயன்படுத்துவதால் சந்தியாவின் அழகு நிலையத்துக்கு நாளுக்கு நாள் வாடிக்கையாளர்கள் கூட்டம் அதிகரித்து வருகிறது. இதனால் சந்தியாவுக்கு சினிமாவைவிட அழகு நிலையத் தொழிலில் அதிக ...னம் கிடைக்கிறது.


கும்கி

## நயனின் வெள்ளிவிழா நாயகன்

தென்னிந்திய மொழிகளில் 24 நாயகன்களுடன் இணைந்த நயன்தாரா, வெள்ளிவிழா நாயகனாக உதயநிதியுடன் இணைகிறார். கடந்த 2003ம் ஆண்டு மலையாள திரையுலகின் மூலமாக காலடி பதித்த நயன்தாரா, 2005ல் சரத்குமாரின் 'ஐயா' மூலம் தமிழுக்கு வந்தார். அடுத்த ஆண்டே 2006ல் வெங்கடேஷின் திரைப்படம் மூலம் தெலுங்கிற்குப் போனார். இந்நிலையில் அவர் உதயநிதி ஸ்டாலி-னுடன் நடிக்க ஒப்பந்தம் ஆகியுள்ளார். ஆகவே, நயனின் வெள்ளிவிழா நாயகன் உதயநிதி ஸ்டாலின்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

சூப்பர் ஸ்டார்கள், மூத்த நடிகர்கள், நடுத்தர வயது நடிகர்கள், இளம் நடிகர்கள், வளர்ந்துவரும் நடிகர்கள் என்று பல தரப்பட்ட நடிகர்களுடன் நயன் நடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேன் கிண்ணம்



# சுனாமி

வைரமுத்துவின் பார்வையில்...

ஏ கடலே
உன் கரையில் இதுவரையில்
கிளிஞ்சல்கள்தானே சேகரித்தோம்
முதன் முதலாய்ப் பிணங்கள் பொறுக்குகிறோம்

ஏ கடலே
நீ முத்துக்களின் பள்ளத்தாக்கா
முதுமக்கள் தாழியா

உன் அலை எத்தனை விதவைகளின்
வெள்ளைச் சேலை?

உன் மீன்களை நங்கள் கூறுகட்டியதற்காக
எங்கள் பிணங்களை நீ கூறுகட்டுகிறாய்?

அடக்கம் செய்ய ஆளிராதென்றா
புதை மணலுக்குள்
புதைத்துவிட்டே போய்விட்டாய்?

பிணங்களை அடையாளம் காட்டப்
பெற்றவளைத் தேடினோம்
அவள் பிணத்தையே காணோம்

மரணத்தின் மீதே மரியாதை போய்விட்டது
பறவைகள் மொத்தமாய் வந்தால் அழகு
மரணம்
தனியே வந்தால் அழகு
மொத்தமாய் வரும் மரணத்தின் மீது
சுத்தமாய் மரியாதையில்லை

இயற்கையின் சவாலில்
அழிவுண்டால் விலங்கு

இயற்கையின் சவாலை
எதிர் கொண்டால் மனிதன்.

# சுனாமி தந்த சோகம்



சுனாமி பேரலையே
உனக்கு இங்கு என்ன வேலை
நீ வந்தாய் அதிகாலை
யாரும் எதிர் பார்க்கவில்லை.

நீ வந்து விட்டுசென்ற இடமெல்லாம் சுடலை
பார்த்திருக்க திறந்தாய் படலை
கொன்று சென்றாய் என் உறவுகளின் உடலை
நம்பி இருந்தோம் கடலை
நமக்கு நீ ஊற்றினாய் மரணம் எனும் பாலை.

அந்த சோக நாளை நினைவு கூர்ந்து
நான் வைக்கும் மலர் மாலை
இயற்கையின் லீலை
நீ விரித்த மாய வலை
சிக்கி மடிந்தனர் எம் உறவுகள்!

என் சோகத்தைக் கேட்க சுற்றமில்லை
நிம்மதி இனி எனக்கில்லை
எனது அழகுரலை அடக்கிக் கொண்டு
இத்துடன் முடிக்கிறேன் இம் மடலை..!

யோ.மரிய அனிற்றா
நெடுந்தீவு.



# பறிக்கப்பட்ட என் உயிர்கள்



சுருட்டி எடுத்துக் கொண்ட
அந்தச் சுனாமி - எங்கள்
உடைமைகளையும்
உயிர்களையும்
மேய்ந்துகொண்டிருந்தபோது
இருவகையான தொனிகள்
என் காதுகளை
நோகடித்துக் கொண்டிருந்தது.
வலப்பக்கம் என்னைக்கருவில்
சுமந்த தாயின் பாசக்குரலும்
இடப்பக்கம் - என்
குழந்தையை கருவில் சுமந்த தாயின்
அன்புக்குரலும் அழைத்தது.
மரணத்தின் விழிம்பில் நின்று
மன்றாடிக் கொண்டிருக்கும்
அந்த இரு சிறகுகளும்
உடைக்கப்படும் தருணம் நெருங்க நெருங்க
யாது செய்வேன் - என்
விழிகளிரண்டையும்
பிதுக்கிக் கொண்டேன்
சற்று விழித்து திரும்பினேன்.
இருவரையும்
கடல் பறித்துக் கொண்டதே
இரு உயிர்களையும்
இழந்து நானிப்ப
தனிமைப்படுத்தப்பட்டு விட்டேன்
என்னுடன்
என் குழந்தையுமாக

ஏ.ஆர்.நவாஸ்,
கிண்ணியா.

# துயர் தந்த சுனாமி



எட்டு ஆண்டுகள் எம்மை
விட்டு சென்ற போதும்
அன்று நீ தொட்டு
துடைத்த அவலங்கள்
ஆயிரம் ஆயிரம்.
நத்தார் புதுவருடம்
நடந்த முதல் நாள்
கிறிஸ்தவர்கள் கொண்டாடிக்
குதூகலித்து உறவினர்
நண்பர்கள் ஒன்று கூடி
உண்டு, உடுத்து
உறவுகொண்டாடி
தம் குறைபோக்கும் முன்னே
எதிர்பாராத உன்வரவால்,
எத்தனை எத்தனை
அவல துயரங்கள்
இன்றும் எம் மனக்கண்
முன் இடறுகிறது.

ஆ.க.சூரியம்,
களுவாஞ்சிக்குடி.



## ஈழத்துக் கவிஞர்கள்

### கல்வயல் வே. குமாரசாமி

இவர் சிறுவர் பாடல்கள், கவிதைகள் படைத்துள்ளார். இலங்கையின் வடமாகாணத்தில் சாவகச்சேரி கல்வயலைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

இவரது கவிதை நூல்கள்:- மரணநனவுகள், பாப்பாப்பா, பாடு பாப்பா, பாலர் பா பல கவிதைகளை கவியரங்குக்கெனவும் படைத்துள்ளார்.

இவரது கவிதைகளில் ஒன்று

### நிரை மீட்பு

ஏரி முதிரா இளநாம்பன்
கன்றுகள்
ஏரி நிமிரா இளநாம்பன் கன்றுகள்
ஊர் நிமிர
நாளை உழைக்க வளர்த்து எடுத்த
ஏரி நிமிரா இளநாம்பன் கன்றுகள்
பாரா முகமாய் இருக்க முடிஞ்சிடுமே!

வேலி பிரிச்சு
அவற்றை வெளியாலை கொண்டு போய்
காலித்தனம் பண்ணக் கண்டும்
பொறுக்கிறதே!

நாளுக்கு நாளாக
நாற்பது ஐம்பதுவாய்
ஆளுக்காளாய் வந்து
கொண்டெல்லே போறாங்கள்
பச்சை உயிராகப் பார்த்திருக்கக்
கொண்டுபோய்ப்
பிச்சுப்
பிடுங்கி உயிரும் எடுத்து...

'விடுகாலி நாம்பன் கதையை
விடுங்கோ' வாம்!
'பயிரழிவு' என்று
பழி சுமத்திப் போட்டவங்கள்
உயிரழிவும் செய்தல்லே
ஊருலகைப் பேய்க்காட்டி
நீதிக்குச்
சீலை உரிஞ்சு பறிச்செடுத்து
வீதியெல்லாம்
நிர்வாண வேடிக்கை செய்யிறதைப்
பார்த்து
நெடுகப் பெருமூச்சு விட்டென்ன?

ஊர்த்துளவாரம் எமக்கேன்?
என இருந்தால்
எல்லோரும் ஏன்
சும்மா ஏங்கிப் போய் நிற்கிறியள்?
பல்லைக் கடிச்சு
நெருடி அவன் பார்த்தால்
உண்மைகளைக் கட்டி ஒழிச்சால்
முடிஞ்சிடுமே!

மாட்டைப் பிடிச்சவங்கள்
வீட்டைப் பிடிக்க
மணிக்கணக்கே செல்லும்
எழும்புங்கோ வன் கெதியாய்.

வேலணையூர் தாஸ்

கலாபூஷணம்
கே.எஸ்.ஆனந்தன்.

அத்தியாயம் 08

17

# சிங்கை மைந்தன்

# அமரசிம்மன்



**மன்னர்** குணவீரர் அவர்களைப் பார்த்துப் புன்னகை பூத்தார். வாடிச் சுருங்கிய மலர் மீண்டும் மலர்ந்து விரிந்தது போன்று மதுரவல்லியின் மலர் முகம் பிரகாசம் பெற்று விளங்கியது. அவளை அருகே சைகையால் வரவழைத்து அருகே பஞ்சணையில் அமர வைத்துக் கொண்ட குணவீரர் பயப்பட வேண்டாம் என ஆறுதல் கூறினார். அவரது கரங்களைப் பற்றி ஆறுதல் கூறியதோடு தன் கண்களில் ஒற்றிக்கொண்டாள்.

"பெருமானே! என் தந்தையை விட்டு இங்கே நான் வரும் பொழுது மிகத் துன்பத்துடன்தான் வந்தேன். இங்கே தாங்கள் அன்பில் எல்லாவற்றையும் மறந்து எங்கள் மாளிகையில் இருப்பதுபோன்ற உணர்வுடன் வாழ்கின்றேன். நான் வந்த வேளை தந்தையைப் போல பாசமழை பொழிந்த தங்களுக்கு..." அவளால் மேற்கொண்டு பேச முடியவில்லை. நா தழுதழுக்க விம்மினாள்.

"பயப்படாதே குழந்தாய். எனக்கு ஒரு மகள் இல்லாத குறையை நீ தீர்த்துவிட்டாய். சேர மன்னருக்கு நீ இன்னும் சில காலம் என்னுடனிருக்க வேண்டும் என்று செய்தி அனுப்பியுள்ளேன். எனக்கு இப்போதைக்கு ஒன்றமில்லையம்மா. நீ கலங்காதே. மனிதவாழ்வு நிலையில்லாத ஒன்று. விதி வந்து விட்டால் போய்தானே ஆக வேண்டும்.

பிள்ளைகள்இல்லையே என்ற ஒரு மனக்கவலை உள்ளுக்குள் எனக்கிருந்தது. ஆனால் உங்கள் அன்பு மழையில் தோய்ந்த பின்பு அந்தக் கவலையும் எனக்கு இல்லை. எந்தக் குறையுமில்லாத ஆட்சி மக்களின் மகிழ்ச்சியான அமைதி வாழ்க்கை, மந்திரிமாரின் நல்லாசிகள், கனகசூரியன், அமரசிம்மன் இருவரும் நான் பெற்ற செல்வங்கள். இப்போது நீயும் என் குழந்தையாகிவிட்டாய். என்ன குறை எனக்கு? இந்த நிறைவுடன் வல்லிபுரநாதனின் இறையடி சேரவேண்டும் என்பதே என் பிரார்த்தனை" என்று முறுவலித்தார்.

"பெருமானே! தங்களுக்கு எந்தக் குறையும் இல்லாது இருக்க வல்லிபுரநாதர் அருள்புரிவார்" என்று எழுந்தவள் சுந்தரவல்லி நாச்சியார் பால்குவளையுடன் வந்ததைப் பார்த்து "அம்மா நான் இதை மன்னருக்குப் பருகக் கொடுக்கலாமா?" என்று கேட்டாள்.

"மகளே! உன் விருப்பம் எதுவோ அப்படியே செய்யலாம்." என்று சுந்தரவல்லி நாச்சியார் அவ-ளிடம் குவளையைக் கொடுத்தார்.

மன்னர் சாய்ந்திருந்த பஞ்சணைத் திண்டுடன் அமர்ந்து அவரை தன் மலர்க்கரங்களால் அணைத்து குவளையை அவரது ஆதாரங்களுடன் இணைத்தாள். மன்னரும் மகிழ்வோடு பருகினார்.

அவளுடைய கண்களில் பன்னீர் துளிகளாய் ஆனந்தக் கண்ணீர். சுந்தரவல்லி நாச்சியாரின் உள்ளமும் உவகையால் பொங்கியது. அந்த உணர்வ அவர் விழிகளிலும் நீர்த்திவலைகள்.

பால் பருகியதும் பணிப்பெண் கொடுத்த பட்டுத்துணியால் அவர் இதழ்களைத் துடைத்துவிட்டாள். மன்னர் மகிழ்ச்சி ததும்ப அவள் கரங்களைப் பற்றி 'தேவி' என்று சுந்தரவல்லி நாச்சியாரை விழித்து "இதோ நீ வயிற்றில் சுமந்து பெற்றால்தான் பிள்ளையா? இவளும் உன் மகள்தான்." என்று சுந்தரவல்லி நாச்சியாரின் கரங்களில் அவளை ஒப்படைத்தார்.

சுந்தரவல்லி நாச்சியார் அவளை மார்புடன் தழுவி உச்சி மோந்தார். பெரிய உடையார் அந்தக் காட்சியைப் பார்த்துக் கண்கலங்கி நின்றார்.

மன்னர் உடல்நலம் தேறியபடி கலகலப்புடன் கருமமாற்றத் தொடங்கிவிட்டார். கனகசூரியன் பெரிய உடையார் இருவரும் தென்னிலங்கை கரையோரங்களில் வணிகத்தலங்கள் நிறுவும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். அவர் அவர் சிங்கள சிற்றரசர்களுக்கு அனுப்பிய செய்திகள் அவர்களால் மகிழ்ச்சியுடன் வரவேற்கப்பட்டன. ஆகவே தடங்கல்கள் எதுவுமின்றி அவர்கள் முயற்சிகள் நடைமுறைப் படுத்தப்பட்டன.

மாலைக் கதிரவன் தன் வெப்பக்கதிர்களை குளிராக்கி விட்டிருந்ததால் கடலோரக் காற்றும் சேர்ந்து இளவெயிலாகப் பளபளத்துக் கொண்டிருந்தது. மேல்மாட உப்பரிகையில் ஆழ்ந்த சிந்தனையிலிருந்த அமரசிம்மன் கீழே பெண்களின் பேச்சொலியும், நகைப்பொலியும் கேட்டு கீழே பார்த்தான். நந்தவனத்தைத் தாண்டி அமரசிம்மன் மாளிகைக்கு வரும் பாதையில் நான்கு பெண்களுக்குத் தலைமை தாங்கி செளந்தர்ய தேவதையாக மதுரவல்லி வந்து கொண்டிருந்தாள். தன்னுடைய மாளிகைக்கே அவர்கள் வருகிறார்கள் என்பதை ஊகித்துக்கொண்ட அமரசிம்மனுக்கு சில கணப் பொழுது என்ன செய்வதென்றே தெரியவில்லை. திகைப்புற்று அவர்களையே பார்த்துக்கொண்டு நின்றான். தூண் ஒன்றில் சாய்ந்து அவன் நின்றிருந்ததால் அவனை அவர்கள் கவனிக்கவே இல்லை.

ஒரு கணப்பொழுதில் தன்னை சுதாகரித்துக் கொண்ட அமரசிம்மன் படி இறங்கி மாளிகையின் முகப்பு வாயிலுக்கே வந்தபோது சேர இளவரசியும் பணிப் பெண்களும் அவ்விடம் வந்துசேர்ந்தனர். அவனைப் பார்த்ததும் மதுரவல்லியின் சுந்தரவதனத்தில் சூரியப்பிரகாசமாகப் புன்னகை மலர்ந்தது. படபடக்கும் கருவண்டு விழிகளில் ஓர் மலர்ச்சி. கரம் குவித்து வணக்கம் செலுத்தியதுடன் "தளபதியாருக்கு சேரநாட்டு இளவரசியின் வணக்கம்" என்று தேமதுரக் குரலில் கூறினாள்.

"வணக்கம்! வரவேண்டும் வரவேண்டும் சேர இளவரசியார் என் மாளிகைக்கு வந்தமை நான் செய்த புண்ணியம். தங்கள் வரவால் இந்த மாளிகை பெருமையடைகின்றது" என்றான் அமரசிம்மன்.

(தொடரும்...)


தினந்தோறும் வெளிவருகிறது

விலை 10/=

**தினமுரசு** நாளிதழ்

**தினந்தோறும் கல்விமுரசு இணைப்பு**

- கனதிமிக்க கட்டுரைகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- குட்டிக் கதைகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்" - "மெய்தான் பாருங்கோ" "பதிவிறக்கப் பெட்டகம்"

A/L, O/L மற்றும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் – விடைகள் ஒவ்வொரு நாளும் தினமுரசில் வெளியாகிறது.

தினமுரசு நாளிதழ் ரூ.10/= மட்டுமே

இப்போது நீங்கள் அறிய விரும்பும் அன்றாடச் செய்திகள் அனைத்தையும் **பத்தே ரூபா** கொடுத்து படித்துக்கொள்ள முடியும்




# லேடிஸ் ஸ்பெஷல்

# 2020இல் பெண்களுக்கு முக்கிய பங்கு!

**பெண்களை** வீட்டை விட்டு வெளியே அனுப்பாமல், படிக்க வைக்காமல், வாக்குப் போட உரிமை தராமல் வைத்திருந்த காலம் மலையேறி விட்டது. இப்போதெல்லாம்

அவர்கள் ஆண்களுக்கு நிகராக... ஏன் ஆண்களைவிட மேலாகவே பல பணிகளில் சிறப்பாக ஈடுபட்டு வருகின்றனர். பல குடும்பங்களில் பண நிர்வாகம் பெண்கள் கைக்கு மாறி வருகிறது. 2020ஆம் ஆண்டுக்குள் பெரும்பாலும் பெண்களே முக்கிய முடிவுகளை எடுக்கும் நிலை ஏற்படும் என்று ஒரு கருத்துக் கணிப்பில் தெரிய வந்துள்ளது.

அப்போது ஆண்கள் சம்பள கவரை பெண்களிடம் கொடுத்துவிட்டு அவர்களிடமிருந்து செலவுக்கு வாங்கிக் கொள்ளும் நிலை ஏற்படும். லாய்ட்ஸ் டி.எஸ்.பி. என்ற நிறுவனம், இங்கிலாந்து, ஜெர்மனி, சீனா ஆகிய 3 நாடுகளில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களிடம் இது பற்றி கருத்து கணிப்பு நடத்தியது. அதன் முடிவுகள்:

பெண்களிடம் நிதி நிர்வாகம் உள்ள 10இல் 9 வீடுகளில் சேமிக்கும் பழக்கம் அதிகமாக உள்ளது. ஆனால், 82 சதவீத வீடுகளில் பண விவகாரங்களை ஆண்களே கவனித்து வருகின்றனர். எல்லா வயது பிரிவினரையும் ஆராய்ந்தால் இன்னும் 8 ஆண்டுகளில் அதாவது 2020க்குள் பெண்களே நீண்டகால முக்கிய நிதி முடிவுகளை மேற்கொள்பவர்களாக இருப்பார்கள். தற்போது 45 வயதுக்கு உட்பட்ட தம்பதிகள் உள்ள குடும்பங்களில் 52 சதவீதம் வீடுகளில் நீண்டகால நிதி திட்டங்களை பெண்களே முடிவெடுக்கின்றனர்.

45 வயதுக்கு மேற்பட்ட வயதுள்ள தம்பதிகளின் வீடுகளில் ஆண்கள் நிதி நிர்வாகத்தை கவனித்துவருகின்றனர். இந்த நிலை இன்னும் 8 ஆண்டுகளில் தலைகீழாக மாறிவிடும். இளம் வயது பெண்கள் தங்களின் அன்றாட செலவு-களை நன்கு நிர்வாகம் செய்கின்றனர். இவ்வாறு கருத்து கணிப்பு முடிவுகள் தெரிவிக்கின்றன.



## பெண்களின் சுதந்திரம்

# யார் கையில்?



இருபத்தோராம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே பெண் தனக்கான பேச்சை பேசத் துவங்கிவிட்டாள். அதற்குமுன் அவ்வாறு பேசி இருந்தால் அது ஒரு பெரும் குற்றமாக கருதப்பட்டது. அந்த நிலையில் இருந்து மாறி ஆணுக்கு சரி நிகர் பெண்கள் என்ற நிலை வந்துவிட்டது. பெண்கள் இன்று ஒரு பெரிய இமயம் போல் வளர்ந்து நிற்கின்றார்கள் என்றால் அது மிகையாகாது.

பொதுவாக பெண்களை பற்றி நினைக்கும்போதே முதலில் ஒவ்வொருவர் நினைவிலும் வருவது, பெண்கள் என்றால் மென்மையானவர்கள், வலிமையற்றவர்கள் என்பதுதான்.

அந்த எண்ணத்தை புரட்டிப் போடவே நம் பெண்கள் செய்த பல வேலைகள் அனைவரின் கவனத்தையும் திசை திருப்புவதாக அமைந்தது. தலையில் கலவையை தூக்கி அதில் கிடைத்த வருமானத்தின் உதவியுடன் குடும்பத்தை ஆளாக்குபவளும் பெண்ணே!

தலைக்கு மேலே ஓடும் விமானத்தை செலுத்தி சகாப்தம் படைத்தவளும் பெண்ணே! இப்படி எல்லா துறைகளிலும் பல சாதனைகளை பெண்கள் செய்து முத்திரைகள் பதித்திருக்கின்றனர்.

முதலில் நமக்கு முன்னே நிற்கும் கேள்விகள்: பெண் சுதந்திரம் என்றால் என்ன?

கண்டிப்பாகப் பெண் சுதந்திரம் என்பது ஆண். பெண் இருவரிடமும் உள்ளது. கல்வி செல்வத்தை கொடுத்து சமுதாய அந்தஸ்த்தை உயர்த்திக் கொள்ள தந்தை முதல் விதை விதைக்கிறார். அதில் ஆரம்பிக்கிறது ஒரு பெண்ணின் போராட்டம்.

கிடைத்த கல்விச் செல்வத்தை பயன்படுத்த கையில் எடுக்கும் ஆயுதம்தான் வேலைக்கு செல்லுதல். இன்றைய காலகட்டத்தில் இது ஒரு நிர்ப்பந்தமாகிப் போனது என்பது உண்மையான உண்மை.

திருமண வாழ்க்கையானாலும் சரி, தனிமையில் வாழ்வதானாலும் சரி, ஒரு பெண்ணிற்கு மிகவும் சவாலாக அமைவது அவளின் எதிர்கொள்ளும் திறனே! வெற்றியானாலும் சரி, தோல்வியானாலும் சரி, அதை எடுத்துக்கொள்ளும் முறைதான் அவளை செம்மைப் படுத்துகிறது.

பண்பாடு, கலாசாரம், நாகரிகம் போன்றவற்றை மீறுவதுதான் பெண் சுதந்திரம் என்று எண்ணாமல், இவற்றுள் தானும் அடக்கம் என்று தனது மனதை பக்குவப்படுத்திக் கொள்ளுதலும் ஒரு பெண்ணின் மேன்மையான எண்ணத்தை வெளிச்சம் காட்டும் திறன் உள்ளது.

ஆணின் கையிலா பெண் சுதந்திரம்? பெண் எடுத்துக் கொள்வதிலா பெண் சுதந்திரம்? பெண்ணே பெண்ணின் சுதந்திரத்தை தடுப்பதிலா பெண் சுதந்திரம்? இல்லை சுதந்திரம் என்பது நம்மிடம் தான் (பெண்களிடம்தான்) உள்ளது என்பது எனது தாழ்மையான கருத்து.

எத்தனை கஷ்டங்கள் வந்தாலும் நமக்கென்று ஒரு எல்லைக் கோட்டை விதித்துக்கொண்டு வாழ்க்கையை நடத்துபவளே சுதந்திரமான பெண் என்பது என் தரப்புவாதம். தன்னைச் சுற்றி ஒரு சக்கர வளையத்தை ஏற்படுத்திக் கொண்டு தனக்கு தேவை இல்லாதவைகளை வளையத்திற்குள் இருந்து வேடிக்கை பார்க்கவேண்டும்.

சுதந்திரம் வெளியே இல்லை. பெண்ணாகிய உனக்குள்ளேதான் ஒழிந்து கொண்டிருக்கிறது. அதை தேடிப் பிடித்து சாதகமாக மட்டுமின்றி, சமுதாய கண்ணோட்டத்திற்கும் ஏதுவாகப் பயன் படுத்தினால் ஒரு பெண்ணின் சுதந்திரம் - அது அவளுக்குக் கொடுக்கும் மதிப்பும் மரியாதையும் - இமயத்துக்கு உயராதோ?

பெண் ஒரு உண்மையான பெண்ணாக இருக்க சுதந்திரம் இல்லையென்றால் ஆணுக்கும் அதேநிலைதான். இதை உணர புரிதல் மிகவும் அவசியம். ஆமாம். நம் நிலையை முதலில் நாம் புரிந்து கொள்ளவேண்டும் என்ற எண்ணங்கள் ஒவ்வொரு பெண்ணிற்கும் மிகவும் அவசியம். பெண்களுக்கு விரோதி வெளியே இருந்து வருவதில்லை. ஒரு இக்கட்டான காலகட்டத்தில் அவளே அவளுக்கு விரோதியா-கிறாள். அவசரம், விரக்தி தரும் வேதனை இவைகள் அவளின் யோசித்து முடிவெடுத்தல் என்ற ஆற்றலை விழுங்கிவிடுகிறது.

அதேபோல் சில சமூகத்தில் பெண்கள் பற்றிய, அவர்கள் மீது செலுத்தப்படும் வன்முறை பற்றிய, உரிமை மறுப்புப் பற்றிய விடயங்கள் கணக்கிலடங்கா. இது அங்கொன்றும் இங்கொன்றுமாக இன்றுவரை அரங்கேறியும் வருகின்றது. இவற்றில் இருந்து மீண்டு வந்து தனக்கென ஒரு வாழ்வை - மகிழ்ச்சிமிக்க வாழ்வை - அமைத்துக் கொள்பவளே பாரதி கண்ட கனவுலக நாயகியாவாள்!

வேண்டாத மருமகள், அப்பாவிப் பெண்களுக்கு நடக்கும் கொடுமைகள், இவை அனைத்தும் இன்றும் நடந்து கொண்டிருக்கிறது என்பது அனைவரும் அறிந்த உண்மை. இது போன்ற அப்பாவி பெண்களுக்கு 'பெண்கள் பாதுகாப்பு சட்டங்கள்' பற்றிய விழிப்புணர்ச்சி கண்டிப்பாக ஏற்படுத்த எல்லோரும் முன் வரவேண்டும்.



# மணமகள் அலங்காரம்


தற்கால பெண்களுக்கு படிப்பு, வேலை மற்றும் பல வேலைகள் இருப்பதால் அழகை மேம்படுத்த நேரம் கிடைப்பதில்லை. திடீரென திருமணம் நிச்சயமானவுடன் அவர்களுக்கு தங்களை அழகுபடுத்திக் கொள்ளும் எண்ணம் அதிகமாகிறது. 6 மாதம் முன்னதாகவே திருமணம் நிச்சயமான பெண்களுக்கு அவர்களை தயார் செய்துகொள்ள நிறைய நேரம் கிடைக்கிறது.

முதலில் 6 மாதம் முன்னதாக என்றால் என்ன செய்யமுடியும் என்று பார்க்கலாம். அவர்களுக்கு முதலில் தலைமுடியை மாதம் ஒரு முறை நன்றாக எண்ணெய் மசாஜ் செய்துகொள்ளலாம். ஹென்னா கண்டிஷனர் போட்டு வரலாம். முகத்துக்கு நல்ல தரமான பிளீச்சிங் மற்றும் பழ பேஸியல் செய்து முகத்தை பளபளப்பாக வைத்துக் கொள்ளலாம்.

அது மட்டுமல்லாமல் பெடிக்யூர், மெனிக்யூர் மாதம் ஒரு முறை செய்து கொண்டே வந்தால் கல்யாண நேரத்தில் நல்ல பலன் தெரியும். இவர்கள் திருமணத்துக்கு முதல் மாதமும், திருமணத்துக்கு முன்பும் ஒரு கோல்டன் பேஷியல், பிரெஞ்சு பெடிக்யூர், மெனிக்யூர் ஆகியவற்றை செய்து கொள்வதன் மூலம் அழகிய தோற்றத்தை பெறலாம். இந்த 6 மாதம் எப்பொழுது வெளியில் சென்றுவிட்டு வந்தாலும் சுத்தமான நீரினால் முகத்தை கழுவுதல், வெள்ளரிப் பிஞ்சை கண்கள் மேல் வைத்துக் கொள்ளுதல், எலுமிச்சை, தயிர் போன்றவற்றை முகம் மற்றும் கை, கால்களில் தடவி வருதல் ஆகியவற்றை செய்துவர வேண்டும். இப்படி செய்து வந்தால் இது கூடுதல் பலனை அளிக்கும்.

இனி 3 மாதம் முன்னதாகவே தயாராக வேண்டிய மணப்பெண் முதல் மாதம் முதலே பிளீச்சிங் பேஸியல் அல்லது கோல்டன் பேஸியல் ஆகியவற்றை தவறாமல் செய்து கொள்வது நல்லது. இது முகப்பொலிவை உடனடியாக எடுத்துக்காட்டுகிறது.

# இறால் மஞ்சூரியன்



இறால்(சுத்தம் செய்தது) - 200, கிராம் பெரிய வெங்காயம் - 1
குடை மிளகாய் - 1, வெங்காயத்தாள் - 2கொத்து
பூண்டு - 10, சில்லி ஃப்லேக்ஸ் - 1மேசைக்கரண்டி
சோயா சோஸ் - 2தேக்கரண்டி,
ரெட்சில்லி சாஸ் - 2தேக்கரண்டி
டொமெட்டோ சோஸ் - 3தேக்கரண்டி
மிளகு தூள் - 1கரண்டி, உப்பு - தேவைக்கு
சீனி - 1 கரண்டி, எண்ணெய் - தேவையானளவு

**செய்முறை:**

முதலில் இறாலை சுத்தம் செய்து, அதில் உப்பு மிளகு தூள் சேர்த்து பிரட்டி 15நிமிடம் ஊற வைக்கவும். குடை மிள-காயை பெரிய துண்டுகளாக வெட்டி வைக்கவும். பெரிய வெங்காயத்தையும், பூண்டையும் பொடியாக நறுக்கி வைக்கவும். வெங்காயத்தாளையும் நறுக்கி கொள்ளவும். இறாலை எண்ணெயில் பொன்னிறமாக பொரித்தெடுத்து கொள்ளவும்.

இப்போது பொரித்த எண்ணெயிலேயே, வெங்காயத்தை போட்டு 10நிமிடம் நன்றாக வதக்கவும். பிறகு அதில் சில்லி ஃப்லேக்ஸ், இந்த கலவைக்கு மட்டும் தேவையான சிறிது உப்பு, சீனி, சோயா சோஸ், சில்லி சோஸ், டொமெட்டோ சாஸ் சேர்த்து சோஸின் பச்சை வாசனை போகும்வரை வதக்கி பிறகு குடை மிளகாய், வெங்காயத்தாள் சேர்த்து ஒரு சுற்று வதக்கி பொரித்த இறாலை சேர்த்து பிரட்டி இறக்கவும்.

# பரிசு 1000/- ரூபா. வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

**பரிசுப் போட்டி இல :-347**

**கேள்வி : சர்வதேச ரீதியில் கிரிக்கெட் வாரியத்தின் தலைவராக தெரிவு செய்யப்பட்ட முதல் பெண்மணி?**

**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:-31.12.2012**

விடையைக் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 347
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :- 345இற்கான விடை :- 2-4 மணி நேரத்துக்குள் வெயிலுக்குள் செல்லக் கூடாது.
பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:- M.F. பஸ்லினா, இல 51, பாடசாலை வீதி, தில்லையடி, புத்தளம்.

**347**

பெயர் : ..................
முகவரி : ..................
..................
தே.அ. அட்டை இல : ..................
விடை : ..................
கையொப்பம் : ..................



# அவுஸ்திரேலியப் பயணங்களின் பிரதிபலிப்பான விநோதங்கள்

பிரகஸ்பதி

அவுஸ்திரேலியப் பயணங்களே கடந்த ஆறு மாதத்துக்கும் மேலாக சூடு பிடித்த விடயமாக இருந்து வருகிறது. இந்த வாரம் வரையில் அதன் வெப்பம் குறைந்தபாடில்லை எனும் அளவுக்கு விசேஷங்கள் நடந்த வண்ணமே இருக்கின்றன. அதில் கடந்த வாரம் அவுஸ்திரேலிய அமைச்சர் இலங்கைக்கு வருகை தந்தது அமைந்திருந்தது.

இதனை ஏன் விசேஷம் என்று சொல்கிறேன் என்று உங்களுக்கு யோசனை ஏற்படலாம். இதுபோன்ற அவுஸ்திரேலியப் பயணங்களின் விசேடங்கள் குறித்து ஆரம்பத்திலிருந்து ஆராயலாம்.

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு கடந்த வெள்ளிக்கிழமை இலங்கைக்கு வருகைதந்த அவுஸ்திரேலியா வெளிவிவகார அமைச்சர் பொப் கார் கல்வித்துறையை மேம்படுத்துவதற்கு முதலீடுகள் அத்தியாவசியமானதாகும். அந்தவகையில் இலங்கையின் கல்வி மேம்பாட்டிற்கு 4590 மில்லியன் ரூபா வழங்குவதற்கு தமது அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது என தெரிவித்துள்ளார்.

ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை கல்வித்துறையை மேம்படுத்தும் வகையிலேயே இந்த நிதியை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்திருக்கிறார்.

நமது நாட்டிலிருந்து வெளிநாட்டு ஆசை கொண்டுள்ள இளைஞர்கள் அவுஸ்திரேலியாவுக்கு செல்வது குறித்தும் அங்கு செல்வதனால் தமது நாட்டுக்கு ஏற்பட்டுவரும் பிரச்சினைகள் குறித்தும் ஆராயும் பொருட்டு இலங்கைக்கு வருகை தந்த அமைச்சர் பொப் கார் இவ்வாறான கருத்தை வெளியிட்டமை வெளிப்படையான நோக்கில் விநோதமானதாகவே தெரியும்.

கிழக்கு மாகாணமே ஆரம்பத்திலிருந்து அவுஸ்திரேலிய விவகாரத்தில் அதிகம் அடிபட்டது என்ற வெளிப்படையிலும் இவ்விடயம் அலசப்படுகிறது.

மனிதக் கடத்தலை கட்டுப்படுத்துவது, சுற்றுலாத்துறை மற்றும் வர்த்தக உறவுகள் ஆகியவை தொடர்பில் இலங்கை அதிகாரிகளுடன் கலந்துரையாடிய அமைச்சர் பொப் கார் இலங்கைக்கான அவுஸ்திரேலியாவின் உதவி குறித்தும் முக்கிய கலந்துரையாடல்களில் ஈடுபட்டார். அவருடைய விஜயத்தில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் வெளி விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோரையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்.

இலங்கையைச் சேர்ந்த புகலிடக் கோரிக்கையாளர்களை அவர்களின் நாட்டுக்கு திருப்பியனுப்பி வைக்கும் நடைமுறையானது

மனிதக் கடத்தல்களை குறைவடையச் செய்யுமென அவுஸ்திரேலியா நம்புகிறது. ஆனால் புகலிடக் கோரிக்கையாளர்கள் வெளிநாடுகள் அதுவும் அபிவிருத்தி அடைந்த நாடுகளின் மனோநிலை மிக இளகியது. அவர்களுடைய நாட்டுக்குள் சென்றுவிட்டால் திருப்பி அனுப்பிவிட மாட்டார்கள் என்றே நமது நாட்டிலிருந்து சட்டவிரோதமாக கப்பலில் செல்கையில் எண்ணுகிறார்கள்.

தற்போது அவுஸ்திரேலியாவிலிருந்து நவுறு தீவுக்கும், இலங்கைக்கும் அனுப்பப்பட்டுக் கொண்டுள்ள போதும் இங்கிருந்து கப்பலில் செல்லவும் துணிகின்றனர். இதற்கு கடந்த வெள்ளிக்கிழமை மட்டக்களப்பின் செங்கலடியில் வைத்து கைது செய்யப்பட்ட 14 பேரை உதாரணம் காட்டலாம்.

கடந்த வாரத்தின் இறுதி வரைக்குமான தகவல்களின்படி இலங்கையைச் சேர்ந்த சுமார் 750 புகலிடக் கோரிக்கையாளர்கள் தங்களை இலங்கைக்கு திருப்பியனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளனர் என்று தெரிகிறது. இந்த நிலைமைக்கு அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள் என்றே மேலும் சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கைக்கு வருகை தருவதற்கு முன்னர் அமைச்சர் பொப் கார், இலங்கை அரசாங்கத்துடன் எங்களுக்குள்ள உறவு குறித்து நாங்கள் மிகமிக மகிழ்ச்சியடைகின்றோம். பொருளாதார நோக்கத்தில் புகலிடம் கோரி வருபவர்களை திருப்பியனுப்புவதற்கு இலங்கை வழங்கும் ஒத்துழைப்பையிட்டு நாங்கள் மிகமிக மகிழ்ச்சியடைகின்றோம் எனத் தெரிவித்திருந்தமை ஞாபகப்படுத்தப்பட வேண்டும்.

இராஜதந்திர உறவு என்ற பெயரில் நாடுகளுக்கு நாடு இருக்கும் நெருக்கமான நடவடிக்கை சாதாரண மக்களைப் பாதிப்பதாக அமைவதைப் பற்றி யாரும் அக்கறை கொள்வதில்லை என்பதே இந்த இடத்தில் கவலையைத் தருகிறது.

இந்த இடத்தில், ஏன் அவுஸ்திரேலியா இலங்கைக்கு கல்விக்கு பணத்தைக் கொடுக்கிறது என்ற விடயத்துக்கு வரலாம். மேலை நாடுகள் எப்போதும் தம்முடைய நாடுகளில் ஒழுக்கம், கல்வி, நிபுணத்துவம் குறைந்தவர்களை உள்வாங்கிக் கொள்வதை விரும்புவதில்லை. தமது நாட்டுக்குள் வருபவர்கள் சட்ட ஒழுங்குகளுக்குக் கட்டுப்பட்டவர்களாகவும், கல்வி, நிபுணத்துவத் திறமை கொண்டவர்களாகவும் இருப்பதையே விரும்புகிறது.

இதனை வெளிப்படையாகச் சொல்லி விடாது மறைமுகப் பாணியில் இலங்கைக்கும் நம் நாட்டு மக்களுக்கும் அவுஸ்திரேலியா சொல்லியிருக்கிறது. அதேநேரம், உங்களது நாட்டிலிருந்து அவ்வளவு தொகையில் சட்டவிரோத புகலிடக் கோரிக்கையாளர்கள் வருகையில் வெறும் சிறிய தொகைகளை கைது செய்துவிட்டு அதனை வைத்து ஒன்றும் செய்ய முடியாது என்பதனையும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் பொப் காரின் இலங்கைக்கான விஜயத்தின் நோக்கம், மனிதக் கடத்தலை கட்டுப்படுத்துவது, சுற்றுலாத்துறை மற்றும் வர்த்தக உறவுகளை மேம்படுத்துவதாகவே அமைந்திருந்தது.

இதற்கிடையில், இனம்தெரியாத ஆயுதக்குழுக்களின் அச்சுறுத்தலுக்கு உட்பட்டவர்கள் தேர்தல் காலங்களில் அரசாங்கக் கட்சிக்கு எதிராக செயற்பட்டு அச்சுறுத்தலுக்கு உள்ளானவர்கள் அவுஸ்திரேலியாவுக்கு வருகின்றனர். மனிதநேய உணர்வுமிக்க அவுஸ்திரேலியா அரசாங்கம் தங்களிடம் புகலிடம் தேடி வந்தவர்களை திருப்பி தாய்நாட்டுக்கு அனுப்புவதை நிறுத்தி உதவ முன்வரவேண்டும். தமிழ் தேசிய கூட்டமைப்பு கோரிக்கை ஒன்றை அவுஸ்திரேலியாவுக்கு விடுத்திருக்கிறது.

அவர்களுடைய கோரிக்கையில் உள்ள சில விடயங்கள், கடந்த சில மாதங்களாக பலர் படகுமூலம் தமது உயிரைப் பணயம் வைத்து 20 நாட்களுக்கு மேலாக கடலில் பயணம் மேற்கொண்டு அவுஸ்ரேலியாவை அடைந்துள்ளதாக அறிகின்றேன். இவர்களில் பல இந்நாட்டின் அசாதாரண சூழ்நிலையை கருத்தில் கொண்டு செல்வதாக அறியப்படுகின்றது.

உண்மையிலேயே இனம்தெரியாத ஆயுதக்குழுக்களின் அச்சுறுத்தலுக்கு உட்பட்டவர்கள் தேர்தல் காலங்களில் அரசாங்கக் கட்சிக்கு எதிராக செயற்பட்டு அச்சுறுத்தலுக்கு உள்ளானவர்கள்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு வெற்றிக்கு பாடுபட்டவர்கள் போன்றோர் தங்களுக்கு ஏற்பட்ட உயிர் அச்சுறுத்தலின் நிமிர்த்தம் செல்கின்றனர் என அறியமுடிகின்றது.

ஆனால் கடந்த கால யுத்த சூழல் மற்றும் மக்கள் மீள்குடியேற்றப்பட்ட பின் ஏற்பட்ட சூழல் போன்றவற்றின் காணாமல் போனோர் சார்பாக இதுவரை எதுவித தகவல்களோ அல்லது ஆராய்வதற்கான தகுந்த குழுக்களோ, நடவடிக்கையோ இல்லாத நிலையில் அச்சுறுத்தலுக்கு உள்ளானவர்களின் பாதுகாப்பு சார்பாக எந்த உறுதிப்படுத்தலையும் வழங்க முடியாத சூழல் எங்களுக்கு உள்ளது.

இந்நிலையில் தமது உயிரை பணயம் வைத்து நீண்ட கடற்பயணத்தை பல நாட்களாக மேற்கொண்டு அவுஸ்திரேலியாவை அடைந்தவர்கள் மீண்டும் தமது நாட்டுக்கு திருப்பி அனுப்புதல் என்பது மிகவும் வேதனையான விடயமாகும். அத்தோடு மனிதாபிமானமற்ற செயற்பாடாகவும் உள்ளது. இவ்விடயமாக அவுஸ்திரேலியா அரசாங்கம் தமது தீர்மானத்தை பரிசீலிக்க வேண்டும் என்பதாக அமைந்திருக்கிறது.

இதேநேரம், அவுஸ்திரேலியா தமது நாட்டுக்கு சட்டவிரோதமாக செல்லும் இலங்கையர்களை அங்கிருந்து திருப்பி அனுப்பும் அல்லது தமது பிரதேசத்திலிருந்து நவுறுத்தீவு போன்ற இடங்களுக்கு அனுப்பி வைக்கும் வேலைகள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. இதற்கு கடந்த வாரம் திருப்பி அனுப்பப்பட்ட ஒரு தொகையினரைக் குறிப்பிட முடியும்.

யுத்தம் நிறைவடைந்ததையடுத்து இலங்கை நாட்டிலிருந்து மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதற்கான முயற்சிகளை அதிகமாக தமிழ் இளைஞர்கள் மேற்கொள்ளத் தொடங்கியிருந்தனர். கனடா, லண்டன், அவுஸ்திரேலியா, பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளே அவர்களது இலக்காகவும் அமைந்திருந்தது.

யுத்தத்தின் பின்னர் ஏறபட்ட சுதந்திரம் தமக்கு எதனையும் செய்ய முடியும் என்ற நம்பிக்கைகளே அதற்குக் காரணமாக அமைந்திருந்தது. ஆனால், அதிகமான வருமானத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும், அத்துடன் சுதந்திரமான வாழ்க்கையினை வாழ முடியும் என்பவைகளே அதன் உட்காரணங்களாகும்.

இலங்கையைப் பொறுத்தவரையில், பொருளாதாரச் சுமை மிகப் பெரிதான பிரச்சினையாக காணப்படுகிறது. தமிழர்களைப் பொறுத்தமட்டில் வடக்கு கிழக்கில் நடைபெற்றிருந்த மிகக் கொடுமையான யுத்தம் மிகப் பெருமளவான பொருளாதார இழப்பையும், அச்சத்தினையும், நெருக்குதல்களையும் ஏற்படுத்தியிருந்தது. அதிலிருந்து விரைவாக மீளவேண்டும் என்றே அவர்கள் விரும்புகிறார்கள்.

ஒன்றும் இரண்டுமாக, அவுஸ்திரேலியாவுக்கு இலங்கைத்தமிழர்கள் சட்டவிரோதமாக செல்வது கடந்த 3 வருடங்களாக மிகவும் வேகமாக நடைபெற்று வருகிறது. ஆனால், இந்த வருடத்தில் அதிகமாக நடைபெற்றிருந்தது. இலங்கைக்கு அண்மையில் இருக்கும் அவுஸ்திரேலியாவை மிக விரைவாக சென்றடைந்துவிடலாம் என்ற நம்பிக்கை அந்த வேகத்தினை அதிகரித்தது.

அரசாங்கத்தில் இருப்பவர்களின் ஒத்துழைப்பும் ஆரம்பத்தில் இருந்ததனால் இவ்வாறு அதிகம் பேர் வீடு காணிகளை விற்றும் சென்றதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் தற்போது நடைபெறும் கைதுகளைப் பார்த்து அரசுக்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்ற முடிவுக்கு வர முடியாதுள்ளது.

அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவில் தற்போது 1500க்கும் மேற்பட்ட அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும், அவர்களிடம் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன எனவும் தெரிகிறது. 2009ஆம் ஆண்டில் 736 பேரும், 2010-ல் 536 பேரும், 2011-ல் 211 பேரும் படகுகள் மூலம் அவுஸ்திரேலியா சென்றுள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் இந்த வருடத்தில் மாத்திரம் ஆயிரம் பேர்வரையில் சென்றிருக்கலாம் என கணக்கிடப்படுகிறது.

கிழக்கு கடற்கரை சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்பவர்களுக்கு இலகுவானதாக அமைந்திருக்கிறது. அந்தவகையில் தான் மட்டக்களப்பு கடற்கரை மிகச் சாதாரணமாகப் பயன்படுத்தப்பட்டது. இதில் தடைபோட்ட முதலாவது முயற்சியாக கடந்த யூலை மாத ஆரம்பத்தில் அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல முயன்ற இரண்டு சிறுவர்கள், ஒரு பெண் 37 ஆண்களுடன் 41 பேர் மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை மாங்கேணியில், வாகரைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அதிலிருந்து தொடங்கிய கைதுகள் இப்போதும் ஓயாது நடைபெற்று வருகின்றன. இதில் இதுவரைக்கும் 500க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு பிணைகளில் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஆனால் இப்போதும் இரகசிய முயற்சியாக கப்பலில் அனுப்புபவர்கள் செயற்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள். அதன் மர்மம் புரியாததாகவே இருக்கிறது.

படகுப் பயணங்கள் ஆபத்தானவை என்ற வகையிலான அறிவுறுத்தல்கள் வெளிநாட்டுத் தூதரகங்கள், இல்ங்கை அரசாங்கம், பொலிஸார் போன்றவர்களால் விடுக்கப்படுகின்றபோதும் அவை பொருட்படுத்தாத மக்களை எவ்வாறு சமாதானப்படுத்துவது என்பது யாராலும் சிந்திக்க முடியாத விடயமாகவே இருக்கிறது.


இலங்கையில் அரைநூற்றாண்டுக்கும் மேலாக இருந்துவரும் இன முறுகலால் உருவான பெரும் சிக்கலின் பிரதிபலிப்பைத் தொடும், இதற்குரிய மாற்று வழிகளை அவுஸ்திரேலிய அரசாங்கமும், இலங்கை அரசாங்கமும் கண்டுபிடித்தே ஆகவேண்டும். இருந்தாலும் விநோதங்கள் முடியாது என்பதால் எல்லோரும் சிந்திக்கலாம்.

**இலங்கையைச் சேர்ந்த புகலிடக் கோரிக்கையாளர்களை அவர்களின் நாட்டுக்கு திருப்பியனுப்பி வைக்கும் நடைமுறையானது மனிதக் கடத்தல்களை குறைவடையச் செய்யுமென அவுஸ்திரேலியா நம்புகிறது. ஆனால் புகலிடக் கோரிக்கையாளர்கள் வெளிநாடுகள் அதுவும் அபிவிருத்தி அடைந்த நாடுகளின் மனோநிலை மிக இளகியது. அவர்களுடைய நாட்டுக்குள் சென்றுவிட்டால் திருப்பி அனுப்பிவிடமாட்டார்கள் என்றே நமது நாட்டிலிருந்து சட்டவிரோதமாக கப்பலில் செல்கையில் எண்ணுகிறார்கள். ஒன்றும் இரண்டுமாக, அவுஸ்திரேலியாவுக்கு இலங்கைத் தமிழர்கள் சட்டவிரோதமாக செல்வது கடந்த 3 வருடங்களாக மிகவும் வேகமாக நடைபெற்று வருகிறது. ஆனால், இந்த வருடத்தில் அதிகமாக நடைபெற்றிருந்தது. இலங்கைக்கு அண்மையில் இருக்கும் அவுஸ்திரேலியாவை மிக விரைவாக சென்றடைந்துவிடலாம் என்ற நம்பிக்கை அந்த வேகத்தினை அதிகரித்தது.**





ஜோசப் கிருஸ்ணா



# நியாயமற்ற வலிகள்

**இந்திய** இங்கிலாந்துக் கிரிக்கெட் தொடர் இந்திய அணிக்குப் பெருஞ் சோதனையாக அமைந்து விட்டது. சில வீரர்களின் இருப்பையே கேள்விக்குறியாக்கி உள்ளது. அதனால் எதிர்காலத்தில் இளம் வீரர்களின் பிரசன்னத்துக்கு வழிவகுத்துள்ளது என்பதும் உண்மைதான்.

ஆனால் பல தரப்பாரும் அணித்தலைவர் டோனி மீது ஏன் குறிபார்த்து எறிகிறார்கள் என்று புரியவில்லை. ரசிகர்கள் அவரின் உருவப் பொம்மையை எரிக்கிறார்கள். சில முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் இவர் எப்போதோ விலக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கொதிக்கிறர்கள். இவருக்கு மூன்று வகையான போட்டிகளிலும் சுமை கூடிவிட்டது. எனவே ஒரு சிலவற்றின் அணித் தலைமையைப் பறிக்க வேண்டும் என்கிறார்கள். இப்படியான குற்றச்சாட்டுக்கள் எல்லாம், ஆலோசனை வடிவில் வந்தால் ஆரோக்கியமாக இருந்திருக்கும்.

ஆனால் பகைவனை நோக்கி அம்பெய்வது போல் வருவதுதான் மனவருத்தமாக இருக்கிறது. இதில் ஒரு விடயம் விரல் நீட்டுபவர்கள் எல்லாம் தேவலோகத்தில் இருந்து வந்து கிரிக்கெட் விளையாடியவர்கள் அல்ல. இப்போது டோனி எதிர்நோக்கும் அவமதிப்பை ஏதோ ஒரு வகையில், சந்தர்ப்பத்தில் இவர்களும் எதிர்கொண்டு நொந்து போனவர்கள் என்பதுதான். டோனி உலகக் கிண்ணம் வென்ற போது இமயமலை உச்சியில் ஏற்றி வைத்தவர்கள், இன்று அதளபாதாளத்தில் தள்ள முயற்சித்திருக்கிறார்கள். இது மிகவும் வருத்தத்துக்குரியது.

ஒட்டுமொத்த அணியின் செயற்பாடுகளை விலாவாரியாக ஆராயாமல் டோனியை மட்டும் கண்டிப்பது எந்தளவிற்கு நியாயம்? இங்கிலாந்து அணிக்கு எதிரான பின்னடைவை மிகப் பரந்த ரீதியில் ஆராய்வதே இந்திய கிரிக்கெட் அணிக்கு நன்மை பயக்கும்.

அதைவிடுத்து டோனியை மட்டும் சகட்டு மேனிக்குத் திட்டிக் கொண்டிருப்பது அவ்வளவு விவேகம் அல்ல. இப்பொழுது ஒரு கேள்வி. டோனியை நீக்கிப் புதிய தலைவரை நியமித்துவிட்டால் இந்திய அணி திடீர் எழுச்சிகண்டுவிடுமோ?? அப்படியானால் அந்தத் தலைவர் யார்? அந்தத் தலைவரால் சாதிக்கக் கூடியளவிற்கு இருக்கப் போகும், புதிதாக உள்வாங்கப்படப் போகும் வீரர்கள் யார்?

என்ன இருந்தாலும் மாற்றங்கள் அவசியம் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால் டோனிதான் தற்போதைய இந்திய அணியின் வீழ்ச்சிக்குக் காரணம் என்பதும் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல.



# இவர் வித்தியாசமான ரகம்

**இ**ருபதுக்கு இருபது போட்டிகளில் லசித் மலிங்க அவுஸ்திரேலியாவில் ஒரு சாதனை படைத்துள்ளார். தற்போது நடைபெற்று வரும் BIG BASH போட்டிகளில் மெல்மெர்ண் ஸ்டார்ஸ் அணிக்காக விளையாடிவரும் இவர் பேர்த் ஸ்கோர்ச்சர்ஸ் அணிக்கு எதிராக ஏழு ரண்கள் மட்டும் கொடுத்து ஆறு விக்கெட்டுக்களைச் சரித்துள்ளார். இதுவரையில் அவுஸ்திரேலிய மட்டத்தில் மைக்கல் டிக்டன் இருபத் தைந்து ஓட்டங்கள் கொடுத்து ஆறு விக்கெட்டுக்கள் சரித்ததே சாதனையாக இருந்தது. அந்தச் சாதனை இப்பொழுது முறியடிக்கப்பட்டுள்ளது.


எனினும் உலக இருபதுக்கு இருபது போட்டிகளில் மலிங்கவின் சாதனை இரண்டாவது இடத்தையே பிடிக்கக் கூடியதாக இருந்திருக்கிறது. முதன்மைச் சாதனை என்ற வகையில் 2011 இல் சமர்செட் அணியின் அருள் சுப்பையா கிளமோர்கன் அணிக்கு எதிராக எடுத்த ஐந்து ரண்களுக்கு ஆறு விக்கெட்டுக்கள் என்பதே பதிவு செய்யப்பட்டுள்ளது. இலங்கைக் கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியத் தொடரில் அங்கு விளையாடிக் கொண்டிருக்கும் வேளையிலேயே மலிங்கவும் அவுஸ்திரேலியாவில் நிற்கிறார். ஆனால் இலங்கை டெஸ்ட் அணியில் அவர் இல்லை. 2010 ஆம் ஆண்டின் பின் அவர் டெஸ்ட் அணியில் இருந்து ஒதுங்கிக் கொண்டார். தனது உபாதைகள் காரணமாக நீண்ட நாள் விளையாட்டான டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஒதுங்கிக் கொள்வதாகவும், அப்படி ஒரு முடிவு எடுத்ததால்தான் ஒரு நாள் மற்றும் இருபதுக்கு இருபது போட்டிகளில் நீடிக்க முடியும் என்றும் தெரிவித்திருந்தார். அவர் எடுத்த அந்த முடிவு சரியானதொரு முடிவாகவே தெரிகிறது.



# ஓய்வில்லாத வேட்டை

**பா**ர்சலோனா வீரர் லயனல் மெஸ்லி உதைபந்தாட்ட உலகில் ஒரு சாதனையைப் பதிவு செய்திருக்கிறார். அதற்கான சந்தர்ப்பம் இவ்வருடம் கனிந்திருக்கிறது.

அதாவது 1972 இல் ஜேர்மனி உதைபந்தாட்ட வீரர் ஜெராட் முவர் ஒரு வருடத்தில் எண்பத்தைந்து கோல்கள் அடித்துச் சாதனை புரிந்திருந்தார். இந்தச் சாதனையை இவ்வருடம் மெஸ்லி முறியடிக்கக் கூடும் என்ற எதிர்பார்க்கை அநேகமாக எல்லோரிடமும் இருந்தது. அதைப் பொய்யாக்காமல் றியல் பெஸ்ட் அணிக்கு எதிராக இரண்டு கோல் போட்டபோது எண்பத்தாறு கோல்கள் போட்டு சாதனையைத் தனதாக்கிக் கொண்டார். இப்பொழுது அதற்கப்பாலும் சென்று கொக்டோபா அணிக்கு எதிராக இன்னும் இரண்டு கோல்போட்டு பட்டியலை எண்பத்தெட்டு ஆக்கி இருக்கிறார். இருபத்து நான்கே வயதான இந்த ஆர்ஜென்ரீனிய வீரர் 2004 இல் இருந்தே பார்சலோனா கழகத்துடன் தொடர்புபட்டவராக இருக்கின்றார். சர்வதேச ரீதி யாக எழுபத்தாறு ஆட்டங்களில் கலந்துகொண்டு முப்பத்தொரு கோல்கள் போட்டவர். தனது நாட்டுக்காக 2008 இல் ஒலிம்பிக் தங்கம் வென்ற அணியின் அங்கத்தவர். இவர் பெற்ற விருதுகள் பல. 2009 -2010-2011 வருடங்களில் பலூன் டீ ஓர் விருதைப் பெற்றவர். (இம்முறையும் இவரது பெயர் தெரிவுப் பட்டியலில் இருக்கிறது). மேலும் மூன்று சாம்பியன் லீக் கிண்ணங்கள், ஐந்து ஸ்பானிஷ் லீக் கிண்ணங்கள், இரண்டு ஸ்பானிஸ் கப், இரண்டு யூரோப்பியன் சுப்பர் கப், இரண்டு கிளப் வேர்ல்ட் கப் என்று வெற்றிக் கிண்ணங்களின் எண்ணிக்கை போகிறது. இவரது விளையாட்டுத்திறன் அடிப்படையில் மேலும் மேலும் சாதனைகளை இவர் நிகழ்த்திக் கொண்டே போவார் என்றே உதைபந்தாட்ட விமர்சகர்கள் கருத்துக் கூறுகிறார்கள்.



# ஏன் இந்த அவசரம்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் தொடருக்குப் பின்தான் தலைமைப் பதவியில் இருந்து ஓய்வுபெற எண்ணியிருப்பதாக இலங்கை அணித்தலைவர் மஹேல ஜயவர்த்தன அவுஸ்திரேலியாவில் இருந்து அறிவித்துள்ளார். இதற்கு அவர் கூறும் காரணம்; தற்போது அணித்தலைமையை ஏற்க சகல தகுதிகளையும் கொண்ட ஏஞ்சலோ. மத்தியூசுக்கு வழிவிடுதல் என்பதேயாகும்.

அதோடு எதிர்பார்த்திருக்கும் இளைஞர்களுக்கும் சந்தர்ப்பத்தைக் கொடுக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார். அதாவது சரியான (வேளைகளைச் சரி-வரப் புரிந்து கொண்டு வழிவிட்டால் இளம்தலைமுறை உள்நுழைய சந்தர்ப்பம் இருக்கம் என்கிறார் அவர். மேலும் மூத்த உறுப்பினர்கள் புதிதாக அமையும் அணிக்கு நல்ல வழிகாட்டிகளாகவும் ஆலோசனை வழங்குபவர்களாகவும் இருக்க முடியும் என்பது அவரது கருத்து

2013 இலங்கை அணி இளைஞர்களின் அணியாக இருக்க வேண்டும் என்பதே தனது அவா என்றும் கூறியுள்ளார். மஹேல 2007 இல் உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு இலங்கை அணிக்குத்தலைமை தாங்கி இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அதன் பின் பல மாற்றங்கள் ஏற்பட்டு இந்த வருடம் தில்ஷான் அணித் தலைமையில் இருந்து விலக்கப்பட்டவேளையில் மீண்டும் மஹேலவிடம் அணித்தலைமை வழங்கப்பட்டிருந்தது. அதனையடுத்து அணியின் செயற்பாடுகளில் ஒரு உத்வேகம் ஏற்பட்டதென்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

அண்மையில் மஹேலவின் சிறந்த முத்திரையாக இருபதுக்கு இருபது உலகக்கிண்ணப் போட்டிகளைக் குறிப்பிடலாம். இன்றும்கூட மேற்கிந்தியத் தீவுகள் அணியிடம் மஹேல தோற்றது எப்படி என்பது புரியத்தான் இல்லை. இந்தத் தோல்வியோடு இருபதுக்கு இருபது அணித்தலைமையில் இருந்து விலகிக் கொண்ட மஹேல, தற்போது டெஸ்ட் அணித் தலைமையில் இருந்து விலகவும் தீர்மானித்துள்ளார். இவர் விலகுவதற்குக் கூறும் காரணங்கள் மிகவும் கண்ணியமானவை. ஆனால் ரசிகர்கள் கேட்கும் கேள்வி மஹேலவிற்கு ஏன் இந்த அவசரம் என்பதுதான். ஆனால் இவரது கூற்றில் உள்ள ஓர் ஆணித்தரமான கருத்து, அதுதான் இளையோருக்கு வழிவிடுதல். மஹேல இதனைச் சுற்றுச் சத்தம் போட்டுச்சொல்லுங்களேன்.!

# அயராது உழைக்கும் ஜப்பானியர்கள்

**மூர்த்தி** சின்னதாக இருந்தாலும் கீர்த்தி பெருசு என்று முன்னோர்கள் சொன்ன பழமொழியை ஜப்பானியர்கள் தப்பாமல் நிரூபித்திருக்கிறார்கள். உலக வரைபடத்தில் ஜப்பான் நாடு சின்னதாக யிருந்தாலும், அவர்களுடைய அறிவியல் திறனைப் பார்த்து இந்த உலகமே வியந்து நிற்கிறது. குள்ளமும், குட்டையுமான தோற்றத்தையுடைய ஜப்பானியர்கள் எந்நேரமும் வேலை, வேலையென்று லயித்துவிடுகிறார்கள்.

விறுவிறுப்பான காலைப் பொழுதோடு ஈடுகொடுத்த படியே ஒவ்வொரு தினமும் ஜப்பானியர்களின் வாழ்க கைப் பயணம் பூமியைக் குடைந்து பாய்கிற மெட்ரோ விலிருந்து தொடங்குகிறது. எத்தகைய வேகத்தோடும், தெம்போடும் செயற்படுகிற இந்த ஜப்பானியர்கள், அந்நியர்களை பிரமிப்பில் ஆழ்த்தியிருப்பது மிகப்பெரிய விஷயமாகும்.

மெட்ரோவிலும் ஜப்பானியர்கள் வீண்வம்பு, அரட்டையென்று எதிலும் ஈடுபடாமல் தியானித்துக் கொண்டு, பேப்பர், புத்தகங்கள் படித்துக்கொண்டு, மடிக்கணினியில் அலுவலக பணிகளைப் பார்த்துக் கொண்டு பயணிக்கிறார்கள். சிலகணங்களைக் கூட வீணடிக்க விருப்பமில்லாத ஜப்பானியர்கள் நாட்டினுடைய முன்னேற்றம், வளர்ச்சி ஆகியவைகளைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருப்பதால் அவர்களுடைய தேசப் பற்றுத் தன்மையை பெருமையோடு பாராட்டி, இந்த உலகம் அவர்களுக்கு தலை வணங்குகிறது.

நாடு முன்னேற்றம் அடைய வேண்டுமென்ற எண்ணம் மட்டும்தான் ஒவ்வொரு ஜப்பானியரின் இரத்தத்தில் ஊறியுள்ளது. அவர்கள் எந்தத் தொழிலையும் நுண்ணியமாகவும் நேர்த்தியாகவும் செய்து முடிக்கிறார்கள். எந்தத் தொழிலையும் செய்வதற்கு அவர்கள் சலித்துக் கொள்வதில்லை, தொழில் எதுவாகயிருந்தாலும் கடமையுணர்வோடும், நேர்மையோடும் செய்துமுடிக்கும் திறனைப் பெற்றவர்கள். ஒரு நிறுவனத்தில் பணியிலிருக்கும் ஜப்பானிய நிர்வாகியின் அன்றாட வாழ்க்கையைப் பற்றி எடுத்துரைக்க விரும்புகிறேன். காலை ஏழு மணிக்கு மெட்ரோவில் பயணத்தை தொடங்கிய ஜப்பானிய நிர்வாகி அலுவலகத்துக்குள் நுழைகையில், அமரும் ஆசனத்தில் வைக்கப்பட்டிருக்கும் ஆவணங்களை ஆராய்கிறார்.

அவற்றில் மிகவும் முக்கியமானவை, முக்கியமானவை, தாமதித்துப் பார்த்துக் கொள்ளலாமென்று வகைப்படுத்திக் கொள்கிறார். சகஊழியர்களோடு கலந்து ஆலோசித்து தேவையான தகவல்களை சேகரித்துக் கொண்டு, உதித்த எண்ணத்தை நடைமுறையில் கொண்டு வருவதற்கு மீண்டும் சகஊழியர்களோடு இணைந்து முடிவெடுக்கிறார்.

அதன்பிறகு நிர்வாகியும், சகபணியாளர்களும் ஒன்றாக இணைந்து எடுக்கப்பட்ட முடிவுக்கு செயலாக்கம் தருகிறார்கள். கடைசியாக கிடைக்கிற வெற்றி, தோல்வி ஆகிய இரண்டையும் அனைவரும் பகிர்ந்து கொள்கிறார்கள். ஒரு காரியத்தினுடைய வெற்றியில் தனக்கு மட்டும்தான் பங்கிருப்பதாக எந்த ஜப்பானிய நிர்வாகியும் ஒருபோதும் எண்ணியதில்லை, அதுவே தோல்வியாகயிருந்தால் அவை அனைத்தும் சகஊழியர்களைச் சார்ந்தது என்று ஒருபோதும் நினைத்ததில்லை. வெற்றி, தோல்வி இரண்டையும் ஒரே கண்ணோட்டத்தோடு பார்க்கும் ஜப்பானியர்களின் இத்தகைய உயர்ந்த பண்பை இந்தப் புவியில் எவரிடமும் பார்க்க முடியாது.

ஒவ்வொரு நிறுவனமும் தலைமை நிர்வாகியைக் (C.E.O or C.M.D.) கொண்டிருப்பது அவசியமாகும். ஜப்பான் நாட்டில் தலைமை நிர்வாகியும் மற்ற நிர்வாகிகளோடு சேர்ந்து செயற்படுகிறார். தனக்குக் கொடுக்கப்பட்ட ஏஸி அறையில் அமர்ந்து நேரத்தை வீணடிக்க பிடிக்காமல், அறையைவிட்டு வெளியேறி மற்ற நிர்வாகிகளுக்கு கைகொடுத்து உதவுகிறார். இத்தகைய பெருந்தன்மை இந்திய தலைமை நிர்வாகியிடம் பார்க்கமுடியுமா? இந்த கேள்விக்குறி என்றென்றும் கேள்விக்குறியாகவேதான் இருந்து வருகிறது.

ஒரு நிறுவனத்தில் தலைமை நிர்வாகி 14–15 மணி நேரங்கள் வேலை பார்க்கிறார். எப்போது பொழுது சாய்ந்ததென்பதைக் கூட அறியாமல் எந்நேரமும் பணியில் லயித்துவிடுகிறார். தன்னையே மறந்து பித்து பிடித்தவனைப் போல பணியில் மூழ்கியிருக்கும் தலைமை நிர்வாகியினுடைய குணத்தால் சகஊழியர்களும் பணி ஒன்றைத் தவிர்த்து வேறெதையும் நினைப்பதில்லை. தலைமை நிர்வாகி வீட்டுக்கு புறப்பட்டு போனபிறகு தான் மற்ற நிர்வாகிகளும், சகபணியாளர்களும் வீட்டுக்கு புறப்படுகிறார்கள். மீண்டும் இரவு ஒரு மணிக்கு அவர்களுடைய வாழ்க்கைப் பணயம் மெட்ரோவில் முடிவடைகிறது.

இந்த பன்னாட்டு பண்பாடு ஜப்பானியர்களின் சமூகவியல்பையும் நாளடைவில் மாற்றிக் கொண்டு வருகிறது. பன்னாட்டு பண்பாடு அவர்களுடைய வாழ்க்கையில் ஒரு முக்கிய ஸ்தானத்தைப் பிடித்திருக்கிறது. குடும்பம் குடும்பமென்று உயிர்விட்ட காலங்கள் முற்றிலும் அழிந்துவிட்டது, தற்சமயம் பணி–பணியென்று உயிர்விடுகிற காலத்தைப் பார்க்கிறோம். பதவியேற்றம், சம்பள-உயர்வு ஆகியவைகளுக்கு ஆணும்-பெண்ணும் போட்டிபோட்டுக் கொண்டு, தங்களுடைய திறமையை காட்டுகிறார்கள்.

ஜப்பானியர்கள் குடும்பத்தைவிட தங்களுடைய நிறுவனம், அதனைச் சார்ந்த பணி ஆகியவைகளைத்தான் பெரிதாகக் கருதுகிறார்கள். பணியில் ஊறிக்கிடக்கும் ஜப்பானி யர்களுக்கு திருமணமென்கிற சுப நிகழ்வைப் பற்றி யோசிப்பதற்குகூட நேரம் கிடைப்பதில்லை.

மேலும் ஜப்பானுடைய விலைவாசியால் இளைய தலைமுறைகள் திருமணத்தைப் பற்றி ஒரு முறைக்கு நூறு முறை சிந்தித்து முடிவெடுக்கிறார்கள். திருமணத்துக்கு பிறகு பற்றாமை, போதாமை போன்றவைகளை அனுபவிக்க விருப்பமில்லாததால், இளையதலைமுறைகள் திருமணத்திலிருந்து விடுபட்டு சுதந்திரமாக வாழ ஆசைப்படுகிறார்கள்.

இரவு வேளைகளில் எங்கு பார்த்தாலும் மினுமினுக்கும் விளக்குகள், பூமியைக் குடைந்து பாயும் டியூப்புக்கள் உயரப் பறக்கும் ரயில்கள், ஒரு மேம்பாலத்துக்கு மேல் இன்னொரு மேம்பாலம் என்று ஆகிய அனைத்தும் ஜப்பானியர்களின் அறிவியல் திறமையால் உருவானதா? அல்லது அவர்களுடைய கைவண்ணத் கலையால் கட்டப்பட்டதா? என்று உலக மக்கள் அவர்களுடைய ஆவர்த்தையும், அயராது உழைக்கும் தன்மையைக் கண்டு ஆச்சரியத்தில் மூழ்கியிருக்கிறார்கள். தனக்காக உழைக்காமல் தேசத்துக்காக உழைக்கும் ஜப்பானியர்களின் தேசப் பற்று என்றென்றும் பெருமையோடு போற்றப்படுகிறது.



---

# வாழ்க்கையின் மந்திரம்!



**சமஸ்கிருதம்** இவ்வாறு கூறுகிறது "நீ அழுது கொண்டே பிறந்த போது, உன்னைச் சுற்றி இருப்பவர்கள் சந்தோசமாகச் சிரித்திருப்பார்கள். ஆனால், இறக்கும்போது நீ சந்தோஷமாகக் கண் மூடவேண்டும். அப்போது உன்னைச் சுற்றி இருப்பவர்கள் உன் பிரிவால் கண்ணீர் சிந்த வேண்டும். இதுதான் வாழ்க்கையின் இலக்கணம்!"

மரணப்படுக்கையில் இருந்த ஜோர்ஜ் பெர்னாட்ஷாவிடம், நீங்கள் மீண்டும் உங்கள் வாழ்நாளைக் கழிக்க முடியும்என்றால், அதனை எப்படிக் கழிப்பீர்கள்? என்று கேட்டார்கள். நீண்ட பெருமூச்சுடன் பெர்னாட்ஷா இப்படிப் பதிலளித்தார், இப்படி எல்லாம் வாழ வேண்டும் என்று ஆசைப்பட்டு, எப்படி எல்லாம் வாழாமல் இருந்தேனோ, அப்படி எல்லாம் வாழ்வேன்!

சமஸ்கிருத வாக்கியத்துக்கும் பெர்னாட்ஷாவின் கூற்றுக்கும் இடையே ஏதோ ஓர் ஒற்றுமை இழை ஒழிந்திருக்கிறது. அது என்னவென்று கண்டுகொண்டால், அதுதான் வாழ்க்கைக்கான மந்திரம். இந்தப் பயிற்சி கஷ்டமாக இருந்தால், உங்கள் இறப்புக்கு யாரெல்லாம் அழுவார்கள் என்று யோசித்துப் பாருங்கள். ஒற்றைப் படையில் எண்ணிக்கை இருந்தால், நீங்கள் இதுவரை வாழ்ந்த வாழ்க்கையில் எதையோ தவற விட்டு விட்டீர்கள் என்று அர்த்தம். வாருங்கள் அந்த எண்ணிக்கையை அதிகரிப்போம் என்று அழைக்கிறார் ரொபின் ஷர்மா. 'The monk who sold his ferrari' என்ற ஒற்றைப் புத்தகத்தின் மூலம் தன்னம்பிக்கை குரு அந்தஸ்து எட்டியவர் இவர்.

உங்களை இனிமையானவர் ஆக்கிக்கொள்ள வழி சொல்கிறார் ராபின் ஷர்மா. நமக்குப் பிடிக்காத செயலாக இருந்தாலும், அதற்கென நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவில் அதை சிறப்பாகச் செய்து முடிக்கும் வல்லமையைக் கற்றுக்கொடுப்பதுதான் எந்த ஒரு கல்வியின் சிறப்பம்சமாக இருக்க வேண்டும்.

படிக்காத மேதை என்று போற்றப்படுவர்களிடம் இந்தத் தகுதி தவறாமல் குடிகொண்டு இருக்கும். ஒரே வரியில் சொன்னால், சுயஒழுக்கம் என்ற ஒற்றைத் தகுதி உங்களிடம் இருக்கிறதா? நினைத்ததை நினைத்த நேரத்தில் முடிப்பது, மற்றவர்களிடம் இனிமையாகப் பழகுவது, துல்லியமான, தெளிவான இலக்குகளை நிர்ணயித்துச் செயற்படுவது, உங்கள் ஆரோக்கியத்தைப் பேணுவது போன்றவை சுய ஒழுக்கம் இல்லாமல் சாத்தியமாகாது.

வேதனை தரும் என்றாலும் சில செயல்களைச் செய்யத் தயங்காததால்தான், சாதனையாளர்கள் என்ற பட்டம் சுமக்கிறார்கள் சிலர். தயங்குபவர்கள் பின்தங்கித் தேங்கிவிடுகிறார்கள். இன்னும் இவ்வாறு பலவற்றைக் கூறியுள்ளார்.

---

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே!
உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 501

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | 6 |
| 7 | 8 | | 10 | | 12 |
| 13 | | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | | 23 | |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | | 33 | | 35 | |

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 31.12.2012 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - 501
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

## குறுக்கெழுத்துப் போட்டி 499- விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 சி | 2 க | 3 ரி | | 5 சா | 6 கா |
| 7 வ | 8 ச | 9 மா | 10 லை | 11 ந் | 12 த |
| 13 கு | | | | 17 ன் | 18 வ |
| 19 மா | 20 ம | 21 ணி | | 23 த | 24 ம் |
| 25 ர் | 26 லா | 27 ந | 28 ல் | | |
| | 32 லா | | 34 கா | 35 த | 36 ல் |

**இடமிருந்து வலம்**

01. தேவகன்னி.
07. ஈச்சமரம்.
15. நிகரற்ற அழகும் செல்வமும் ஒருங்கே இணைந்த லிசா கொர்டினி என்பவருடைய உருவம்தான் இது.
19. குயவன் சக்கரம்.
25. தொண்டையில் ஏற்படும் ஒரு ஒவ்வாமை. (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

01. பூ மத்தியின் சாய்வு.
02. தாங்கு.
04. சுயேச்சையாக. (குழம்பியுள்ளது)
06. துணிகரமுள்ளவன் தலைகீழாய் நிற்கிறான்.
15. மயக்கம்.
17. மனிதர்கள் அனைவரும் பிறப்பால் சமம். அதன்படி "ஒரு மனிதன் இன்னொருவனை அடிமையாக்குவது தார்மீக உரிமைக்குப் புறம்பானது" என்று அடித்துக்கூறியவர் இவர்.
20. நிலத்தில் இருந்தும் எடுக்கலாம். மரத்தில் இருந்தும் எடுக்கலாம் . ( திரும்பியுள்ளது)

**குறுக்கெழுத்துப் போட்டி இல.499 இற்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

எஸ்.நிலக்ஷன், 24, நவஹங்கொட, நுவரெலியா.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. கே.இராஜகோபால், முருகன் கோவிலடி, வட்டுக்கோட்டை.
02. எஸ்.சதாசிவம், கெந்தகொல்ல வீதி, மாத்தளை.
03. ச.வனஜா, அட்டன் றோட், கினிகத்தேன.
04. எம்.வந்தனா, பெர்னான்டோ மாவத்தை, கொழும்பு-06.
05. த.சாருஜன், கோவில் வீதி, திருகோணமலை.
06. எம்.எம்.மாஹிறா, மஹ்ரூப் நகர், கிண்ணியா -03
07. கே.பார்த்திபன், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
08. ஜே.குரூஸ், கண்டி வீதி, கொடிகாமம்.
09. மா.சர்மிளா, துன்னாலை வடக்கு, துன்னாலை.
10. சா. செல்வராணி, ஆனைக்கோட்டை



**இராமசாமி ரமேஷ், அளம்பில்**

ஆம்! வலிகளையும், சுமைகளையும் தோல்விகளையும், அவமானங்களையும் சுமந்து - கடந்து வெற்றிக்காகப் போராடும் எழுத்தாளன் ஒருவனின் எழுத்துலகப் பயணம் இங்கே தொடர்கிறது.

# வலிகளின் சன்மானம்

ஒரு தடவை, நட்சத்திரனின் இலக்கிய நண்பர்கள் நான்கு பேர் யாழ்ப்பாணத்திலிருந்து வருவதாக சொல்லியிருந்தார்கள். அவர்கள் வரும்போது நன்றாக கவனிக்கவேண்டும் என்பதற்காக, கையிலும் காசு இல்லாததினால், நட்சத்திரனுக்குத் தெரியாமலே தன் காதுத் தோட்டினை அடைவு பிடிக்கும் ராணியிடம் ரெண்டாயித்து ஐந்நூறுக்கு அடைவுவைத்து தேவையான சாமான்களும் வாங்கி வருகின்றவர்களோடு தன் பிள்ளையும் சரிசமனாய் நிற்கவேண்டும் என்பதற்காய், நட்சத்திரனுக்கு ஒருசேட்டும் வாங்கினாள். இத்தனையும் நடந்து முடிந்ததின் பிற்பாடே சம்பவம் நட்சத்திரனுக்கு எட்டியது. கோபமாய் கத்தித் தீர்த்தான்.

"உங்கள ஆர்... காதுத்தோட்டை அடைவு வைக்கச் சொன்னது..." ஒருநாள் இரவாகும் வரை தாயோடு பேசிக்கொள்ளவில்லை. இருந்தாலும் தம் நிலையை அவனுக்கு எடுத்துச் சொன்னாள் மகேஷ்வரி.


"நாம... எப்பிடியும் கஷ்டப்படலாம் தம்பி ஆனால்... வாறவங்களுக்கு முன்னால நீ அவமானப்படக்கூடாது ராசா... எனக்கு உன்ர கௌரவம்தான் முக்கியமப்பா..." சொல்லிவிட்டு விசும்பியவளை, கசியும் ஈரவிழியோடு பார்த்தான் நட்சத்திரன்.

அந்தத் தோடு அடைவு வைத்ததை மறந்தே போய்விட்டாள். கடையின் இமிட்டேஷன் தோடு தான் இப்போது மகேஷ்வரியின் காதுகளை கௌவியிருந்தது. ஒரு மாதம் கழித்து மகன் சொன்னது கேட்டுத்தான் ஞாபகம் எட்டியது.

கடலுக்குச் செல்லத் தயாரானவனோடு தானும்போய், படகை கடலுக்குள் தள்ளி அது கண்ணிலிருந்து மறையும்வரை கரையிலேயே காத்திருந்து பின்புதான் வீட்டுக்கு வந்து சேர்ந்தாள்.

வீட்டுக்குள் இருள் கௌவத் தொடங்கி இருந்தது. விளக்கைக் கொழுத்திவிட்டு, தன் சட்டையையும் எடுத்துக்கொண்டு குளிக்கப் புறப்பட்டாள். கடலுக்குப் போனவன், மறுநாள் காலை நேரத்துக்கே கரை திரும்பிவிடுவான். அதுவரைக்கும் பதைபதைப்போடு தான் இந்த ஏழைத் தாயின் இரவுகள் கழியும்.

நிலாவின் வாழ்க்கைச் சக்கரச் சுழற்சியில், திருமணப் பேச்சை ஆரம்பித்திருந்தார்கள். ரகுவை எப்படியும் மருமகனாக்கியே தீருவதென்ற பிடிவாதம் துரைசிங்கத்தாரிடமிருந்து அகலவில்லை. தேவகிக்கு ரகுவைவிட, அவளின் ஒன்றுவிட்ட அண்ணர் ஒருவர் திருகோணமலைப் பக்கம் வாழ்ந்து கொண்டிருந்தார். அவர் அடிக்கடி உறவாடி முல்லைமண் வந்துபோவது வழமை. அந்நேரங்களில் "என்ர மகனுக்கும் வன்னிப் பிள்ளையைத் தான்... சம்பந்தம் செய்யிறது..." என்பார். அவர் உண்மையில் ஒரு தங்கமான மனுசர்! பிள்ளையையும் ஒழுங்காத்தான் வளர்த்திருப்பார். இதனால், அவருடைய மகனை நிலாவுக்கு சம்பந்தம் பேசும் ஆசை தேவகிக்குள் துளிர்விட்டிருந்தது. துரைசிங்கத்தார் ரகுவையும், தேவகி தன் உறவுக்காரப் பையனையும், நிலாவுக்கு நியமித்துக் கொண்டிருந்தார்.



சாடைமாடையாய் பேச்சை நிலாவுக்கும் புரியவைக்க ஆரம்பித்தார்கள். தேவகி தன் எண்ணத்தை மகளிடமும் கணவரிடமும் ஒப்புவிக்கவில்லை. முதலில் ரகுவுடைய சம்பந்தத்தை அறுத்துவிட்டு, அப்புறமாய் தன் எண்ணத்தை மெதுவாய் போட்டு உடைப்போம் என்று அமைதி காத்தாள். துரைசிங்கத்தார் பேச்சை ஆரம்பித்தார்.

"நிலா!! உனக்கும் வயசு வந்துட்டுதானேம்மா!! உன்ர அத்தான் ரகுவும்..." என்றவாறு நிறுத்தியவர் இவளின் முகத்தைப் பார்த்தார். இதுவரை புன்னகையை தேக்கியிருந்த வதனம் சட்டென வாடிப் போனதை பெற்றவர்கள் இருவரும் அவதானிக்கத் தவறவில்லை.

நிலாவுக்குப் புரிந்தது. இத்தனை நாட்களும் அனுபவித்த சந்தோஷத்துக்கு இன்றோடு புதைகுழி தோண்டப்போகிறார்கள் என்று! எப்படி மனசுக்குழி ஒருவனோடு குடித்தனம் நடத்திக்கொண்டு, மீண்டும் இன்னொருவனுக்கு மாலையிடுவது? பிடிவாதமாய் மறுக்கவும் முடியாது! அதற்காக ரகுவுக்கு தன்னை நிச்சயிப்பதை ஏற்றுக்கொள்ளவும் முடியாது. நட்சத்திரனை நாயகனாக்கியவளால் இன்னொரு ஆடவனை எப்படி ஏற்கமுடியும்....??

(வலிகள் தொடரும்...)

## சிரிப்பதற்கு




# யதார்த்தம்!

இவ்வளவு பணத்தையும் கொண்டுபோவது பற்றி என்னைப் போலவே அவருக்கும் பிரச்சினை இருந்தது. ஒரு ஆட்டோவைப் பிடித்துப்போகும் படிக்கு எனக்கு ஆலோசனை வழங்கினார். ஆட்டோவைப் பிடிப்பது என்றாலும் அதற்காகும் பணத்திற்கும் இந்தப் பணத்திலிருந்துதான் எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற சங்கடம் எனக்கு மட்டுமே தெரிந்திருந்தது.

அதை நண்பருக்குச் சொல்லும் அசந்தர்ப்பத்தைத் தவிர்த்துக் கொள்ளவே விரும்பினேன். அதனாலேயே பஸ்ஸில் போவதை அசௌகரியக் குறையாயில்லை என்பதை அழுத்திச் சொன்னேன். பணம் ஏற்கனவே கட்டப்பட்டு பத்திரிகைக்கட்டொன்றை எடுத்துச் செல்வதுபோல ஒழுங்குபடுத்தியிருந்தேன். பார்க்கும் யாருக்கும் சந்தேகம் வராதிருக்கவே இந்த ஏற்பாடு. ஆனாலும் இவ்வளவு பெருந்தொகைப் பணத்தையும் இவ்வாறு அஜாக்கிரதையாக எடுத்துச் செல்வதாகவே நண்பர் நம்பினார். மகளின் திருமணம் இனி நல்லபடி யாக நடந்துவிடும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டிருந்தது. இது பேசிச் செய்யும் திருமணமில்லை. எனது மகளும் மாப்பிள்ளையும் ஒரே இடத்தில் வேலை செய்பவர்கள். ஒருவரில் ஒருவர் மனம் விரும்பிட்டிருந்தார்கள். அவர்களாகவே பெண் கேட்டு வந்தபோது எங்கள் எல்லோருக்கும் மகிழ்ச்சியாகவே இருந்தது.



அவர்களை பற்றிய உயரிய பிம்பமும் தோன்றியிருந்தது. மகளுக்கும் ஒரு நல்ல வாழ்க்கை அமைந்ததென்றும் ஆனந்தப் பட்டுக்கொண்டோம். ஆனாலும் அந்த மகிழ்ச்சிக்கும் ஒரு விலை உண்டென அவர்களுடன் பேசியபோது உணரமுடிந்தது. என்னதான் மனம் விரும்பியிருந்தாலும், பெரியவர்களுக்கும் சம்மத மென்றிருந்தாலும் சிலசில சம்பிரதாயங் களைவிட்டுக் கொடுக்க முடியாதென்று தெரிவித்து விட்டார்கள்.

மூத்தமகளின் திருமணம். வீட்டில் எல்லோருக்கும் பிடித்திருந்தது. ஆனாலும் அவர்களின் எதிர்பார்ப்பு எங்கள் வசதிக்கும் மேலால் இருந்ததுதான் கவலைப் படுத்தியது. இதற்கு மேல் அவர்களால் இறங்கி வரமுடியாதென்பது அவர்களிடம் பேசிப்பார்த்ததில் புரிந்தது. நல்ல சம்பந்தம். ஆனாலும் பெண்ணைப் பெத்தவர்களின் அவஸ்தைகளைப் புரிந்துகொள்ள முடியாதவர்களை என்ன செய்வது. பெண்ணின் கவலையையும் பெற்றவளின் வருத்தத்தையும் கண்கொண்டு பார்க்கச் சகிக்க வில்லை. மூத்தவள் வழிவிடக் காத்திருக்கும் இளையவள்.

வாழ்க்கை அதன் கடின முகத்தைக் காட்டத் துணிந்துவிட்டது என்பதை உணர்ந்து கொண்டேன். எதற்கும் ஒரு தீர்வு இருக்கும் என்பதை நம்பினாலும் அதை எப்படிக் கண்டுபிடிப்பது என்பதுதான் புரியாமலிருந்தது. அந்த நேரத்தில் உதவ வந்த நண்பனிடம்தான் பணத்தை வாங்கிக் கொண்டு புறப்பட்டுக் கொண்டிருந்தேன். நண்பனும் பஸ் தரிப்பிடம் வரைகூடவே வந்திருந்தான். அவன்கூட இருந்தது எனக்கும் தெம்பாக இருந்தது.

என்னதான் நான் பெரிதாக வீரம் பேசியிருந்தாலும் பணத்தை கையில் எடுத்ததில் இருந்து பயம் பிடித்துக் கொண்டது. இதை ஒழுங்காகக் கொண்டு சேர்த்து விட வேண்டுமேயென்ற கவலை தொற்றிக் கொண்டது. வந்த பஸ்களும் ஜனக்கூட்டத்துடன் பிதுங்கி வழிந்தபடியே வந்தன. அடுத்து வந்த பஸ் ஒன்று நின்றது. பாய்ந்துபோய் ஏறினேன். படியை விட்டு மேலேற முடியவில்லை. இறங்கி விடு இறங்கி விடு என்று நண்பன் அலறுவது கேட்டது.

இல்லை பரவாயில்லை. சமாளித்துவிடுவேன் என்று அவனுக்குக் கூறிக்கொண்டே உள் நுழைய முயற்சித்தேன். அவனிடம் இருந்து தப்பிக் கொள்வதற்கும் என் தன் மானத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்கும் இதைவிட்டால் வேறு வழி எனக்குத் தெரியவில்லை.

உள்ளேநுழைய முடிந்தால்தானே. உள்ளிருந்து வெளித்தள்ளிய நெருக்குவரத்தைச் சமாளிப்பதே பெரும்பாடாக இருந்தது. பணக் கட்டை நெஞ்சுடன் சேர்த்து அணைத்துக் கொண்டேன். எனக்கும் கீழே நின்றவன் குரல் கொடுத்தான். "சேர் பயப்படாதே நான் உன்னை விழாமப் பிடிச்சிக்கிறேன்" பான் பராக் போட்டிருந்தான் போலும். எச்சில் பறக்கப் பேசினான். அப்பொழுதுதான் அவனை நன்கு கவனித்தேன். தலை கலைந்து பறக்க நாலு நாள் சவரம் செய்யாத தாடி மீசையுடன் ரவுடியைப் போல தோன்றினான். என்னையே குறிவைத்து வந்திருப்பானோ? மயிர்க்கால்களெல்லாம் சில்லிட்டுப் போய்விட்டன. அவனைப் பார்க்கும் போதெல்லாம் ஜாலியாகச் சிரித்தான்.

சிரிப்புக்குள் ஏதோ புதைந்திருப்பது போல என்னை இன்னும் இன்னும் பயங்கூட்டியது. அவனின் பார்வையைத் தவிர்க்கும் நோக்கில் உடலைத் திருப்ப முயற்சித்தேன். எனக்கும் மேலே பெருத்த உடலுடன் ஒருவன் முழுப்பாதையையும் அடைத்தவண்ணம் நின்றிருந்தான்.

அவன் மட்டும் உள்ளே சென்று விட்டால் பெரிய இடம் கிடைக்கக் கூடும். அந்த இடைவெளியில் நானும் உள்ளுக்குள் சென்றுவிடக் கூடும். அவனை உள்ளிற்குத் தள்ளும் முயற்சியில் முதுகால் நெம்பித்தள்ளினேன். அந்த பெருத்த உடல் அசைந்தால்தானே. எனக்கு மூச்சுத்தான் வாங்கியது. அந்த வேளையில் தான் அந்த எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்தது. பெருத்த உடல்காரன் தன் இடக்கையினை விசுக்கென பின்னால் விசுறினான். சரியாய் குறி வைத்ததுபோல என் பணக்கட்டில் வந்து மோதியது. என் கையின் இறுக்கத்தை மீறி பணக் கட்டு எகிறிப் பறந்தது. பாய்ந்து அதனைப் பற்றிப் பிடிக்க முயன்ற போது பின்னங் கையில் பட்டு வாசலை நோக்கிப் பறந்தது.

வாசலில் நின்ற தாடிக்காரன் அதனைப் பாய்ந்து பிடிக்க முயற்சிக்க அது மீண்டும் தட்டுப்பட்டு என் கைகளுக்குள்ளேயே வந்து விழுந்தது. அதே நேரத்தில் கைகளின் பிடிப்பை விட்டிருந்த தாடிக்காரனின் கால்கள் சமதளத்திலிருந்து நழுவவிட காற்றில் அலைந்து வேகமாக அடுத்த ஒழுங்கையில் வந்த காரில் மோதி இரத்தம் கக்கி சக்கரத்துள் நசிபட்டு வீதியின் ஓரத்தில் இரத்தச்சகதியாக அது போய் விழுந்தது.

பஸ்ஸினுள் எழுந்த அலறலும் அதனைத் தொடர்ந்து கிறீச்சிட்டு நின்ற வாகனங்களும் நின்ற பஸ்ஸினின்றும் குபுகுபுவென இறங்கி ஓடியவர்கள் என்னையும் வீதியோரத்தில் தள்ளிவிட, பணம் தொலைந்துபோகாத நிம்மதியுடன் நடந்து கொண்டிருந்தேன். ✱




தருவது கே.வி. குணசேகரம்

# எண்ணெய்க் குளிப்பு



**"அருக்க ணெண்ணெய் அழகழிக்கும்**
**அணியார் திங்கள் ஆகாது**
**திருக்கருஞ் செவ்வா யுயிர் போக்கும்**
**செய்ய புதனிற் பொருளுண்டாம்**
**கருத்தை யழிக்கும் கவின் வியாழம்**
**கைப் பொருள் போக்கும் கன வெள்ளி**
**பொருத்த முண்டாம் சனியெண்ணெய்**
**பேணல் முழுக வல்லவரே"**

மனிதர்களாக இருந்தாலும் சரி, விலங்குகளாக இருந்தாலும் சரி குளித்தல் வேண்டும்.

பறவைகளும் மிருகங்களும் குளிக்காமல் இருக்கமாட்டா. காகங்கள் தினமும் மாலை வேளைகளில் குளிக்கும். அவை குளிக்காமல் உறங்கமாட்டாது. யானைபோன்ற மிருகங்கள் நீருக்குள் பலமணி நேரம் படுத்திருக்கும். இதற்குப் பல காரணங்கள் உண்டு.

நீர் உடலைச் சுத்தப்படுத்தும். உடலின் உஷ்ணத்தைக் தணிக்கும். மனதை அமைதிப்படுத்தும். மகிழ்ச்சியை உண்டாக்கும். களைப்பைப் போக்கும். நோய்களை அகற்றும். ஆயுளை அதிகரிக்கும். இவ்வாறு மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

இத்தகைய முக்கியம் வாய்ந்த குளியலைப் பற்றி சங்க காலத்திலும், அதற்கு முன்பும், அதற்குப் பின்பும் எழுந்த நூல்கள் சிறப்பாகக் கூறியுள்ளன. தற்பொழுது மருத்துவ நூல்கள்தான் குளிப்பதைப் பற்றிக் கூறுகின்றன. ஆனால் சங்க காலத்தில் எழுதிய இலக்கிய நூல்கள் பலவும் குளிப்பதைப் பற்றிக் கூறியுள்ளன.

பண்டைக் காலத்து மக்கள் குளங்களிலும், ஆறுகளிலும், கிணறுகளிலும் நீராடினர். நீராடும் போது எப்படி நீராட வேண்டும் என்று ஆசாரக்கோவை என்ற பதினெண் கீழ்க்கணக்கு நூல் மிகவும் விபரமாகக் கூறுகின்றது. அந்நூல் கூறியபடிதான் அன்று வாழ்ந்த மக்கள் நீராடினர். அதனால் அவர்கள் நோய்களின்றி இன்பமாக வாழ்ந்தனர். ஆனால் இன்று நாகரிகம் என்ற போர்வையில் மக்கள் தாம் நினைத்தவாறு நினைத்த தினங்களில் நீராடுகின்றனர். அதனால்தான் பிரச்சினைகளும் சண்டைகளும் சச்சரவுகளும் உண்டாகின்றன. சோதிட நூல் ஒன்று எந்தெந்த தினங்களில் நீராட வேண்டும் என்று கூறுகின்றது. நீராடுதல் என்பது வாரத்தில் ஒரு நாள் (சனிக்கிழமை) உடலெங்கும் நல்லெண்ணெய் தேய்த்து அதை உடலின் பல மணி நேரம் ஊறவிட்டுப் பின் அரப்பு, எலுமிச்சங்காய் என்பவற்றால் தேய்த்து நீராட வேண்டும். எண்ணெய் வைத்து நீராடும் தினம் முழுவதும் ஒய்வாக இருத்தல்வேண்டும். நீராடியபின் குடும்பத்தினருடன் சேர்ந்து உணவு உண்ணுதல் வேண்டும் என்றும் பழந் தமிழ்நூல்கள் கூறுகின்றன.

எண்ணெய் குளிப்பை ஞாயிற்று கிழமைகளில் செய்தால் அழகு அழிந்துவிடும்.

திங்கட்கிழமைகளில் செய்தால் மனச்சலனமும் வேண்டாத பிரச்சினைகளும் உருவாகும்.

செவ்வாய்க்கிழமைகளில் செய்தால் சரீர அசௌகரியமும், விபத்துக்களும் உண்டாகும்.

புதன்கிழமைகளில் செய்தால் தீவிர இலாபம் உண்டாகும்.

வியாழக்கிழமைகளில் செய்தால் குடும்பப் பிரிவு உண்டாகும்.

வெள்ளிக்கிழமைகளில் ஆண்கள் செய்யக்கூடாது. பெண்கள் செய்தால் மங்களம் உண்டாகும். ஐஸ்வரியம் பெருகும்.

சனிக்கிழமைகளில் செய்தால் ஆயுள் விருத்தி, செல்வம் சேருதல், குடும்ப அந்நியோந்நியம் போன்றன உண்டாகும். வெள்ளிக்கிழமைகளில் மத்தியானத்தின் பின் தைலங்கள் பூசிச் செய்தால் தனம் சேரும்.

நல்லெண்ணெயே நன்று, கடுகு எண்ணெய் அத்தர், மல்லிகைத் தைலம் போன்றன சிறந்தது.

எண்ணெய் காய்ச்சிய பின்னே உடலில் தேய்த்தல் வேண்டும்.

அமாவாசை ஞாயிற்றுக் கிழமை, சங்கராந்தி ஆகிய நாட்களிலும், மரணம், ஜனனம், மாதவிலக்கு வந்த காலங்களில் வெந்நீரில் குளித்தல் ஆகாது. மீறிக் குளித்தால் நோய், மனக்கிலேசம், ஏற்படுவதோடு கௌரவம் என்ற நரகமும் கிடைக்கும் என்று சோதிட நூல்கள் கூறுகின்றன. இதனால் இனியாவது எமது சமயம் கூறியபடி எண்ணெய்க் குளியலை மேற்கொண்டு இன்பம் அடைவோமாக.

# கருத்துக் களம்

இராணுவத்துக்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட தமிழ்பெண்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது தொடர்பில் பல்வேறு செய்திகளும் வதந்திகளும் வந்தவண்ணம் இருக்கின்றது.

இதுதொடர்பில் தனியார் தொலைக்காட்சி ஒன்றில் நடைபெற்ற நேரடி நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டிருந்த சந்திரகுமார் எம்.பியிடம் கேட்கப் பட்டபோது - குறித்த பெண்கள் தமது வருமானத் துக்காகவே இராணுவத்தில் இணைந்ததாகவும் வன்னியில் வாழ்கின்ற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் விதத்தில் புலம்பெயர் அமைப்புக் கள் செயற்படாததன் விளைவே இவ்வாறான நிலைக்குக் காரணம் என்றும் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

அது நூற்றுக்கு நூறு வீதம் உண்மையான கருத்துக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியவை. அதே வேளை வேலைவாய்ப்புத் தேடுபவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குவதற்கு இராணுவத்தில் சேர்ப்பதுதான் ஒரே வழியா? வன்னியில் வேலை வாய்ப்புக்காக அலைகின்ற இளைஞர்கள் இல்லையா? பெண்கள் மட்டும்தானா இருக்கிறார் கள் போன்ற கேள்விகளுக்கான பதில்களைக் கண்டறிய வேண்டிய தார்மீகப் பொறுப்பில் இருந்து கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் போன்றவர்கள் விலகிவிடக்கூடாது.

தங்களது அரசியல் எதிரிகளை சாடுகிறோம், தோலுரிக்கிறோம் என்று நினைத்துக்கொண்டு ஏனைய தரப்பினரை பாதுகாத்தும் அதை நியாயப் படுத்தும் வகையில் சந்திரகுமார் எம்.பி போன்ற முன்மாதிரியான அரசியல்வாதிகள் செயற்பட மாட்டார்கள் என்று நம்புவோம்.

எஸ்.சுதர்சன்,
அறிவுநகர், கிளிநொச்சி.

கருத்துக்களம்,
தினமுரசு, வாரமலர்,
373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

# சிந்தியா பதில்

**◉ சிந்தியா! நீதித்துறையும் அரசியல் துறையும் நடத்தும் நீயா? நானா போட்டி இலங்கைக்கு நல்லதா?**

எஸ்.தவமணி, நுவரெலியா.

இவ்வாறான சூழல் எந்த நாட்டுக்கும் நல்லதல்ல. இருதரப்பும் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர விரைந்து செயற்படுவது நல்லது. மக்களின் நம்பிக்கையை இரண்டு தரப்பும் இழந்து விடக்கூடாது என்பதே எல்லோரதும் கவலையாகும்.

**◉ சிந்தியா! அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அரசுடன் இணைந்திருந்து இதுவரை தமிழ் மக்களுக்குச் செய்தது என்ன என்று அப்பாத்துரை விநாயக மூர்த்தி கேட்டிருப்பது பற்றி என்ன நினைக்கின்றீர்?**

ஜே.ரெம்சி, நெடுந்தீவு.

அப்பாத்துரை விநாயகமூர்த்திக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நோக்கி கேள்வி எழுப்புவதற்கு எந்த அருகதையும் இல்லை. கூட்டமைப்புக்கு கிடைத்ததுபோல் கூடுதல் பாராளுமன்ற அதிகாரங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கட்சிக்கு கிடைத்திருந்தால் அந்த அதிகாரத்தை அமைச்சர் கூட்டமைப்பைப்போல் துஷ்பிரயோகம் செய்திருக்கமாட்டார். கிடைக்கப் பெற்ற அதிகாரத்தை இணக்க அரசியல் என்ற தனது வெளிப்படையான முயற்சிகளினூடாக அரசுடன் இணைந்து அழிவின் சிதைவிலிருந்து மக்களை மெல்ல மீட்டெடுத்து வருகின்றார்.

யுத்தத்தின்போது மக்களின் பாதுகாப்புத் தொடர்பில் அரசுடன் அடிக்கடி தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியும் பட்டினியும் மக்களை பழிவாங்கிவிடக்கூடாது என்பதற்காக அவர்களுக்கு உணவுப் பொருட்களை கிடைக்கச் செய்வதிலும் பெரும் பங்களிப்பைச் செய்திருக்கின்றார்.

இப்போதும் அழிந்த பிரதேசங்களின் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு ஆகியவற்றில் தனது பங்களிப்பை செய்துவருகின்றார்.

இந்த அப்பாத்துரையார் தமிழ் மக்களின் அவலத்தை தனது தொழிலின் மூலதனமாக்கி வாழ்பவர் என்ற குற்றச்சாட்டை தமிழ் மக்களிடம் இப்போதும் கேட்கலாம். இதுதவிர இதுவரை தமிழ் மக்களுக்காக ஒன்றையும் செய்யவில்லை. சுயமரியாதை உணர்வு இருந்தால் அமைச்சரை நோக்கி அப்படிக் கேட்பதற்கு முன்னர் அவருக்கே கூச்சமாக இருந்திருக்க வேண்டும்.

**◉ என்ன சிந்தியா! பல்கலைக்கழக மாணவர்களின் பிரச்சினை இப்படி பூதாகரமாகிவிட்டதே?**

வ.சைந்தவி, திருநெல்வேலி.

இந்தக் கேள்வியை என்னிடம் கேட்பதற்கு முன்னர் மாணவர்களை தூண்டிவிட்டவர்களிடமும் அதை அரசியலாக்கி இலாபம் தேடியவர்களிடமும் கேட்க வேண்டும். பல்கலைக்கழகம். மாணவர்கள் என்ற பாதுகாப்பு இவற்றை தீயசக்திகளின் தூண்டுதலுக்கு எடுபட்டு துஷ்பிரயோகம் செய்துவிடக்கூடாது என்று நாம் கூறினால் நமக்கு தமிழ்த் தேசிய உணர்வு இல்லை என்று கூறுவார்கள். நமக்கு ஏன் வம்பு.

**◉ சிந்தியா! மீன் மழை பெய்கின்றது, சிவப்பு மழை பெய்கின்றது, வானிலிருந்து கற்கள் விழுகின்றது இவற்றைப் பார்க்கும்போது, உலகம் அழிந்துவிடுமோ என்று அச்சம் வருகின்றது. உலகம் அழியுமா?**

க.சிந்துஜா, அம்பாறை.

உலகம் அழியாது என்று விஞ்ஞானம் கூறுகின்றது. ஒருவேளை உலகம் அழிவதாக இருந்தாலும் அதை யாராலும் தடுத்துவிட முடியாது. ஆகவே வீண் அச்சம் எதற்கு? இருக்கும்வரை மகிழ்ச்சியாக வாழ்ந்துவிட்டு விடைபெறுவோம்.

**◉ சிந்தியா! இந்திய அணித்தலைவர் டோனியை நீக்க வேண்டும் என்று கூறப்படுகிறது?**

பா.சிவாகரன், காலி

ஒரு போட்டியில் வெற்றி பெற்றால் தூக்கி வைத்துக் கொண்டாடுவதும் அதேபோன்று ஒரு போட்டியில் தோற்றவுடன் வீட்டுக்குக் கல்லால் எறிவதும் இந்திய கிரிக்கெட்டுக்கு ஒன்றும் புதிய விடயமல்ல.

இப்போதும் சொந்த மண்ணில் இங்கிலாந்தைப் புரட்டி எடுப்பார்கள் என்று பார்த்திருந்த இந்திய ரசிகர்களுக்கு இங்கிலாந்து வீரர்களின் நேர்த்தியான ஆட்டம் ஏமாற்றத்தை அளித்துள்ளது. அதன் வெளிப்பாடுகள்தான் இவ்வாறான கூக்குரல்கள்.

உண்மையில் ஒரு தொடர் தோல்வியை வைத்துக்கொண்டு அணித்தலைவரை மாற்றுவது நியாயமல்ல என்பதுடன் முழு அணியையும் சொதப்பலான ஆட்டத்துக்கு. தனித்து ஒருவர் மீது பழிசுமத்துவதையும் ஏற்றுக் கொள்ள முடியாது.

**◉ சிந்தியா! 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஆதரிப்போர் பிரிவினைவாத சக்திகளின் நுழைவுகள் என்று ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது?**

மா.லொசியா, சாவகச்சேரி.

13 ஆவது திருத்தச் சட்டம் என்ற வார்த்தையின் உண்மை விளக்கம் தெரியாமல் கருத்துக்கூறுகின்ற சிறுபிள்ளைத் தனமாகவே இதைப் பார்க்கவேண்டும்.

குறித்த திருத்தச்சட்டமானது இலங்கை அரசியல் அமைப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கின்ற ஒரு சமாச்சாரம். இதை விளங்கிக் கொள்ளாமல் தூற்றுபவர்களின் அரசியல் அறிவு கேள்விக்கு உட்படுத்தப்படவேண்டியது.

**◉ சிந்தியா! சிம்புவின் போடா போடி என்ன சொல்கிறது?**

கா.ஆதர்ஷா, மொனறாகலை.

லண்டன் நகரில் நாகரிகத்தில் திளைத்திருக்கும் நாயகனுக்கும் மேற்கத்தைய நடனத்தில் சாதிக்க வேண்டும் என்ற வெறியுடன் நாயகிக்கும் காதல் மலர்கிறது .

நாயகனான சிம்புவுக்கு நாயகி வரலட்சுமி நடனவகுப்பில் ஏனைய ஆண்களுடன் சகஜமாகப் பழகுவதும் மேற்கத்தைய கலாசாரத்துடன் சல்லாபிப்பதும் எரிச்சலை உண்டுபண்ணுகிறது. இதுவே இவர்களின் காதலில் விரிசலை உண்டுபண்ணுகிறது. ஆனால் காதல் பிரியவிடாமல் தவிக்க வைக்கிறது.

முடிவை நோக்கி சுவாரசியமாகவும் விறுவிறுப்பாகவும் கதையை நகர்த்தி இருக்கிறார் இயக்குநர்.

பஞ்ச் வசனங்கள், வீணான அலட்டல்கள் ஏதும் இல்லாமல் மென்மையான நடிப்பில் கலக்கியிருக்கிறார் சிம்பு. முதற் படத்திலேயே வரலட்சுமி ஜெலிக்கிறார்.

ஆதர்ஷா! தொடர்ந்து மீதியையும் நானே சொன்னால் தயாரிப்பாளர்கள் கோபித்துக் கொள்வார்கள். மீதியை நீங்களே பார்த்து ரசியுங்கள்.



## (08 ஆம் பக்கத் தொடர்ச்சி...) கலாசார யுத்தம்...

சர்மிளாவின் நலன் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக அதற்காக பொறுப்புள்ள தேசிய மற்றும் மாகாணரீதியாகவுள்ள அரசாங்க அமைப்புகளுக்கு அழைப்புவிடுக்கிறோம்.

அவ்வாறே சர்மிளாவும் அவரது குடும்பத்தாரும் இதற்கு மேலும் அச்சுறுத்தல்களுக்கு இலக்காகாமல் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சமூகத் தலைவர்கள், குறிப்பாக முஸ்லிம் சமூகத்தில் உள்ளவர்களிடம் கேட்டுக்கொள்கிறோம்.

அவ்வாறே பெண்களின் உடம்பை போகப்பொருளாக மாற்றுவதற்கான சட்டத் திருத்தங்கள் ஏற்படுத்தக் கோருவதை தவிர்க்குமாறு மாகாண சபை போன்ற பொறுப்பு வாய்ந்த அதிகார சபைகளிடம் கேட்டுக் கொள்ள விரும்புகிறோம். என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அநாகரிகத்துக்கான அங்கீகாரம் வேண்டுமா?

மட்டக்களப்பு மாவட்ட ஜம்மிய்யத்துல் உலமா கடும் கண்டனம்.!

"விபச்சாரம் ஹறாமானது (தடுக்கப்பட்டது) என்று புனித திருக்குர் ஆனும் அல் ஹதீஸ் எனப்படுகின்ற இறைதூதர் நபிகள் பெருமானாரின் வாழ்க்கை வழிமுறையும் நமக்கு ஆதாரங்களாக இருக்கும் போது ஒரு முஸ்லிம் பெண்ணாக அறியப்பட்ட இந்தப் பெண் ஸர்மிலா ஸெய்யித், விபச்சாரத்தை சட்டபூர்வமான தாக்கவேண்டுமென்று கூறியிருப்பதன்மூலம் பாரதூரமான குற்றச் செயல் ஒன்றைப் புரிந்துள்ளார் என்று கருதமுடியும்."

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட ஜம்மியத்துல் உலமா சபையின் தலைவர் மௌலவி எஸ்.எம். அலியார் பலாஹி விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

அதில் மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது: இஸ்லாத்தில் தடுக்கப்பட்ட ஒரு விடயத்தை அங்கீகரிக்கப்பட்டதாக ஆக்குவது இறை நிராகரிப்பை ஏற்படுத்தும் என்பதால் இந்தப் பெண்தான் இஸ்லாத்தில் இருந்துகொண்டு கூறியுள்ள விபச்சாரத்தை சட்ட பூர்வமாக்கினால் அது பெண்களுக்கு அதிக நன்மைகளைத் தரும் என்ற கருத்தை உடனடியாக வாபஸ் பெற்றுக்கொள்வதோடுதான் கூறிய கருத்து இஸ்லாத்தின் அடிப்படையிலும் பொதுவாகவும் பிழையான வழிநடத்தல்களைத் தூண்டக்கூடியது என்பதால் அதனை மனதார ஏற்றுக்கொண்டு பாவ மன்னிப்பும் கோரவேண்டும்.

இந்தப் பெண் பிபிசி தமிழோசை உலக வானொலியில் பகிரங்கமாக கூறியிருக்கின்ற விடயம் முஸ்லிம்கள் அனைவருக்கும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இஸ்லாம் எனும் தளத்தில் இருந்துகொண்டு தான் நினைத்த மாத்திரத்தில் விரும்பியதையெல்லாம் கருத்தாக முன்வைப்பதை இவர் கண்டிப்பாகத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்ட ஜம்மிய்யத்துல் உலமாவின் கண்டனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவசியமும் அவசரமுமான பணி...

இலங்கைப் பெண்களை இழிநிலைக்கு தள்ளாமல் கண்ணியமாக வாழவைக்கும் தீர்வை நோக்கி.

இலங்கையில், குறிப்பாக சுற்றுலாத்துறை விருத்தியடைந்த பிரதேசங்களில் விபச்சாரத் தொழில் அதிகளவில் இடம்பெற்று வருவதும் அங்கு விபச்சாரச் தொழிலில் ஈடுபடும் பெண்கள் தரகர்களிடமிருந்தும் தமது வாடிக்கையாளர்களிடமிருந்தும் பல்வேறு துன்பங்களுக்கு ஆளாக்கப்படுவதும் நடந்துதான் வருகின்றது.

எனவே இந்த விபச்சாரத்தை மையமாகக் கொண்ட பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வேண்டிய பாரிய பொறுப்பு அரசுக்கும் சமூகநல ஆர்வலர்களுக்கும் உள்ளது.

இலங்கையில் விபச்சாரம் சட்டரீதியாக அங்கீகரிக்கப்படல் வேண்டும் என்ற கோரிக்கை அது இலங்கை வாழ் விபச்சாரிகளின் பிரச்சினைக்கான ஒரு தீர்வாகவே பிபிசி யில் முன்வைக்கப்பட்டது.

மத ஒதுக்கல் கொள்கைகளைக் கடைப்பிடிக்கின்ற மேற்குலக நாடுகளில் இவ்வாறுதான் விபச்சாரிகளின் பிரச்சினை அணுகப்படுகிறது.

ஆனால் இத்தகைய தீர்வுகள் முற்றிலும் தவறானவை, அத்தோடு பெரும் ஆபத்தானவை என்பதை இலங்கையர்களாகிய நாம் புரிந்து கொள்ளல் வேண்டும்.

எமது சமூகத்தில் காணப்படும் ஆரோக்கியமான அனைத்து சமூக ஒழுக்க அடிப்படைகளையும் இத்தகைய தீர்வுகளும் தீர்வுக்கான முயற்சிகளும் தகர்த்தெறியக் கூடியவை.

ஆகவே இத்தகைய தீர்வுக்கான அரைகுறை மதியீன முயற்சிகளையும் அவற்றுக்கான யோசனைகளையும் அறிவார்ந்தரீதியில் வன்மையாக எதிர்க்க வேண்டிய கடப்பாடு இலங்கையில் வாழும் அனைத்து சமூகத்தாருக்கும் உண்டு.

விபச்சாரத்தை மையமாகக் கொண்ட பிரச்சினைக்கான தீர்வு என்பது ஒரு சீரான சமூகக் கட்டமைப்பை ஏற்படுத்துவதாகத்தான் அமையவேண்டும். இந்தக் கட்டமைப்பு விபச்சாரிகளுக்கும் அவர்களது வாடிக்கையாளர்களுக்கும் தரகர்மார்களுக்கும் எதிரான கடுமையான சட்டங்களை இயற்றி அவை இறுக்கமான முறையில் அமுல்செய்வது உட்பட பல்வேறு வேலைத்திட்டங்களை மேற்கொள்ளும் வழிவகைகளுக்கு உதவிகரமாக அமையவும் வேண்டும்.

இவ்வாறு செய்வதன்மூலமாக மாத்திரம்தான் பெண்களின் உரிமைகளையும் அவர்களின் கண்ணியத்தையும் பாதுகாக்க முடியும். அத்துடன் ஒரு ஆரோக்கியமான சமூகத்தையும் கட்டி எழுப்பவும் முடியும்.

மத ஒதுக்கல் கொள்கையைக் கடைப்பிடிக்கும் மேற்குலகை உதாரணமாகப் பின்பற்றி நமது நாடும் விபச்சாரத்தை சட்டரீதியாக அங்கீகரிக்குமானால் எமது பெண்களும் மேற்குலகப் பெண்களைப் போல் ஒரு இழிநிலைக்குத் தள்ளப்படுவார்கள். பெண்கள் ஆத்மா இல்லாத ஒரு போகப்பொருளாகவும் வெறும் நுகர்வுப்பொருளாகவும் மாற்றப்படுவார்கள்.

இலண்டன், பாரிஸ் போன்ற இடங்களில் இடம்பெறுவது போன்று பெண்களைப் பாலியல் அடிமைகளாக மாற்றும் ஒரு பெண் விபச்சாரச் சந்தையாக இலங்கை மாற்றப்பட்டு அதன்மூலமாக கேவலமான ஒரு அநாகரிக மனித வாழ்க்கை முறை இடம்பெற வழியேற்படும்.

விபச்சாரப் பிரச்சினை மாத்திரமின்றி எல்லாவிதமான மனிதப் பிரச்சினைகளுக்குமான முழுமையான தீர்வுகளை நோக்கிய ஒரு அவசியமும் அவசரமுமான கட்டத்திற்குள் நாம் வலிந்திழுக்கப்பட்டுள்ளோம் என்பதை நாம் அனைவரும் மத சமூக வேறுபாடுகளை மறந்து, பொது எதிரியைப் புரிந்துகொண்டு செயற்படவேண்டும்.

இலங்கை மாதாவின் அனைத்துப் புத்திரர்களும், புத்திரிகளும் கருத்தொருமித்து இணைந்து இலங்கை மக்களின் அரசியல் சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கான ஒரே தீர்வைத் தேட வேண்டியுள்ளது. இந்த மகோன்னத பணியை நாம் வாழும் இலங்கைச் சமூகத்துக்குத் தெளிவு படுத்த வேண்டிய பொறுப்பும் கடமையும் நம் எல்லாத் தரப்பினருக்கும் உள்ளது.

## (06 ஆம் பக்கத் தொடர்ச்சி...) பிறந்த நாளில்...

ரசிகர்களை சந்தித்துப் பேசிய போது. அவர்கள் வாழ்த்துகளை ஏற்றுக்கொண்டபோது கிடைத்த சந்தோஷம், அந்த வலியைத் தீர்த்தது. எல்லாம் ஆண்டவன் செயல்தான்.

சத்யநாராயணாவை நான் மன்றத்தை விட்டு ஒதுக்கி வைத்து விட்டேன் என்றெல்லாம் சொன்னார்கள். அவர் இவ்வளவு நாட்கள் ஓய்வெடுத்தார். காரணம், உடல் நிலை சரியில்லை. அவர் வந்தால் தான் ரசிகர்களை கட்டுப்பாடாக வைத்திருக்க முடியும் என்று அவரை வரவழைத்தேன்.

உடம்பு சரியில்லாமல் இருந்த போது. நிறைய விஷயங்களை, டாக்டர்களின் ஆலோசனைப்படி என்னிடம் சொல்லாமல் மறைத்து விட்டார்கள்.

பிறகு சென்னைக்கு வந்தவுடன் எல்லா நியூஸ் பேப்பர்களையும், பேப்பர் கட்டிங்குகளையும் பார்த்தேன். ரசிகர்கள் நான் நலம்பெற வேண்டும் என்று கோயில், கோயிலாகச் சென்று வேண்டியதையும், பிரார்த்தனை செய்ததையும் படித்து தெரிந்துகொண்டேன்.

அவர்கள் என்மீது கொண்ட இந்த அன்புக்கு எப்படி ரியாக்ட் பண்றது என்று தெரியவில்லை. இங்கே பேசிய ராதாரவி. நான் நலம்பெற ஒரு வாரம் விரதம் இருந்ததாக சொன்னார். அதற்கு என்ன சொல்வதென்று எனக்கு தெரியவில்லை.

சந்திரமுகிக்கு பிறகு சிவாஜி. அதற்குப் பிறகு எந்திரன் படத்தில் நடித்தேன். வேட்டையன் கரக்டரும், மொட்டை பாஸ் கேரக்டரும் ரசிகர்களிடம் நல்ல வரவேற்பு பெற்றதால், அடுத்து உருவாக்க இருந்த ராணா படத்தில் வில்லனாக நடிக்க முடிவு செய்தேன். அப்போது எனக்கு திடீரென்று உடல்நிலை சரியில்லாமல் போனது.

உடனே மருத்துவமனையில் சேர்ந்தால், தேவையில்லாத வதந்திகள் வரும் என்று தள்ளிப் போட்டுக்கொண்டே வந்ததால் ஏற்பட்ட விளைவு இது.

நான் கண்டக்டராக இருந்த போது, நிறைய மது அருந்தியதுண்டு. அப்போது சில நண்பர்களின் தூண்டுதலால் இது நடந்தது. சினிமாவில் நடிக்க வந்த பிறகு நல்ல சரக்கு குடித்தேன். பிறகு இடைவிடாத சூட்டிங்கில் கடுமையாக உழைத்ததால், மன உளைச்சல் ஏற்பட்டது. அப்போது நடந்தது பற்றியும் ரசிகர்களுக்கு தெரியும். பிறகு லதாவை திருமணம் செய்தேன். மது அருந்துவதை குறைத்தேன். யோகா, உடற்பயிற்சி என என் வாழ்க்கையை மாற்றி அமைத்துக் கொண்டேன்.

ஆனால், அளவுக்கதிகமாக சிகரெட் பிடித்தேன். அதனால் வந்த வினைதான், எனக்கு உடல்நிலை சரியில்லாமல் போனது.

நுரையீரல் பாதிப்பை தொடர்ந்து கிட்னியில் பிரச்சினை ஏற்பட்டது. முதலில் சென்னையிலும், பிறகு சிங்கப்பூரிலும் சிகிச்சை பெற்றேன். இந்த நேரத்தில் ரசிகர்களிடம் நான் கேட்டுக்கொள்வது இது தான். தயவுசெய்து சிகரெட் பிடிக்காதீர்கள். அதை இன்றே, இப்போதே விட்டுவிடுங்கள்.

தொடர்ந்து நான் மருந்துகளும், மாத்திரைகளும் எடுத்துக்கொண்டதால், சில மாதங்களாக உடம்பு வீக் ஆகிக் கொண்டே வந்தது. உடனே மருத்துவ முறையை மாற்றினேன். இப்போது சொல்கிறேன். கடந்த ஓரிரு மாதங்களாக ரொம்ப நன்றாக இருக்கிறேன். டாக்டர்களே கூட, இது ஒரு மிராக்கிள் என்று சொல்லி ஆச்சரியப் பட்டார்கள்.

நான் உடல்நிலை தேறி வந்ததற்கு முக்கியமான காரணம், ரசிகர்களின் அன்பும், பிரார்த்தனையும்தான். என் ரசிகர்களாகிய நீங்கள் முதலில் உங்கள் தாய், தந்தையரை கவனியுங்கள். நமக்கு நம் வீடுதான் சொர்க்கம். பெற்றோரை வணங்குங்கள். அவர்களின் காலில் விழுந்து வணங்கி, அவர்களுடைய ஆசிகளைப் பெறுங்கள். எனது பிறந்தநாளை, உங்கள் பெற்றோரை வணங்கும் நாளாக நினைத்தால் அதுவே எனக்குப் போதும் இவ்வாறு ரஜினி பேசினார்.


தினமுரசு நாளிதழில்

வே. அர்ச்சுணன் எழுதும்

விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள்

விறுவிறுப்பான தொடர் வெளிவருகின்றது

வாங்கிப் படியுங்கள்...! 10/=



நிருபித்துக் கொண்டிருக்கும் மலையாள மாந்திரீகம்



சித்தக் கோளாறு, தோல் வியாதி, ரோக பயம், ஸ்திரி சாபம், செய்வினை தோஷங்கள், திருமணத்தடை, மாங்கல்ய தோஷம் உடையவர்கள், புத்திரதோஷம் உடையவர்கள், வீண் நஷ்டம் - கஷ்டம் வாழ்வா சாவா என்று சிந்திப்பவர்களுக்கு நஞ் சருந்தாமல் பிரச்சினைதீர, முறிந்த காதல் ஒன்றுசேர, கணவன் - மனைவி பிணக்குத் தீர, காதல் கைகூட, சர்வ கஷ்ட நஷ்ட துன்பங்களை விலக்கி சுகமாக வாழ, ஓடிப்போனவர்கள் தேடிவர, பெற்றோர் விருப்பம் இல்லாத திருமணம் விரும்பி நடக்க, நெஞ்சுவலி, நெஞ்சு எரிவு, மார்புவலி, உடல் பீடை நீக்கி ஐஸ்வரியம் கிட்ட, திருமணத்தடை தரித்திரியம், கல்வி சித்தம் கிடைக்க, காதலர்கள் நினைத்ததை சாதிக்க, ராகு திசை, ராகு புத்தி, கேது திசை கேது புத்தியால் ஏற்படும் சகல தோஷங்களை நீக்கி சர்பாதி தோஷம், பூர்வ ஜென்ம சாபங்களை நீக்கி, துர்சொப்பனம், செய்வினை தோஷம் நீக்கி, குலதெய்வ அருள்கிட்ட, மேலதிகாரிகளின் தொல்லை நீங்க, வெளிநாட்டு பிரயாணத் தடை நீங்க, ஆண் - பெண் உடலுறவு வீரிய குறைவுகள் தீர, சனிபுத்தி சனித்திசை தோஷம் நீங்க, ஆயுள் ஆரோக்கியம் பெற்று தனவஸ்து கிட்ட இவைகளில் இருந்து சித்தி கிட்ட, என்னைச் சந்திக்கலாம். வெளிநாட்டவருக்கு 24 மணித்தியால சேவையுண்டு.

அருள்ஞான சித்தர், துர்க்கைதாசன், தேசபந்து, பேராசிரியர், கலாநிதி,
திரு. P.K.சாமி (J.D.G.A.N) J.P ஐயா SRI DURGADEVI MANTHIRIKA UTCHADA PEEDAM. No.23, MAYFILD ROAD, KOTAHENA, COLOMBO -13.
நுவரெலியா கிளை :- No.33, daily Fair Complex. 052 - 2222508
தொலைபேசி இலக்கம்: - 011 - 2470615, 011 - 2342463, 011 - 2342464
FAX :- 011 - 2344831 E-MAIL:- drpksamy@sltnet.lk


## (08 ஆம் பக்கத் தொடர்ச்சி...) மட்டக்களப்பில் அதிகரிக்கும்...

நோயாளிகளையும் அவர்களது சுற்றாடலையும் பரிசோதித்து விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றோம். கிராமத்தில், ஆசிரியர்கள் மாணவர்களிடத்தில், வெளிக்களப் பணிகளில் ஈடுபடும் அரச அலுவலர்களுக்கு விழிப்புணர்வு என்று தருகின்றோம்.

இந்த நோய் துரோகிகளுக்கு, பாபம் செய்தவர்களுக்கு சாபக் கேடானவர்களுக்கு, சபிக்கப்பட்டவர்களுக்குத்தான் வரும் என்ற ஒரு கருத்து சமுதாயத்தினரிடையே வேரூன்றி இருந்துவந்துள்ளது. இதனால் தாங்கள் சமுதாயத்திலிருந்து ஓரங்கட்டப்படலாம் அல்லது இழிவுபடுத்தப்படலாம் என்பதால் இந்த நோயின் குணங்குறிகள் உள்ளவர்கள் தங்களை வெளிக்காட்டிக் கொள்ள விரும்புவதில்லை.

ஆனால் இது இப்பொழுது பக்ரீரியாவால் தொற்றக் கூடிய ஒரு நோய் என்ற விழிப்புணர்வு மக்களிடம் படிப்படியாக ஏற்பட்டுவருவதால் மக்கள் இந்த நோயாளிகளை ஓரளவு அங்கீகரிக்கின்றனர்.

சாதாரணமாக ஐந்தாம் தரத்தில் கல்வி கற்கும் மாணவியோ அல்லது மாணவனோ தொழுநோய்க்கான அறிகுறிகள் தன்னிடம் உள்ளதா என தன்னையும் பரிசோதித்து வீட்டிலுள்ளோரையும் சுற்றாடலில் உள்ளோரையும் பரிசோதிக்குமளவுக்கு நாம் விழிப் புணர்வை ஊட்டிவருகின்றோம். மட்டக்களப்பு மாவட்டத்தில் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களில் செங்கலடியில் இருந்து ஆரையம்பதி வரையுமுள்ள கடலுக்கும் வாவிக்கும் இடைப்பட்ட பகுதியில் கரையோர சமுதாய மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளில்தான் தொழுநோய் அதிகமாக இருப்பதாக மனோகரன் தெரிவிக்கிறார்.

அதேவேளை கதிரவெளியிலிருந்து கல்லாறு மண்டூர் கொக்கட்டிச் சோலை வரையும் தொழுநோயாளர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார். இந்த ஆண்டில் அதிகமான விழிப்புணர்வுச் செயற்பாடுகளில் நாம் ஈடுபட்டுள்ளோம். வலயக்கல்வி, கோட்டக் கல்வி மட்டத்தில் உள்ள விஞ்ஞான ஆசிரியர்களுக்கும் கிராம மக்களுக்கும் 24 விழிப்புணர்வுச் செயற்பாடுகள் நடத்தப்பட்டுள்ளன.

பிரதேச செயலக அதிகாரிகள் மற்றும் சுகாதாரப் பகுதியினருக்கும் 9 தோல் கிளினிக் கருத்தரங்குகளும் பயிற்சிகளும் செய்து முடிக்கப்பட்டிருக்கின்றன. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ்.சதுர்முகம், பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.எல்.எப். றகுமான், வைத்தியர் காயத்திரி கௌரிபாலன், 14 சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவுகளில் தொழுநோய் விஷேட வைத்திய நிபுணர் என். தமிழ்வண்ணன் தலைமையிலான வைத்தியர்கள் பாத்திமா ஸபீனா, சுட்சினா சுசில், குளோடியா ரதி உள்ளிட்ட தோல் நோய் வைத்திய நிபுணர் குழுவினர் இந்த வைத்திய முகாம்களை நடத்தினர்.

குழுவினர் என எல்லோருமாக இணைந்து இந்த தொழுநொய்த் தடுப்புப் பணிகளுக்கு உதவிவருகின்றோம். 2822 மாணவர்களுக்கும் விழிப்புணர்வுப் பயிற்சியளிக்கப்பட்டிருக்கின்றது என்கிறார் மனோகரன். சகல தரப்பினரும் தொழுநோய் பற்றிய விழிப்புணர்வை அடைதல், நோய் பற்றி இருக்கும் மூட நம்பிக்கையை நீக்குதல். ஆரம்ப நிலையிலேயே நோயை இனமறிந்து சிகிச்சை பெறல், சிகிச்சையை இடைவிடாது பொருத்தமான காலம் வரை பெற்று முழுமையாக குணமடைதல், நோயாளர்களை வைத்தியசேவை பெற ஊக்கப்படுத்தல், இந்த நோய்த் தாக்கத்தால் இன்னுமொருவர் புதிதாக அங்கவீனமடைவதை முற்றாக தடுத்தல், தொடர்ச்சியாக சகல தரப்பினரும் நோய்த்தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடல், தற்போது சமூகத்தில் உள்ள நோயினால் அங்கவீனமடைந்தவர்களுக்கு உதவுதல், பராமரித்தல் போன்ற நோக்கங்களை அடிப்படையாக வைத்தே இந்த தொழுநோய் விழிப்புணர்வுப் பயிற்சிகள் இடம் பெற்றுவருவதாக திரு. மனோகரன் மேலும் சொல்கிறார்.

கடந்த மூன்று வருடகாலமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் புதிதாக இனங்காணப்பட்ட தொழுநோயாளர்களின் எண்ணிக்கை சுமார் 130-140 என்ற மட்டத்திலேயே இருந்துவருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

# காதில பூ கந்தசாமி




## அன்பா இருங்க அம்பா இராதீங்க!

**கா.பூ:-** பிறந்த நாள் நாயகனே வணக்கம். பாரெங்கும் பரந்திருக்கும் ரசிகர்களின் இதய நாயகனே உங்களுக்குப் பிறந்த நாள் வாழ்த்துக்கள்.

**ரஜனி:-** ஜா...ஜா... ஜா... தங்கியூ மிஸ்ரர் கந்தசாமி. எப்பிடி இருக்கிறீங்க? நம்மட ஈழத்தமிழ் உறவுகள் எல்லாம் எப்பிடி இருக்கிறாங்க?

**கா.பூ:-** அவர்கள் நன்றாகவே இருக்கின்றார்கள். உங்கள் அடுத்த படத்தை வீட்டிலே குடும்பத்தோடு பார்த்து மகிழும் இனிய நாளை எதிர்பார்த்திருக்கிறார்கள்.

**ரஜனி:-** ஓ! இஸ்சிட் வெரி சூன்... கோச்சடையானைப் பார்க்க முடியும். தென், ப்ரெப்ளம் எல்லாம் எப்பிடி இருக்கு?

**கா.பூ:-** எல்லாம் முடிஞ்சு ஒரு சுமூகமான சூழல் உருவாகிக் கொண்டிருக்கிற நேரத்தில சில சுயநலப் பிசாசுகள் குழப்பியடிச்சிருக்குதுகள். திரும்பவும் சோதனை, தேடுதல், விசாரணை எண்டு நிலைமை இருக்குது.

**ரஜனி:-** ஓ! ஐ சே..... யு நோ வன் திங். நம்மட பொலிட்ரிசியன்ஸ் எல்லாமே அந்த மாதிரித்தான். தமிழ் நாடா இருக்கட்டும், சிறிலங்கனா இருக்கட்டும் தாங்க பொலிட்டிக்ஸ் பண்ணுறதுக்காக அப்பாவி ஜனங்களை மிஸ் யூஸ் பண்ணிக் கொண்டிருக்கிறாங்க.

அந்த ஆண்டவன் இதெல்லாத்தையும் பாத்துக்கொண்டு இருக்கிறான். இதுகளுக்கான தண்டனையை நிச்சயமாக இவங்கள் அனுபவிப்பாங்க.

**கா.பூ:-** சிறிலங்கன் நிலவரம் இருக்கட்டும் தமிழக நிலவரம் எப்பிடி இருக்குது?

**ரஜனி:-** கரை வேட்டி கட்டிய கலைஞரையும் கதர் வேட்டி கட்டிய தம்பி விஜயையும் (விஜயகாந்த்) ஓரங்கட்டி சேலைகட்டி அந்த அம்மா ஆட்சி நடத்திட்டி ருக்கிறாங்க.

இப்ப முன்னரைக் காட்டிலும் மோசமாக நாடு இருள்ள இருக்கு. இதுகளுக்கெல்லாம் இந்த ஜனங்கள் அடுத்த எலெக்ஷனில நல்ல பதிலடி கொடுப்பாங்க.

**கா.பூ:-** அப்பிடியெண்டா தமிழ் நாட்டில மோசமான ஆட்சி நடக்கிறதாச் சொல்லுறீங்களா?

**ரஜனி:-** ஜெஸ் நோ டவுட்.

அதுக்குக் காரணம் அந்த அம்மாவுக்கு அடக்கம் இல்லை. பொண்ணுங்க எண்டா அடக்கமா இருக்கவேணும். அடக்கமில்லாம ஊதாரித்தனமா பொண்ணுங்க நடந்துகிட்டா எந்தக் காரியமும் இப்பிடித்தான் முடியும். இத அந்த அம்மா புரிஞ்சுக்கனும்.

**கா.பூ:-** உங்கள் அடுத்த திட்டம் ?

**ரஜனி:-** இமயமலை போறன்.

**கா.பூ:-** பின்னர்?

**ரஜனி:-** அங்கிருந்து திரும்பி வர்றது.

**கா.பூ:-** அடுத்தது?

**ரஜனி:-** ஹ...ஹ...ஹ... ( வானத்தைப் பார்க்கிறார்)

எதுவுமே நம்மட் கையில இல்லை. ஆண்டவன் சொல்லுறான் ரஜனி செய்யிறான். அவ்வளவுதான்.

**கா.பூ:-** இறுதியாக உங்கட பிறந்தநாள் செய்தியாக சிறிலங்காவில உள்ள மக்களுக்கு என்ன சொல்ல வர்றீங்க?

**ரஜனி:-** கண்ணுங்களா? அரசியல் தலைவர்கள்மேல அன்பாயிருங்க. ஆனா அவங்க அம்பா இருக்காதீங்க.

அவங்களோடு நல்லா இருங்க.

அவங்களோட கல்லாயிருக்காதீங்க!

அவங்களோடு சொல்லாடுறதோட நிறுத்திக்குங்க. அவங்கட கையில இருக்கிற பொல்லாயிராதீங்க!.. ஹவ் இஸ் இட்!



யாவும் கலப்படமற்ற பொய்

# அச்சுக் கலையின் தந்தை




இன்றைய நவீன யுகத்தில் இத்தனையும் இயந்திரங்களின் உதவியால் நடைபெறுகின்றன. அச்சடிக்கும் பெரிய பெரிய இயந்திரங்கள் மின்சாரத்தினால் இயங்குகின்றன.

தனித்தனியான காகிதங்களில்லை. பல மைல் நீளமுள்ள காகித உருளையிலிருந்து காகிதம் மின்னல் வேகத்தில் இயந்திரத்தினுள் புகுந்து அச்சாகிப் புத்தகமாகவே வெளியே வந்து விழுகிறது. கட்டன் பார்க் வாழ்ந்த காலத்தில் அவரது கண்டு பிடிப்பு மிகப் பெரிய சாதனை. ஒரு புத்தகத்தை இத்தனை துரிதமாகத் தயாரிக்க முடிகிறதே என்று வியந்து போனார்கள்.

கட்டன் பர்க் புத்தகம் அச்சிட ஆரம்பிக்கு முன், மறுபடி தான் பிறந்த இடமான மெயின்ஸ் நகருக்கு வந்தார். அங்கு ஒருவர் அச்சுத்தொழிலை நடத்தப் பெரும்பொருள் கொடுத்து உதவுவதாக முன் வந்தார். அவரது பெயர் ஜான்.ஃபஸ் என்பது. கட்டன்பர்க்கிடம் ஃபஸ்ஸுக்கு ரொம்ப மரியாதைதான். ஆனால் அவர் அச்சுத் தொழிலினால் ஏராளமாகப் பணம் பண்ணலாம் என்ற ஆசையினாலேயே உதவ முன்வந்தார். அச்சுத்தொழிலின் மதிப்பை அவர் உணர்ந்திருந்தார். விரைவில் செயற்பட்டால் வாரிக் கொட்டலாம் என்பது அவர் நம்பிக்கை.

'என்ன புத்தகத்தை முதலில் அடிக்கலாம்? என்று கேட்டார் ஃபஸ்.

'பைபிள்தான்! இத்தனை ஆண்டுகளாக நான் பாடுபட்டதெல்லாம் எல்லா மக்களுக்கும் பைபிள் சுலபமாகக் கிடைக்கச் செய்வதற்காகத்தானே? என்றார் கட்டன் பர்க்.

ஏராளமான தொழிலாளிகள் அமர்த்தப்பட்டார்கள். அச்சுத் தயாரிக்கவும், எழுத்துக்களை வார்க்கவும், அவர்களுக்கெல்லாம் கட்டன்பர்க் எழுத்துக்களை உருவாக்கும் முறையில் பயிற்சி அளித்தார். புத்தகம் லத்தீன் மொழியில் அச்சாக இருந்தது.

புத்தகம் அற்புதமாக அமையவேண்டுமென்பதில் கட்டன் பர்க் கண்ணும் கருத்துமாக இருந்தார். ஒரு கலைஞனின் நோக்கோடு, ஒவ்வொரு பக்கத்தையும் உருவாக்கினார். காலதாமதத்தைப் பற்றிக் கவலைப்படவில்லை. ஒவ்வொரு அத்தியாயத்தின் முதல் எழுத்தையம் கையினால் எழுதி வண்ணம்தீட்ட முடிவு செய்யலானார்.

(தொடரும்...)

# இந்தவாரம் உங்கள் பலன்

(20.12.2012 தொடக்கம் 26.12.2012 வரை)

### மேடம்

பிறரிடம் பணம் கொடுத்து ஏமாற்றம் அடையாமல் இருக்கவும். சகோதர சகோதரி களின் தடைப்பட்ட சுபகாரியங்கள் நடைபெறும். விருந்தினர் வரவால் மன :மகிழ்ச்சி உண்டாகும். அண்டை அயல் வீட்டுக் காரர் களுடன் மிகவும் கவனமாக பேசிப்பழகுதல் நல்லதாகும். உத்தியோகத்தில் இட மாற்றம் ஏற்படும் பெண்களிடம் எச்சரிக்கையாக இருக்கவும். பொருளாதாரம் சுமாராக காணப்படும். பிள்ளைகளின் மருத்துவச் செலவுகளுக்காகப் பொருட்செலவுகள் உண்டாகும். விவசாயம் செய்வோர்கள் விவசாயத்தில் மிகுந்த கவனமுடன் இருத்தல் நல்லது. அரசியல்வாதிகளால் ஆதாயம் இருக்காது. புதிய நண்பர்கள் சேர்க்கையால் மனநிம்மதி அடைவீர்கள்.

### இடபம்

மனைவியின் உடல்நிலையில் பாதிப்புகள் ஏற்பட்டு அவர்களால் மருத்துவச் செலவுகள் உண்டாகும். பூர்வீகச் சொத்துக்களில் இருந்துவந்த பிரச்சினைகள் சற்று குறையும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமண காரியம் கைகூடும். நீண்ட காலமாகப் பிரச்சினைகளில் இருந்துவந்த குடும்ப சொத்துக்கள் கிடைக்கும். பிள்ளைகளால் பொருட்செலவுகள் ஏற்பட்டாலும் அவர்களால் பணவரவு உண்டு. தீர்த்த யாத்திரை சென்று வருவதற்கான ஏற்பாடுகளில் சற்றுக் கால தாமதம் ஏற்படும். வங்கிகள்மூலம் எதிர்பார்த்த கடன் உதவிகள் கிடைக்கச் சற்று கால தாமதம் ஆகலாம். வெளிநாட்டில் வசிப்பவர்கள் தனது தாய் நாட்டிற்குச் சென்றுவர வாய்ப்புகள் உள்ளன.

### மிதுனம்

தாயின் உடல்நிலை பாதிப்பால் மருத்துவச் செலவுகள் உண்டு. பூர்வீகச் சொத்துக்கள் வந்துசேரும். உற்றார் உறவினர்களால் ஆதாயம் இல்லை. தந்தையால் பொருள் வரவு உண்டு. பணவரவு வர இடமுண்டு. முன்கோபத்தை தவிர்ப்பது நல்லதாகும். தந்தை – மகன் உறவில் சிற்சில பிரச்சினைகள் வரலாம். மனைவி வழிச் சொந்தபந்தங்களால் பொருட்செலவு ஏற்படும். கைவிட்டுப் போன பொருட்கள் திரும்பக் கிடைக்கும். விவசாயிகளுக்கு நஷ்டமே ஏற்படும். காதல் சம்பந்தமான செய்தி வந்துசேரும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### கடகம்

கணவன் – மனைவி உறவுகளில் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கி உறவுகள் பலப்படும். புதிய நண்பர்கள் சேர்க்கையால் விபரீதங்களைச் சந்திக்க வாய்ப்பு உள்ளதால் மிகுந்த எச்சரிக் கையுடன் இருக்கவும். உடம்பில் வாதம் வாயு மற்றும் எலும்பு சம்பந்தமான உபாதைகள் வந்துபோகும். சகோதர சகோதரிகளுடன் காரணமில்லாத சச்சரவுகள் வந்துபோகும். கண்களில் கவனமுடன் இருத்தல் நல்லதாகும். விவசாயம் செய்வோர்கள் மிகுந்த கவனமுடன் இருக்கவும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### சிங்கம்

நண்பர்களால் எதிர்பாராத பொருட் செலவுகள் உண்டாகும். தூரத்து யாத்திரை களில் புதிய பெரிய மனிதர்கள் சந்திப்பால் மனநிம்மதி அடைய வாய்ப்பு உள்ளது. மாமன் வழியின் மூலம் சில நன்மைகளை அடைவார்கள். குலதெய்வ வழிபாடு செய்துவருவது நல்லது. பிறருக்காக உழைப்பதில் மனமகிழ்ச்சி அடைவீர்கள். தென்திசையில் இருந்து பெண்களால் எதிர்பாராத நல்ல செய்திகள் வந்துசேரும். கண்களில் கவனம் தேவை. மத போதகர்கள், மீன் முட்டை மாமிசம் போன்ற உணவுப் பொருட்களின் வியாபாரிகள் ஆகியோர்கள் நல்ல இலாபம் பெறுவார்கள். பொதுவாக இது ஒரு நற்பலன் தராத வாரமாகும்.

### கன்னி

வாகனங்கள் மற்றும் வீடுகளைப் பழுது பார்ப்பதன் மூலமாகப் பொருட் செலவுகள் ஏற்படலாம். பழைய கடன்கள் மீண்டும் தொல்லை கொடுக்கும். அடுத்தவர் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மனமகிழ்ச்சி அடைவீர்கள். வீடுகளில் பணம் பொருட்கள் திருட்டுப்போக இருப்பதால் எச்சரிக்கை தேவை. வடதிசையில் இருந்து எதிர் பாராத தனவரத்துகள் உண்டு. மனைவியின் உடல்நிலையில் பாதிப்புகள் ஏற்பட்டு அவர்களால் மருத்துவச் செலவுகள் வந்துசேரும். விருந்தினர் வரவால் மனமகிழ்ச்சி அடைவீர்கள். பொதுவாக இது ஒரு நற்பலன் தராத வாரமாகும்.

### துலாம்

மாணவர்கள் கல்வியில் மிகுந்த கவனமுடன் இருப்பது நல்லது. புதிய கடன்களை வாங்கிப் பழைய கடன்களை அடைப்பதற்காக வெகுமுயற்சிகளை செய்து கடனை அடைப்பீர்கள். வெளிநாடு சென்று வருவதற்கான முயற்சிகளில் வேற்று மதத்தவர்களால் எதிர்பார்த்த ஆதாயங்கள் கிடைக்கும். பெரியவர்களின் நல்லாசிகள் கிடைக்கும். ஒருசிலர் இருப்பிடம் விட்டு வெளியூர் செல்ல வாய்ப்பு உள்ளது. இலைக் கீரை வகைகள், மருந்துப் பொருட்கள், தபால் தந்தித் துறையை சார்ந்தவர்கள். அச்சு இயந்திரசாலைகளை நடத்துபவர்கள், ஆகியோர்கள் நல்ல பலன்களை அடைவார்கள். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

### விருச்சிகம்

மூத்த சகோதரரால் பொருட்செலவுகள் ஏற்படும். கணவன் – மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். புதிய நண்பர்களைச் சேர்ப்பதைத் தவிர்க்கவும். உடம்பில் வாயு மற்றும் வயிறு சம்பந்தமாகிய தொல்லைகள் வந்துபோகும். காதல் விசயங்களில் மிகுந்த கவனமுடன் இருக்கவும். புதிய வீடு மற்றும் நிலங்கள் வாங்குவீர்கள். அரசியல்வாதிகளால் ஆதாயம் உண்டு. தேவையற்ற மனச்சஞ்சலமும் குழப்பங்களும் குடும்பத்தில் வரக்கூடும். நீண்டதூரப் பயணங்களால் மனநிம்மதி ஏற்படாது. ரேஸ் லாட்டரி போன்றவற்றின் மூலம் எதிர்பாராத தனவரவு உண்டாகும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### தனுசு

தொலைதூரப் பயணங்கள் மூலம் எதிர்பார்த்த காரியங்கள் கைகூடும். தெய்வத் தொண்டுகளைப் பிரியமுடன் செய்வீர்கள். தாய்க்கு இருந்துவந்த நோய்கள் குறைந்து காணப்படும். கணவன் –மனைவி உறவுகளில் இருந்து வந்த பிரச்சினைகள் குறையும். வீடுகளைத் திருத்திக்கட்ட எண்ணுவீர்கள். நெடுநாட்களாக வராத கடன் கொடுத்த பணம் திரும்ப கைவந்துசேரும். உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வரவால் பொருட்செலவுகள் உண்டாகும். உறவினர்கள் மற்றும் நண்பர்களால் எதிர்பாராத ஆதாயங்களும் மனமகிழ்ச்சியும் உண்டாகும். பொதுவாக இது நல்ல வாரம்.

### மகரம்

நீண்டகாலமாக வங்கிகளில் இருந்து எதிர்பார்த்து இருந்த கடன் உதவிகள் கிடைக்க வாய்ப்புகள் உள்ள காலமாகும். விபரீதமான எண்ணங்களை விட்டுக் காரியத்தில் கவனமாய் இருங்கள். சுயதொழில் செய்வதற்கான முயற்சிகளில் சற்றுக்கால தாமதம் ஏற்படலாம். சகோதரர்களால் பொருள் வரவு உண்டாகும். அரசு வேலை மற்றும் உத்தியோக முயற்சிகள் வெற்றி தேடித்தரும். விவசாயம் செய்வோர்கள் கவனமுடன் செயற்படவும். பழைய வழக்குகள் மீண்டும் தொடரலாம். சகோதர சகோதரிகளின் திருமணம் போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகளில் இருந்துவந்த தடைகள் நீங்கித் திருமணம் நடக்க வாய்ப்பு உள்ளது. பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### கும்பம்

உறவினர்களிடம் இருந்து தூரத்து நற்செய்திகளை கேட்பீர்கள். தீராத நாட்பட்ட வழக்குகள் தீர நல்ல முடிவுகள் கிடைக்கும். வெளிநாடு சென்றுவருதல் போன்ற முயற்சிகளில் நல்ல தகவல்களை எதிர்பார்க்கலாம். குடும்பத்தில் திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடக்கும். கதொலை தூரப் பயணங்களில் எதிர்பார்த்த வெற்றிகள் கிடைக்கும். நாட்பட்ட விசா சம்பந்தமான பிரச்சினைகள் தீருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. தொலைதூரப் பயணங்களில் எதிர்பார்த்த வெற்றிகள் கிடைக்கும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### மீனம்

வெளிநாடு சென்றுவருதல் போன்ற முயற்சிகளில் நல்ல தகவல்களை எதிர்பார்க்கலாம். அடுத்தவர்களின் விசயத்தில் தலையிட்டு மன நிம்மதியை இழுக்க வேண்டாம். காதல் விசயங்களில் எதிர்பார்த்திருந்த நல்ல செய்திகள் கிடைக்கக் கூடிய காலமாகும். தொலை தூரப் பயணங்களில் எதிர்பார்த்த வெற்றிகள் கிடைக்கும். காதல் சம்பந்தமான விசயங்களில் எச்சரிக்கை தேவை. காணாமற்போன பொருட்கள் காவல் துறையினர்களின் உதவிகளால் திரும்பக் கிடைக்கும். விவசாயிகள் நல்ல இலாபம் பெறுவர். ஒரு சிலருக்கு புதிய வீடு மற்றும் வாகனம் வாங்க வாய்ப்பு உள்ளது.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)





## புதிய அத்தியாயம்

வங்கதேச கிரிக்கெட் வீரர் சாகிப் அல் ஹசன், விசேஷமான நாளான (12-12-12), அன்று தனது காதலியை மணமுடித்தார். வங்கதேச கிரிக்கெட் வீரர் சாகிப் அல் ஹசன், 25. கடந்த 2006இல் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் காலடி வைத்த இவர், இதுவரை 28 டெஸ்ட் (1835 ரன், 102 விக்.,), 126 ஒருநாள் (3635 ரன், 160 விக்.,), 24 சர்வதேச டுவெண்டி-20' (84 ரன், 27 விக்.,) போட்டிகளில் பங்கேற்றுள்ளார். சிறந்த ஓல்-ரவுண்டரான சாகிப், நேற்று புதிய அத்தியாயத்தை துவக்கினார். உலகமே எதிர்பார்த்து காத்திருந்த விசேஷ நாளான, 12-12-12ல் நீண்டநாள் தோழியை திருமணம் செய்தார். இவர், அமெரிக்காவை சேர்ந்த வங்கதேச வம்சாவளி உம்மி அகமது ஷிசிரை மணமுடித்தார். இவர்களது திருமண நிகழ்ச்சிக்கு நெருங்கிய உறவினர்கள், நண்பர்களுக்கு மட்டும் அழைப்பு விடுக்கப்பட்டது. சமீபத்தில், வங்கதேசம் வெஸ்ட் இண்டீஸ் அணிகள் மோதிய, டுவென்ரி-20 போட்டியின் போது சாகிப், ஷிசிரை வருங்கால மனைவி என சக வீரர்களுக்கு அறிமுகம் செய்தார்.



## ஸ்பெஷல் கோப்பி



பிளாக் ஐவரி என்ற இந்த கோப்பியை தாய்லாந்தில் தயாரிக்கின்றனர். தாய்லாந்தின் சியாங் ராய் மாகாணத்தில் இந்நாட்டுடன் லாவோஸ், மியன்மார் நாட்டு எல்லைகள் சந்திக்கும் இடம் கோல்டன் டிரையாங்கிள். மலைப்பாங்கான பகுதி மூலிகைளுக்கு பிரசித்தி பெற்ற இடம்.

இங்கு இத்தகைய கோப்பி தயாரிப்பதற்காக தனியாக யானைகள் வளர்க்கப்படுகின்றன. அவற்றுக்கு புல், வாழைப்பழம், கரும்பு ஆகியவற்றுடன் கோப்பிக்கொட்டைகளையும் உண்ணக் கொடுக்கின்றனர்.

அந்தக் கோப்பிக் கொட்டைகள் யானையின் வயிற்றில் 15 முதல் 30 மணி நேரம் வரை ஜீரணமாகிறது. அப்போது உணவு நொதித்தல் காரணமாக அந்த கொட்டைகளில் சுவை கூடுகிறது.

பின்னர், யானை சாணியில் செரிக்காமல் வெளியேறியிருக்கும் கோப்பிக் கொட்டைகள் சேகரிக்கப்படுகின்றன. 33 கிலோ கொட்டைகளை யானை உண்டால் ஒரு கிலோ கோப்பி கொட்டை மட்டுமே கிடைக்கும். இவ்வளவு குறைவாக கோப்பி கொட்டைகள் கிடைப்பதால் அதன் விலை மிக அதிகமாகிறது. இந்த கொட்டைகளை வறுத்து, அரைத்து தயாராவதுதான் பிளாக் ஐவரி கோப்பி. இதன் விலை கிலோ 685 யூரோவாகும். இந்த கோப்பி வடக்கு தாய்லாந்து, மாலை தீவு மற்றும் அபுதாபியில் உள்ள நட்சத்திர உணவகங்களில் 1 கப் 30 யூரோவாகும்.



## விநோத சாதனை



ஹொங் கொங்கில் ஒரே நேரத்தில் 300 நாய்களுக்கு பல் துலக்கப்பட்டு புதிய கின்னஸ் சாதனை படைக்கப்பட்டுள்ளது. இதில் பல்வேறு பகுதிகளை சேர்ந்த 312 பேர் கலந்து கொண்டனர்.

இதுகுறித்து ஹில்டா வாங் என்ற பெண் கூறுகையில், எஜமானர்கள் தங்கள் நாய்களின் உணவு மற்றும் அதன் ரோமத்தில் அதிக அக்கறை எடுத்து கொள்கின்றனர். ஆனால் நாய்களின் பற்கள் விஷயத்தில் அவர்கள் கவனம் செலுத்துவதில்லை.

வாரத்திற்கு ஒரு முறையாவது, நாய்களுக்கு பல் துலக்க மறக்கக்கூடாது. நாய்களுக்கு தினமும் பல்துலக்கினால் அதன் சுகாதாரம் மேம்படும் என்று தெரிவித்தார். நாய்களின் பற்களை தூய்மை[illegible] இந்த நிகழ்ச்சி, கின்னஸ் சாதனை [illegible] நான்கு மாதத்திற்கு [illegible] அளிக்க உள்ளது.

## உலக சாதனை...






சிம்பாப்வேயின் ஹராரே பகுதியில் உள்ள விலங்குகள் சரணாலயம் ஒன்றில் உள்ள பெண் சிங்கம் ஒன்று ஒரே பிரசவத்தில் 8 சிங்கக்குட்டிகளை ஈன்று உலக சாதனை நிகழ்த்தியுள்ளது.

சிங்கங்கள் பொதுவாக ஒரே பிரசவத்தில் இரண்டு குட்டிகளையே ஈனும் எனவும், மிகவும் அரிதான சமயங்களில் இந்த எண்ணிக்கை நான்காக இருக்கும் எனவும் தேசிய பூங்கா மற்றும் காட்டு விலங்கு முகாமையாளரான Dr Hillary Madzikanda என்பவர் தெரிவித்துள்ளார்.

## அழகின் அதிசயம்



ஹொலிவூட் நாயகனான டாம் குருஸ் மிஷன் இம்பஸி பில் கோஸ்ட் ப்ரொடோகால் திரைப்படத்தில் அதிரடி அக்ஷன் சண்டைக் காட்சியில் கலக்கியுள்ளார். தற்போது புதிய திரைப்படமான Rock of Ages என்ற படத்தில் டாம் குருஸ் அதிக கவர்ச்சியோடும், அழகோடும் நடித்திருக்கிறார்.

இவர் இவ்வளவு அழகுடன் இருப்பதற்கு காரணம் குருஸ் ஜப்பானிய பாரம்பரிய ஸ்டையிலில் நைட்டிங்கேல் பறவையின் எச்சம், நெல் உமி, தண்ணீர் கலந்த கலவையை கொண்டு பேஷியல் செய்துள்ளாராம் குருஸ்.

## கவனயீனம்!



வீதியில் வைக்கப் பட்டிருந்த அறிவிப்புப் பலகையை கவனிக்காமல் கரைச் செலுத்திய ஒருவர் காருடன் சேர்ந்து ஆற்றுக்குள் பாய்ந்திருக்கின்றார். இதில் வேடிக்கை என்ன வென்றால் குறித்த சாரதியைப் போன்றே கண்களைப் பிடரிக்குள் வைத்துக்கொண்டு சென்ற இன்னொரு சாரதியும் ஏற்கெனவே ஆற்றுக்குள் குதித்திருந்தமைதான். அதிலும் இரண்டாவது கார பாய்ந்து சென்று முதலாவது காரின் மேலேயே அமர்ந்துகொண்டது இரட்டைச் சுவாரசியம். இது நடந்திருப்பது பிரித்தானியாவில் உள்ள ஹேம்பிரிட்ஜ் பகுதியில் உள்ள டக்ஸ்போர்ட் என்னும் இடத்திலாகும். கற்பனையை எங்கேயோ செலுத்திவிட்டு வாகனங்களைச் செலுத்தும் நம்ம சாரதிகளுக்கு இது சமர்ப்பணம்.